# துயர் துடைத்த தூயவன்



**அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா**

அவர்களின்

**உருவச்சிலை திறப்பு விழா நினைவுச்**

**சிறப்பு மலர்- 2016**

# துயர் துடைத்த தூதுவன்

அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா

அவர்களின்

உருவச்சிலை திறப்பு விழா நினைவுச்

சிறப்பு மலர்

2016

## அமரர் சின்னத்தம்பி சிவமகாராசாவின்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்
நமது ஈழநாடு பத்திரிகை நிர்வாக இயக்குனர்

சிவமகாராஜா உருவச்சிலை திறப்புவிழாவினதும்
மலர்க்குழுவினதும் தலைவர்



**திரு.ந.உமாகரன்**

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்

அமரர் சிவமகாராசா அவர்களின் உருவச்சிலைக்கான
அடிக்கல் நாட்டியவர்



**திரு.ச.ஆறுமுகநாதன் அவர்கள்**

தேசகீர்த்தி, லயன், தொழிலதிபர்

## சிவமகாராஜாவின் அன்னையும், பிதாவும்



திரு. வைரமுத்து சின்னத்தம்பி (சாமி) திருமதி சுந்தரம் சின்னத்தம்பி

# அமரர் சிவமகாராசா அவர்களின் உருவச்சிலையும் நினைவு நிலையும்







சிலைவடித்த சிற்பி
**திரு.கலியப்பெருமாள் விஜயன்**
காரைக்கால், இந்தியா

# சிவமகாராசா உருவச்சிலை திறப்புவிழாச் சபையினரும் மலர்க் குழுவும்



திரு.ந.உமாகரன்
தலைவர்



திரு.ச.தனபாலசிங்கம்
உபதலைவர்



திரு.கா.சிவஞானம்
செயலாளர்



திரு.சி.கயிலைமகான்
பொருளாளர்



திரு.க.சுப்பிரமணியம்
உறுப்பினர்



திருமதி பாமதி ஞானேஸ்வரன்
உறுப்பினர்



திரு.வை.சுப்பிரமணியம்
உறுப்பினர்



திரு.வே.சண்முகநாதன்
உறுப்பினர்



திரு.ஆ.சுதன்
உறுப்பினர்



திருமதி அ.ஞானேஸ்வரன்
மலராசிரியர்



பேராசிரியர் க.தேவராஜா
ஆலோசகர்

# பொருளடக்கம்


விழாச்சபை ....................1

வெளியீட்டுரை .................... 2

மலராசிரியர் பார்வையில் .................... 3

**ஆசி உரை**

1. சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள் உள்ளத்திலிருந்து ....................7

2. செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் .................... 8

**வாழ்த்துச் செய்திகள்**

3. கௌரவ நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் (முதலமைச்சர் வடமாகாண சபை) .................... 13

4. கௌரவ திரு.சோ.சேனாதிராசா (பாராளுமன்ற உறுப்பினர் யாழ் மாவட்டம்)....................15

5. பேராசிரியர் கலாநிதி நாகலிங்கம் சண்முகலிங்கன் (முன்னாள் துணைவேந்தர் சமூகவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்).................... 17

6. உயர்திரு. நா. வேதநாயகன் (அரச அதிபர், யாழ்.மாவட்டம்) ....................18

7. உயர்திரு.இ இளங்கோவன் ( வடக்கு மாகாண ஆளுநர் செயலர்)....................19

8. உயர்திரு.க. ஸ்ரீமோகனன் (வலி.வடக்கு பிரதேச செயலர்).................... 20

**வாழ்வியல்**

9. மக்களுக்காக உயிரைக் கொடுத்த தியாகி “ மாமனிதர் சிவமகாராசா .................... 23

10. கூட்டுறவின் ஆளுமைமிக்க தலைவர் .................... 26

11. குன்றென நின்றவர் கொலைக்களப்பட்டார் .................... 28

12. கூட்டுறவாளர், சமூக சேவையாளர் அமரர் சி.சிவமகாராசா M.P....................30

13. அவர் சாவதில்லை ....................32

14. பெறுமதிமிக்க தலைவர் அமரர் சிவமகாராசா ....................34

15. இறவாத புகழ் படைத்த அமரர் சிவமகாராசா ....................36

16. போற்றுதற்குரிய பொதுப்பணி செய்த பெரியோன்....................37

17. வலிகாமத்தில் கூட்டுறவுத்துறையின் முன்னோடி தலைவர் .... ....................39

18. சிவமகாராசா என்னும் தனிமனிதன் ....................42

19. துயர் துடைத்த தூதுவன் ....................44

20. தெல்லிப்பழைக்கு பெருமை தேடித் தந்த பெரியார் சி.சிவமகாராசா ....................49

21. இவர்கள் தான் வணக்கத்திற்குரியவர் ....................51
22. அமரர் சிவமகாராசாவின் பண்புகள் சகோதரி சிந்தனையில் ....................53
23. சேவையில் உயர்ந்தவர் சிவமகாராசா ....................54
24. சிவமகாராசாவின் வாழ்க்கைச் சுவடுகள் ....................56

## கூட்டுறவில்

25. தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கீதம் ....................67
26. கூட்டுறவில் சிவமகாராசாவின் சேவைகள் ....................68
27. கூட்டுறவுக்கு ஓர் எடுத்துக்காட்டு ....................69
28. அமரர் சிவமகாராசாவின் 9ஆம் ஆண்டு நினைவு விழாவில் ....................70
29. கூட்டுறவாளர் சிவமகாராசா ஐயா எமக்கு ....................72
30. பாராளுமன்றில் கூட்டுறவின் குரல் ....................75
31. எங்கள் வழிகாட்டி கூட்டுறவாளர் அமரர் சின்னத்தம்பி ....................78
32. மரணத்தை துச்சமென நினைத்து பொதுச் சேவையில் மரணித்த ....................81
33. கூட்டுறவிற்கோர் இலக்கணம் ....................83
34. கூட்டுறவுச் சபை ஊழியர்கள் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வில் ....................85
35. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிலைக்கு அடிக்கல் ....................86
36. மகளிர் குழு வாழ்த்துப்பா ....................87
37. லக்ஸ்மன் ரெலிகொம் வாழ்த்து ....................88
38. இளவாலை கோகுலன் மில் வாழ்த்துப்பா ....................89
39. தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க வெளியீடு ....................90
40. கூட்டுறவாளர் திரு. சின்னத்தம்பி சிவமகாராசா ....................91

## அரசியலும் ஆன்மீகமும்

41. நினைவுச் செய்திகள் ....................95
42. பாராளுமன்றில் மக்கள் உரிமைக்காக ....................98
43. சிவமகாராசாவின் இலட்சியத்தையும் கொள்கைகளையும் விரும்பாதவர்கள் ....................101
44. சிவமகாராசாவிற்கு " மாமனிதர் விருது" ....................103
45. பாராளுமன்றில் கௌரவ அமைச்சர் நிமல் ஸ்ரீ பால டி சில்வா ....................105
46. சிவமகாராசா கொலைக்கு யுனஸ்கோ கடும் கண்டனம் ....................106
47. மூத்த தமிழ் அரசியல்வாதி சிவமகாராசா ஊரடங்கு ....................107
48. முன்னாள் எம். பி. சிவமகாராசா சுட்டுக்கொலை ....................109
49. பாராளுமன்றத் தேர்தல் பொதுத் தேர்தல் ....................111

# சிவமகாராசா உருவச்சிலை திறப்புவிழாச் சபையினரும் மலர்க்குழுவும்

---

**தலைவர்**

**திரு. ந. உமாகரன்**

(சங்கத் தலைவர்)

**உபதலைவர்**

**திரு. ச. தனபாலசிங்கம்**

(சங்க உபதலைவர்)

**உறுப்பினர்கள்**

**திரு. கா. சிவஞானம்**

(முன்னாள் தெ. ப. அபிவிருத்திச் சங்கத் தலைவர்)

**திரு. சி. கயிலைமகான்**

(முன்னாள் ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்)

**திரு.க.சுப்பிரமணியம்**

(முன்னாள் இயக்குனர் சபை உறுப்பினர்)

**திருமதி பாமதி ஞானேஸ்வரன்**

(பொது முகாமையாளர் தெ.ப. நோக்கு கூட்டுறவுச்சங்கம்)

**திரு.வை.சுப்பிரமணியம்**

(தலைவர், மகாஜன சபை ச.ச.நிலையம்)

**திரு. வே. சண்முகநாதன்**

(முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்)

**திரு. ஆ. சுதன்**

(அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்துறைத் திணைக்களம்)

**மலர் ஆசிரியர்**

**திருமதி அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன்**

(முன்னாள் ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்)

**ஆலோசகர்**

**பேராசிரியர் க. தேவராசா**

(வணிகத்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)

**மலர் வெளியீடு**

**அமரர் சிவமகாராசா உருவச் சிலை திறப்புவிழா மலர்க்குழு**

# வெளியீட்டுரை

எமது தெல்லிப்பழைச் சங்கத்தில் பல ஆண்டு காலம் தலைமைப் பதவி வகித்தவராய் அதனை உயர்நிலைக்கு உயர்த்தி தேசிய விருது பெறக் காரணமாக இருந்த "சேவையின் செம்மல்" எனப் பாராட்டுப்பெற்ற அமரர் சின்னத்தம்பி சிவமகாராசாவின் நினைவு உருவச்சிலை வெளியீட்டு விழா எடுப்பதற்கு நீண்ட நாட்கள் தேவையாயின.

நல்லதோர் சிந்தையில் நல்லெண்ணங்கள் கொண்ட எல்லோரும் மகிழ்ச்சியடைய நிறைவெய்தும் இவ்வெளியீட்டு விழாவின் நினைவு உருவச்சிலை ஒரு பெரும் சான்றாகும்.

கூட்டுறவே நாட்டுயர்வு என எமக்கு வழிகாட்டிய கூட்டுறவாளர் அமரர் சிவமகாராசா இன்று எம்முடன் இல்லாமை ஒரு பெரும் குறையாக இருந்தது. அதனை ஈடுசெய்து அவர் இன்றும் எம்முடன் இருக்கிறார் என்னும் நிலைமையை ஆக்க முனைந்தோம். அதனால் மலர் முகத்தோடும் கருணையோடும் எம்மை நோக்குகிறார் என்னும் எண்ணம் எமக்குத் தோன்றுமாறு அவர் உருவச்சிலையைத் தாபித்தோம் அவரை என்றும் நினைவுகூரும் வகையில் இவ்வுருவச் சிலை மலர் வெளியீட்டு விழா அமைவது பெருமகிழ்ச்சியாகும்.

ஒரு இலக்கை நோக்கிப் பயணித்து எமது இலட்சியத்தை பூர்த்தி செய்து இவ்விழாவிற்கு வித்திட்ட தெல்லிப்பழைக் கூட்டுறவுச் சங்க தலைவர் திரு.ந.உமாகரனும் அவர் சார்ந்த மலர்க் குழுவினரும் பெருமைக்குரியவர்கள். இந்த சிறப்பு மலர் இத்திறப்பு விழா நன்னாளில் உங்கள் அனைவரதும் கைகளில் மலர்கிறது. இதனை வெளியிட உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

அன்பர்கள் யாவரும் இவ்வுருவச்சிலை வெளியீட்டுவிழா நிறைவை உள்ளார்ந்த அன்புடன் வாழ்த்த வேண்டுமென வேண்டி இவ்வெளி யீட்டுரையை நிறைவு செய்கின்றோம்.

**மலர்க்குழுவினர்**



# மலராசிரியர் பார்வையில்........

என் அண்ணன் அமரர் சிவமகாராசா அவர்களின் உயிர் கயவர்களினால் பறிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் நிறைவில் அவரது உருவச்சிலை நினைவுச் சிறப்பு மலராக இம்மலர் வெளிவருகின்றது.

அமரர் சிவமகாராசா தலைமைப் பண்புகளுடன் வாழ்ந்து இருபத்து நான்கு தலைமைப் பதவிகளை வகித்து உயிர்போகும் வரை பல சவால்களை எதிர்கொண்டு தற்துணிவுடன் மக்கள் பணிகளைச் செய்த வேளையில் துப்பாக்கி வேட்டுக்குப் பலியானார் அவர் ஆற்றிய சமூக, ஆன்மீக, அரசியற் பணிகளை நினைவுகூர்ந்து உருவச்சிலை வெளியீட்டுவிழா மலரினைச் சமர்ப்பிக்கும் வாய்ப்பு கிடைத்தமையை இட்டு மனநிறைவு அடைகின்றேன்.

அமரர் சிவமகாராசாவின் சேவைகள் இலைமறை காயாக மறைந்துவிடாது என்றும் நினைவு கூரப்பட வேண்டியது. காலத்தின் கட்டாயமானது என்பதைக் கருத்திற்கொண்டு அவரது உருவச் சிலையை தெல்லிப்பழைக் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் கட்டியெழுப்ப வேண்டும் என முயற்சியெடுத்த தெல்லிப்பழைக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. ந. உமாகரனதும் கூட்டுறவாளர்களதும் நன்றியுணர்வு பாராட்டப்பட வேண்டிய வரலாற்றுப் பதிவாகும்.

இம் மலருக்கான உணர்வு பூர்வமான ஆக்கங்களை வழங்கி உதவிய அன்பு நெஞ்சங்களுக்கும் மலர்க்குழுவினருக்கும், விழா ஏற்பாட்டாளர்களுக்கும், உருவச் சிலையை செம்மையாக வடித்துதவிய சிற்பிகளுக்கும் நன்றி கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். அமரர் சிவமகாராசா உருவச்சிலை விழா சிறப்புற நிகழ லட்சக் கணக்கான பணத்தை வெளிநாட்டிலிருந்து அனுப்பி வைத்த வீமன்காம மக்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

இம்மலரை இயன்றவரை முழுமையாக அச்சிட்டு உதவிய "அன்ரா பிறிண்டேர்ஸ்" நிறுவனத்தினருக்கும் ஆலோசனை வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**திருமதி அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன்**
முன்னாள் ஆசிரிய ஆலோசகர்,
வலிகாமம் கல்வி வலயம்.

# அமரர்.சி. சிவமகாராசா அவர்களின் சமூகசேவைக் குறிப்புக்கள்

| | | |
|---|---|---|
| 1938.06.28 | - | சின்னத்தம்பி சுந்தரம் தம்பதியினரின் மூத்தமகனாகப் பிறந்தார். ஆரம்பத்தில் கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலை, உயர் கல்வி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி |
| 1960களில் | - | மாவிட்டபுரம் கி.மு. சங்கச் செயலாளர், மாவை கொல்லங்கலட்டி, அருள்நெறிக் கழக அமைப்பாளர், மாவை கொல்லங்கலட்டி ச.ச நிலையச் செயலாளர். |
| 1968 - 1971 | - | மாவிட்டபுரம் விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத் தலைவர் (மாவிட்டபுரம் ப.நோ. கூ. சங்கம்) |
| 1968 - 1971 | - | தெல்லிப்பழை கிராமசபை தற்காலிக லிகிதர் |
| 1971 - 1988 | - | தெல்லிப்பழை கிராமசபை நூலக உதவியாளர் |
| 1978- 1979 | - | தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க நியமனத் தலைவர் |
| 1979 - 1991 | - | தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க தெரிவுத் தலைவர் |
| 1981 | - | வலி வடக்கு பிரதேசசபைத் தலைவர் |
| 1981 - 1989 | - | ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சபை யாழ். கிளைத் தலைவர் |
| 1986 | - | வலி வடக்கு பிரசைகள் குழு ஒன்றியச் செயலாளர் |
| 1986 - 1989 | - | ஸ்ரீலங்கா சந்தைப்படுத்தல் சம்மேளசபை பணிப்பாளர் |
| 1988 - 1991 | - | வலி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூ. சங்கத் தலைவர் |
| 1989 - 1991 | - | யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் (சுயேட்சைக் குழு) |
| 1989 - 1991 | - | யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் |
| 1981 - 1991 | - | யாழ். மாவட்ட விளைபொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் |
| 1989 - 1991 | - | ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைப் பணிப்பாளர் |
| 1989 | - | வலி வடக்கு புனர்வாழ்வுக் கழகச் செயலாளர் |
| 1992 | - | வலி வடக்கு செஞ்சிலுவைச் சங்கத் துரித அங்கத்தவர் |
| 1995 - 2000 | - | வலி வடக்கு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் |
| 1995 - 2000 | - | கால்நடை வளர்ப்போர் கூ. சங்கத் தலைவர் |
| 1996 - 2000 | - | தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தெரிவுத் தலைவர் |
| 1997 | - | தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை நியமனத் தலைவர் |
| 1997 | - | வலி வடக்கு புனர்வாழ்வுக் கழகச் செயலாளர் |
| 1998 - 2000 | - | ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைப் பணிப்பாளர் |
| 2000 | - | யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் (தமிழர் விடுதலைக் கூட்டணி) |
| 2001 - 2006 | - | தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் |
| 2003 - 2006 | - | நமது ஈழநாடு இயக்குநர். |

# ஆசி உரைகள்




# சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள் உள்ளத்திலிருந்து ....

தெல்லிப்பழை என்று சொன்னால் எல்லோருடைய நினைவில் வருவது துர்க்கை அம்மன் கோவில், யூனியன் கல்லூரி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாகும். இவை மூன்றும் மக்களுக்குச் சேவையாற்று கின்ற தன்மை கொண்டுள்ளனவாகக் காணலாம். 1981ஆம் ஆண்டு நடைபெற்ற தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் கும்பாபிஷே கத்திற்குப் போவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு பூசைகள் முடிவடைந்த பின் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் திரு.சிவ மகாராசா அவர்களை அறிமுகம் செய்து வைத்தார்கள். அன்றிலிருந்து அவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் செய்த பணிகளும் அவரது நிர்வாகத் திறமையும் தெல்லிப்பழைக் கூட்டுறவுச் சங்கத்தை முதன்மைச் சங்கமாகப் புகழ வைத்ததை எவராலும் மறக்கமுடியாது.

இவர் மிகுந்த குருபக்தி உடையவராக உசன் கந்தசாமி கோவிலில் விசேட திருவிழாக்களில் கலந்துகொண்டு சிறப்பித்தமை இன்றும் நினைவில் இருக்கின்றது. நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதத்தால் எல்லோரும் இடம்பெயர்ந்த நிலையில் அம்மா இல்லப் பிள்ளைகள் எல்லோருடனும் எங்களுடன் தங்கியிருந்து எங்கள் தேவைகளை ஓரளவிற்கேனும் பூர்த்தி செய்தமை நினைவு கொள்ளத்தக்கது.

தெல்லிப்பழைச் சங்க தலைவர் என்ற பெரும் புகழோடு வாழ்ந்த அவர் கொடும் பாதகர்களினால் சுடப்பட்டு நாம் ஆறாத் துயரில் மூழ்கியுள் ளோம். அவருடைய சேவையை நினைத்து நீண்ட நாட்களுக்குப் பின் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களும் அபிமானிகளும், நண்பர்களும் உறவினர்களும் ஒரு சிலை நிறுவி விழா எடுக்க முன் வந்திருப்பது ஆத்ம திருப்தியைத் தருகின்றது. இன்று சங்கத் தலைவராக இருக்கும் திரு.ந.உமாகரனது முயச்சியிலும் அயராத உழைப்பாலும் இந்த விழாவும் மலரும் வெளிவருகிறது. இது அவருடைய நன்றி மறவாத செயலாக மனிதநேயத்தை எமக்கு நினைவூட்டுகின்றது. இவர்களின் பணி சிறக்க மறைந்த தலைவரின் ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

என் உள்ளத்திலிருந்து<br>
**சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்**<br>
ஆதீன கர்த்தாவும் சிவாச்சாரியார்<br>
அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சினேயர் கோவில், மருதனார்மடம்



# செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி

எங்கள் மண்ணில் தன் வாழ்நாள் முழுவதும் அருந்தொண்டாற்றி அமரத்துவம் பெற்றவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சி.சிவமகாராசா அவர்கள். இப்பெருந்தகை அம்மண்ணுக்காக உழைத்து அம்மண்ணிலேயே தனது குருதி வடிய விடைபெற்றவர். ஆரவாரம் இன்றி அமைதியாக அரிய சேவைகள் ஆற்றி பலரது மனங்களில் வாழும் இம் மனிதனை மறக்கமுடியாது. யான் பாடசாலை மாணவனாக இருந்த வேளையில் இவரது அறிமுகம் ஏற்பட்டது. இணுவில் பண்டிதர் சபா.ஆனந்தன் வீட்டில் ஏற்பட்ட நட்பு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் யான் இணைந்த போது பன்மடங்காகியது. ஈரநெஞ்சுடைய இந்த இனிய மனிதன் சாதித்தவை ஏராளம். அரசியலுக்கு அப்பால் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவராக விளங்கிய இவர் மனிதாபிமான ரீதியில் சமூகத்திற்காக உழைத்தவர். போர்க்காலச் சூழலில் வலி.வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து அல்லல்பட்டு வாழ்ந்த காலத்தில் இவர் ஆற்றிய மனித நேயப்பணி அனைவராலும் மறக்கமுடியாது. வலி.வடக்கு மக்கள் கூட்டமாக வாழ்ந்த ஊர்களில் எல்லாம் தெல்லிப்பழை ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளை நிறுவி தானே துவிச்சக்கரவண்டியில் திரிந்து மக்களின் நிவாரணப் பொருட்களை வழங்குவதுடன் அவர் காட்டிய கரிசனை எவராலும் மறந்து விடமுடியாது. அரசியல்வாதிகள் தம் உயிரைக் காப்பதற்காக கொழும்பிலும் இந்தியாவிலும் வாழ்ந்த வேளையில் மக்களை விட்டுப் பிரிந்து செல்லாமல் மக்களோடு வாழ்ந்து மக்களுக்காக துப்பாக்கிச் சன்னங்களைத் தான் பெற்று தன் உயிரை அர்ப்பணித்த இப்பெருந்தகையின் வரலாறு தனித்துவமானது.

"ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்'

என்ற வள்ளுவரின் குறளுக்கு அமைய பசியால் துடித்து, அகதி முகாம்களில் பல தடவை மக்கள் அல்லல்பட்ட வேளையில் வெள்ளைக் கொடியோடு கூட்டுறவுச் சங்க லொறியில் துணிந்து வந்து துணை செய்த பசிப்பிணி மருத்துவன் இவர். காலம் மறக்கலாம் இவர் செய்த தர்மம் மறக்க முடியாதது. இவரை நாடி எவர் உதவி கேட்டுச் சென்றாலும் வெறுங்கையோடு அனுப்பியது கிடையாது. அகில இலங்கை கம்பன் கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இவர் ஆற்றிய பங்களிப்பினை யான் அறிவேன். எந்த ஒரு கம்பன் விழாவிலும் தவறாது இரசித்து எம்மைப் பாராட்டியவர். எங்கள் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்கள் சிவமகாராசா மீது உயர்ந்த மதிப்பும், மரியாதையும் கொண்டிருந்தார். எங்கள் தேவஸ்தான வளர்ச்சியிலும் மகளிர் இல்ல வளர்ச்சியிலும் இப்பெருந்தகையின் பங்களிப்பு தாராளமாக இருந்தது. மிக நெருக்கடியான காலகட்டங்களில் எங்கள் மகளிர் இல்லப் பிள்ளைகளின் உணவுத் தேவையைக் காப்பதில் மிகவும் அக்கறையாகச் செயற்பட்டார். எங்கள் தேவஸ்தான உடமைகளை தெல்லிப்பழையில் இருந்து பல ஊர்களுக்கு பாதுகாப்பாகக் கொண்டு போய்ச் சேர்ப்பதில் பெரும் பங்காற்றியவர். எங்கள் தேவஸ்தானம் இப்பெருந்தகையால் பல வழிகளிலும் ஆறுதல் பெற்றது. தினமும் காலையில் அம்பாளைத் தரிசித்து விட்டு தன் கடமையைத் தொடங்குவார். 1996க்குப் பின் தன் உயிர் பிரியும் வரை துர்க்கையம்பாளின் முன்றலிலேயே கடைசி வரை வாழ்ந்தார்.


இறப்பதற்கு முதல் நாளும் என்னோடு உரையாடினார். "நடப்பது நடக்கட்டும்" மற்றவர் களுக்கு இடையூறு இல்லாமல் நடக்கட்டும். தர்ம வீரன் கடைசி வரை தன்னந்தனியாக மரணத்தைச் சந்தித்தார். தன்னால் பிறர்க்கு கெடுதல் வரக்கூடாது என அவர் உச்சரித்த உயிர்த்துவமான வார்த்தை இன்னும் என் உள்ளத்தை நெருடுகிறது. "ஒளிக்க மாட்டேன், "உறவினர் வீட்டுக்கு போகேன்" வருவது வரட்டும் என கொடிய காலனுக்கும் வரவேற்பளித்த இவரை எப்படி எழுதி முடிப்பது. வெள்ளை வேட்டி, வெள்ளை சேட்டு வெண்ணீறு தரித்த சரீரத்தோடு விடைபெற்ற இவ்வெள்ளை உள்ளத்தை இனிமேல் எங்கு காண்போம். சிவமகாராசா அவர்கட்கு சிலை நிறுவி சிந்திக்க வைத்த சிலை அமைக்கும் குழுவினருக்கும், அவரது உறவினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**<br>
தலைவர்.<br>
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்<br>
தெல்லிப்பழை.

# வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| 1938.06.28 | - | சின்னத்தம்பி சுந்தரம் தம்பதியினருக்கு மூத்த மகனாக இளவாலையில் பிறந்தார் |
| 1941 | - | கொல்லங்கலட்டி வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் ஏடுதொடக்கல் நடைபெற்றது |
| 1943 | - | கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலையில் வித்தியாரம்பம் |
| 1947 | - | தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் சேர்ந்தார் |
| 1960 | - | மாவை கொல்லங்கலட்டி அருள்நெறிக்கழக அமைப்பாளர். மாவை கொல்லங்கலட்டி சனசமூக நிலைய செயலாளர் |
| 1964 | - | மூத்த சகோதரி நகுலேஸ்வரியின் (நவமணி) திருமணம் நடைபெற்றது |
| 1968 | - | மாவிட்டபுரம் விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத்தலைவர் |
| 1969 | - | யாழ்.மென்ரல் இண்டஸ்றீஸ் தொழிலகத்தில் பணிபுரிந்தார் |
| 1971 | - | தெல்லிப்பழைக் கிராமசபையில் லிகிதராகப் பணிபுரிந்தார். |
| 1972 | - | தந்தை சாமி சின்னத்தம்பியை இழந்தார். |
| 1978 | - | தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுவுச் சங்க நியமன தலைவர். இளைய சகோதரி அன்னபரிபூரணத்தின் திருமணம் நடைபெற்றது. |
| 1981 | - | வலிவடக்கு பிரதேசத் தலைவர் |
| 1982 | - | ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சபை யாழ்.தலைவர் |
| 1986 | - | வலி வடக்கு பிரஜைகள் குழு ஒன்றிய செயலாளர் |
| 1987 | - | சகோதரன் கயிலைமகானின் திருமணம் நடைபெற்றது. |
| 1988 | - | வலி.வடக்கு கால்நடை வளர்ப்போர் சங்கத் தலைவர் |
| 1989 | - | யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபைத்தலைவர், வலிவடக்குபுனர்வாழ்வுக்கழக செயலாளர் |
| 1990 | - | யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் (சுயேட்சைக் குழு) |
| 1991 | - | யாழ்.மாவட்ட விளைபொருள் உற்பத்தி கூட்டுறவுச் சபைத் தலைவர் |
| 1995 | - | வலிவடக்குசெஞ்சிலுவைச்சங்கத்தலைவர். இடம்பெயர்ந்துதென்மராட்சியிலும் வடமராட்சியிலும் கூட்டுறவுக் கடைகள் திறப்பு |
| 1997 | - | தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை நியமனத் தலைவர் |
| 1998 | - | ஸ்ரீ லங்கா கூட்டுறவுச் சபைப் பணிப்பாளர் |
| 2000 | - | யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் (தமிழர் விடுதலைக் கூட்டணி) |
| 2000 | - | தாயார் சுந்தரம் இறப்பு |
| 01.10.2002 | - | நமது ஈழநாடு நிர்வாக இயக்குநர் |
| 2001 - 2006 | - | தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் |
| 20.08.2006 | - | இறப்பு |

# வாழ்த்துச் செய்திகள்



# முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தி

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கூட்டுறவுப் பெரியார் அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களின் 10ஆவது ஆண்டு நினைவு நாளில் அமரருடைய திருவுருவச் சிலை திரைநீக்கம் செய்யப்படும் போது வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனமகிழ்வடைகின்றேன்.

இவர் சின்னத்தம்பி சுந்தரம் தம்பதியினரின் மூத்த ஆண் மகனாக தந்தையின் ஊராகிய இளவாலையில் பிறந்து தாயாரின் ஊராகிய கொல்லங்கலட்டியில் வளர்ந்தவர். ஆரம்பக்கல்வியை கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலையிலும் உயர் கல்வியை மகாஜனாக் கல்லூ ரியிலும் பெற்றதுடன் இலக்கியம், நாடகம் மற்றும் கலைத்துறைகளிலும் அதிக ஈடுபாடும் இரசனையும் உடையவராகத் திகழ்ந்தார்.


இளமை முதலே சமய, சமூக சேவையில் நாட்டம் கொண்ட இவர் தனது கிராமமாகிய கொல்லங்கலட்டியில் ஆரம்பித்த சமூக சேவையை வலி.வடக்கு பிரதேசம் யாழ். மாவட்டம் அகில இலங்கை தேசிய மட்டம் வரை விஸ்தரித்தார் என்றால் அது மிகையாகாது.

அவர் சிறுவயதில் இருந்தே அரசியலில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். தந்தை செல்வா அவர்களின் பிரத்தியேக ஆளணியில் இவரும் ஒருவராக இணைந்து கொண்டு அக்காலத்திலேயே அரசியல் கடமைகளில் ஈடுபட்டவர். இந்த அனுபவம் பின்னர் 1977இல் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் காங்கேசன்துறை தொகுதியில் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டபோது அவருடைய பிரத்தியேக செயலாளராக செயற்பட அவருக்கு மிகவும் உதவியாக இருந்தது. அரசியலில் மிகுந்த நாட்டம் கொண்ட அதே நேரத்தில் கூட்டுறவுப் பணியிலும் அவரது செயற்பாடுகள் முனைப்பாக அமைந்திருந்தன.

இவரது கூட்டுறவுச் சேவை தெல்லிப்பளைப் பிரதேசத்தில் இருந்து யாழ்.மாவட்டம் முழுவதும் விரிந்து பரந்தது. யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையின் முதலாவது தலைவராக 1989 களில் இருந்து 1991 வரையும் பணியாற்றி அச்சபையை வளர்த்தெடுத்ததுடன் ஸ்ரீ லங்கா கூட்டுறவுச் சபையின் யாழ்.கிளைத் தலைவராகவும் இயக்குநராகவும் கடமையாற்றியதுடன் யாழ்.மாவட்ட விளைபொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் விளங்கினார்.

கூட்டுறவு இயக்கத்தின் தத்துவத்தை நன்கு புரிந்து வைத்துக்கொண்ட திரு. சிவமகாராசா அவர்கள் யுத்த காலத்தில் உணவுப் பஞ்சத்தை நீக்குவதற்காக கூட்டுறவுச் சங்கத்தினூடாக பொது மக்களுக்காற்றிய மகோன்னத சேவை என்றென்றும் நினைவு கூரப்படும். இவ்வாறான பரந்த உள்ளம் கொண்ட ஒரு சமூகத் தொண்டருக்கு உருவச் சிலை அமைத்து திரை நீக்கம் செய்வது சாலப் பொருத்தமே.

**நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்**
முதலமைச்சர்
வடமாகாணம்



# தமிழ்த் தேசியத்திற்காகத் தன்னை அர்ப்பணித்தவர் சிவமகாராசா

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தெல்லிப்பளை சங்க வளாகத்தில் அமரர் சிவமகாராசா அவர்களுக்கு ஒரு சிலை நிறுவி நினைவிடமாக்கிட எடுத்துவரும் செயற்பாடுகளுக்கு என் வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

திரு.சிவமகாராசாவும் நானும் மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவர்கள் இருவரும், குடும்பத்தவர்களும் தந்தை செல்வநாயகத்தையும், தமிழரசுக் கட்சியை ஆதரித்து நின்றவர்கள். தமிழரசு இலட்சியத்திற்காக உழைத்தவர்கள். தமிழரசுப் பாசறையைச் சேர்ந்தவர்கள்.

திரு.சிவமகாராசா அவர்கள் தமிழரசுக் கொள்கைக்காக மட்டுமல்ல. பொதுத் தொண்டிலும் கூட்டுறவுத் துறையிலும் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தவர். சிவமகாராசாவும் நானும் சமகாலத்தில் பாராளுமன்றத்திலும் பிரதிநிதிகளாக இருந்திருக்கின்றோம். அதேபோல கூட்டுறவுத்துறையிலும் அக்கறை கொண்டிருந்தோம். தெல்லிப்பளை கூட்டுறவுச் சங்கத்தில் 1970 காலங்களில் நானும் ஒரு இயக்குநராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தேன். அப்போது வழக்கறிஞர் திரு. சிதம்பரநாதனை அரசு இயக்குனர் தலைவராக நியமித்தது. நான் அரசினால் கைது செய்யப்பட்டதனால் இயக்குநர் பொறுப்பிலிருந்து 1973இல் விலகியிருந்தேன்.

பின்னர் திரு.சிவமகாராசா அவர்களைச் சங்கத்தின் தலைவராக, திரு.அமிர்தலிங்கம் பா.உ அவர்கள் நியமித்திருந்தார். அக்கால கட்டத்தில் திரு.சிவமகாராசா அவர்கள் திரு.அமிர்தலிங்கம் பா.உ அவர்களின் அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பிலிருந்தார். மக்களை ஒருங்கிணைத்துச் செயலாற்றினார்.

திரு.சிவமகாராசா தன் இறுதிக்காலம் வரைக்கும் கூட்டுறவுத் துறையின் மதிப்பு மிக்க ஒருவராகவும் தெல்லிப்பளை சங்கத்தின்

தெரிவு செய்யப்பட்ட தலைவராகவும் விளங்கி வந்துள்ளார். கூட்டுறவுத் துறையின் முன்னேற்றத்திற்காகத் தன்னை அர்ப்பணித்திருந்தார். யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சமாசத்தின் நிர்வாகத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்தார்.

குறிப்பாகப் போர்க்காலச் சூழ்நிலையில் தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவு சங்கம் மூலமும், திரு.சிவமகாராசா மக்களின் தேவைகளைக் கண்டறிந்து கூட்டுறவுத் துறையினூடாக அளப்பரிய சேவையை மிகுந்த துணிச்சலுடன் ஆற்றியவர். மக்களிடம் மிகுந்த அபிமானம் பெற்றுத் துலங்கியவர். போர்க்காலத்தில் அரசினதும் இராணுவத்தினதும் அடக்குமுறைக்குள் வடக்கு மாநிலத்தில் கூட்டுறவுத்துறை உயிர் அச்சுறுத்தலையும், அவலங்களையும் நட்டங்களையும் எதிர்கொண்டபோதும் சம்பளமில்லாமலே ஆண்டுக்கணக்கில் முழுமையாக மக்களிடம் கூட்டுறவு ஊழியர்கள் சேவை செய்தமையை நன்கு அறிவேன்.

திரு.சிவமகாராசா கூட்டுறவுத்துறையில் மட்டுமல்ல, சமூகத் தொண்டிலும் அரசியல் துறையிலும் அர்ப்பணிப்புள்ள ஒரு தொண்டராகவும் தலைமைத்துவப் பண்புகள் நிறைந்தவராகவும் விளங்கினார். அரசியலிலும் மக்கள் பிரதிநிதியாகவும் தலைவனாகவும் தமிழ் மக்களினதும் தமிழர் தேசத்தினதும் விடுதலைக்காகவும், விடிவுக்காகவும் தன்னை முழுமையாக ஒரு கொள்கைவாதியாக, இலட்சியவாதியாக நின்று அர்ப்பணித்துழைத்தார் என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். அர்ப்பணம் மிக்க ஒரு தொண்டனும், இலட்சியவாதியுமாய் மாண்புற்றிருந்த பொழுதிலும் அன்னார் சுட்டுக் கொல்லப்பட்டமையை யாரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். நாம் அச்செயலால் துயரமடைந்திருந்தோம்.

அன்னார் நினைவுகளை இதயத்தில் வைத்திருந்தாலும் எதிர்காலச் சந்ததியும் பட்டறிய வேண்டும் என்பதற்கு நிறுவப்படும் சிலை நன்றியுடன் விளங்கி நிற்கும் என நம்புகின்றேன்.

**மாவை.சோ. சேனாதிராசா. பா.உ**

தலைவர், இ. த. அ. கட்சி



# பேராசிரியர், கலாநிதி நாகலிங்கம் சண்முகலிங்கன் அவர்களது வாழ்த்து

மக்கள் தலைவராய் வரலாற்றில் நிலைபெற்றுவிட்ட திருவாளர் சி.சிவமகாராசா அவர்களை சிலை எடுத்துப் போற்றும் இந்நாள் பெருமைக்குரியது, பெருமிதம் தருவது. கூட்டு வாழ்வினதும் கூட்டுறவு அமைப்பினதும் உச்சங்களைக் கண்டது வலி வடக்கு. இந்த உயர் வாழ்வில் எமக்கு வாய்த்த தலைவரான சிவமகாராசா தேசத்தின் அரசியல், இதழியல் துறைகளிலும் தடம்பதித்து மேன்மை கண்டவர்.

எங்கள் ஊரின் பலநோக்குச் சங்கத் தலைவராக விளங்கிய என் தந்தையார் மூலமாக அவருடன் ஏற்பட்ட அறிமுகம் பின்னாளில் அவரது விரிந்த சமூகப் பணிக் களங்களின் வழி நெருங்கிய உறவாகும். அன்று 2001 இல் நிகழ்ந்த சேவைநலன் பாராட்டு வைபவத்தில் அவரது பணிகளின் மேன்மைகளை, எதிர்காலத்து எங்கள் மீள் வாழ்வின் அவர் கொள்ளும் வல்லமையின் இடத்தினை விதந்துரைத்த நினைவுகள் பசுமையாய் நெஞ்சிலே.

ஆனாலும் எங்கள் நினைவுகளைப் பொய்யாக்கி அவருக்கு நேர்ந்த முடிவு அவரது இழப்பல்ல சமூகத்திற்கானது. இன்று எடுக்கப்படும் சிலை, குறியீட்டு முக்கியத்துவம் வாய்ந்தது. மக்கள் துயரங்களிடை மக்களோடு வாழ்ந்த, நீதிக்காய் தம் வாழ்வினை அர்ப்பணித்த தலைவர் களின் நினைவுகளைப் பேசும் சிலை இதுவாகும். இந்நாள் எங்கள் அர்ப்பணிப்புக்களைப் புதுப்பிக்கும் நாள் என்பேன்.

இன்றும், என்றும் வருகின்ற தலைமுறையினருக்கு தமக்கென வாழாத வாழ்வின் மகத்துவத்தினை இச்சிலை உணர்த்தி நிற்கும். இந்தச் சிலையினை அமைப்பதில் துணைநின்ற அத்தனை பேருக்கும், அழகாய் வடித்த சிற்பிக்கும் எல்லையிலா என் அன்பு வாழ்த்துக்கள்.

- சிரேஷ்ட பேராசிரியர்,
**கலாநிதி நாகலிங்கம் சண்முகலிங்கன்**
முன்னாள் துணைவேந்தர், தலைவர்
சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி

திருமிகு அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களின் 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி அன்னாரது திருவுருவச் சிலை நிறுவுவதனையும் அவரது பணியினை ஞாபகப்படுத்தும் முகமாக வெளியீடு செய்யப்படும் மலரில் வாழ்த்துச் செய்தி வழங்குவதிலும் பெரு மகிழ்வடைகின்றேன்.

அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா அவர்கள் ஒரு கூட்டுறவாளராக முன்னை நாள் இலங்கை செஞ்சிலுவைச் சங்க மற்றும் கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் தலைவராக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக தனது சேவையினை மக்களுக்கு வழங்கிய பெரு மகனாவார். இரண்டு தடவைகள் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டாலும் அவர் மிகவும் எளிமையான பண்புகளை உடையவராக அறியப்படுபவர். ஆக்க உணர்வு, ஆற்றல் திறன்மிக்க செயல் வீரராகவும் போற்றப்படுபவர்.

அவர்களின் திருவுருவச் சிலை தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் நிறுவுவதும் மிகப் பொருத்தமான பணியெனக் குறிப்பிடப்படும் இவ்வேளை, இப்பணியினை செவ்வனே செய்திருக்கும் வெளியீட்டுக் குழுவினருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நாகலிங்கம் வேதநாயகன்**
மாவட்டச் செயலாளர், அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்.



# சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களின் ஞாபகச் சிலை திறப்பு விழா செய்தி

சின்னத்தம்பி சிவமகாராஜா அவர்கள் ஒரு விசுவாசம் மிக்க தொண்டனாக வளர்ந்து சமூக, பொருளாதார பின்னடைவுகளிற்கு உள்ளானவர்களிற்கான தேவைகளை உணர்ந்து அதற்கூடான தீர்வுகளை கூட்டுறவுத்துறை ஊடாக வழங்குகின்ற தலைமைத்துவத்தை தாங்கியிருந்ததை கூட்டுறவு ஆணையாளராக இருந்த வகையில் நான் நன்கு உணர்ந்தவன்.

மேலும் ஒரு ஊடகவியலாளனாக ஒரு பத்திரிகையின் இயக்குன ராகவும் நேர்சீர் நிலையில் கடமை புரிந்ததையும் அவரின் ஒழுக்கமான பண்பாடும் அதற்கு அடையாளமான தோற்றமும் உடையும் நடையும் அவரைப் பாராளுமன்றத்திற்கான தெரிவைத் தந்திருந்தது.

சமூகத்தின் நலனை தன் நலனாகக் கருதி வாழ்ந்த அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களின் செயல்கள் என்றும் கல்மேல் எழுத்தாக அமைவதுடன், சமூகத்தில் அக்கறையுள்ளோர் அருகி வருகின்ற சூழ்நிலையில் இவர்களின் சேவைகளை நினைவு கூர்வதுடன் நிலைபெறச் செய்யும் வகையில் முன்னெடுக்கின்ற செயற்பாடுகள் எதிர்காலச் சந்ததியிற்கு ஓர் முன்னுதாரணமாக அமைவதுடன் அவர்க ளையும் நன்னெறி வழிப்படுத்தும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

**இ. இளங்கோவன்**
வடமாகாண ஆளுநரின் செயலாளர்.

# உயர்திரு. சி. சிவமகாராசா அவர்களின் 10ஆவது ஆண்டு ஞாபகார்த்த மலர் வெளியீட்டுக்கான வாழ்த்துரை

யாழ்ப்பாணத்தில் வலி. வடக்கில் இயற்கை எழில் நிறைந்த சமய வளமும் கலை வளமும் ஒருங்கே அமையப்பெற்ற கொல்லங்கலட்டி எனும் இடத்திலே 1938ஆம் ஆண்டு அவதரித்து சமூகத்திற்கு அளப்பரிய சேவையாற்றிய உயர்திரு. சி. சிவமகாராசா அவர்களின் பத்தாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு வெளியிட இருக்கும் ஞாபகார்த்த மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இளமைக் காலத்திலிருந்தே இவர் தமது பிரதேசத்திலே மக்கள் சேவையாளராகத் திகழ்ந்தவர். ஒரு நிறுவனத்தின் வெற்றியும் தோல்வியும் அந்நிறுவனத்தின் தலைமைத்துவத்திலேயே தங்கியுள்ளது. அந்தவகையிலே தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவராக இருந்து ஆக்கமும் ஊக்கமும் வழங்கி இந்நிறுவன வளர்ச்சிக்கு அயராது உழைத்ததுடன், பிரதேச மக்களுக்கு அரிய சேவையாற்றியவர்.

மேலும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து யாழ். மாவட்டத்திற்கும் தமது பிரதேச மக்களுக்கும் சமூகத் தொண்டுகள் பலபுரிந்து சமூகத் தொண்டனாகவும் வழிகாட்டியாகவும் வாழ்ந்தவர். புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவிலேயே சமூகஆர்வலராக தன்னலங்கருதாத சேவையாளன் எனப் பன்முகப் பார்வை கொண்டு விளங்கியவர் சமய, சமூக பணிகளில் தன்னை ஈடுபடுத்தி மக்களின் இன்னல்களைக் களைந்தவர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பதற்கு அமைய கடமைதவறாது மன நிறைவுடன் சேவையாற்றிய இச்செயல் வீரருக்கு உருவச்சிலை அமைத்து அன்றைய தினம் ஞாபகார்த்த மலரினை வெளியீடு செய்வது சாலச்சிறந்தது. மேலும் இம்மலர் வெளியீடானது சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


**கனகராசா ஸ்ரீ மோகனன்**
பிரதேச செயலாளர்,
வலிவடக்கு, தெல்லிப்பளை

# கூட்டுறவின் பிதாமகன் சின்னத்தம்பி சிவமகாராசா

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"
- திருக்குறள்

அமரர் சிவமகாராசா அவர்கள் எய்திய பெருமைக்கு அவர் ஆற்றிய கருமங்களே உரைகல்லாகும். அவர் வாழ்ந்து மறைந்து பத்தாண்டுகள் கடந்த நிலையிலும் அவரை நினைவு கூரவைப்பது அவர் கூட்டுறவுத் துறையிலும் சமூகம் சார்ந்தவற்றிலும் அவர் ஆற்றிய செயற்பாடுகளே கூட்டுறவுத் துறையில் அவரது நீண்டகால சேவை தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவராகவும் மிளிரவைத்தது.

"மக்களின் சேவையே மகேசன் சேவை" என்ற கொள்கையுடன் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர் அமரர் சிவமகாராசா அவர்கள். இதற்குச் சான்றாக இரு சம்பவங்களைக் குறிப்பிடலாம். தெல்லிப்பழைக் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் இயக்குனர்களில் ஒருவராக விளங்கிய திரு.சிவமகாராசா அவர்கள். வைத்தியசாலை நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் இயக்கமின்றி இருந்தபோது வைத்தியசாலையில் உள்ள முக்கிய ஆவணங்களைக் குறிப்பாக பிறப்புப் பதிவேடு என்பவற்றைப் பாதுகாப்பாக அப்போதைய பணியாளர் திருமதி சிவராணியின் பொறுப்பில் அவரது அளவெட்டி இல்லத்தில் வைப்பதற்கான ஏற்பாட்டை மேற் கொண்டிருந்தார். அப்பதிவேடுகள் தற்போதும் பிறப்பு, திகதி, நேரம் என்பவற்றைப் பெறுவதற்கு பேருதவியாக இருக்கின்றன.

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை 1990இல் இடம்பெயர்ந்து மானிப்பாய் இயங்கிய போது அதனை மீள தெல்லிப்பழைப் பிரதேசத்தில் இயக்க வைப்பதற்குக் காரண கர்த்தாவாக விளங்கியவர் அமரர்

அவர்கள் சிதைவுற்ற கட்டிடங்களைத் திருத்தித் தருவதற்கு UNHCR இன் உதவி பெறுவதற்கு கூட்டுறவு வைத்தியசாலையின் இயக்குநர் சபையின் ஒப்புதலைப் பெறுவதற்கு சுகாதார திணைக்களத்துடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டு வைத்தியசாலை 1977 முதல் 2011 டிசம்பர் வரை இயங்குவதற்கு வழிசமைத்துக் கொடுத்தார்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி இடம்பெயர்ந்து பாடசாலையை நடத்த முடியாத நிலை ஏற்பட்டபோது வைத்தியசாலை மருத்துவர் விடுதியை வழங்கி மாணவர்கள் கல்வியைத் தொடர வழிவகுத்தார்.

அமரர் சிவமகாராசா அவர்களின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் அவருக்கு சிலை அமைத்து விழா எடுக்கும் இச்சந்தர்ப்பத்தில் அவர் மக்களுக்கு ஆற்றிய சேவையை நினைத்து போற்றுவோம்.

**சு. ஏழூர்நாயகம்**

# வாழ்வியல்



# மக்களுக்காக உயிரைக் கொடுத்த தியாகி மாமனிதர் சிவமகாராசா.

பிறக்கும் போது இரத்தத்தில் ஊறிப்போன விடயம் தாய் மண்ணை நேசிப்பது. எம்மைத் தாங்கும் இந்த மண்ணுக்கு தீங்கு ஏற்படின் எமது உடலில் இருந்து கடைசித்துளி இரத்தம் சிந்தும் மட்டும் போராடுவோம் என்ற உணர்வு இருந்த மண்ணில் பிறந்தவர் தான் அமரர் மாமனிதர் சின்னத்தம்பி சிவமகாராசா. மாவிட்டபுரத்தில் பிறந்த இவர் இடம்பெயர்ந்த மக்களின் வலியை நன்கு உணர்ந்தவர். இதனால் அந்தப் பகுதிகளை இராணுவம் விடுவிக்குமாறு கோரி பல உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபட்டவர். அதுமட்டுமல்ல தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து ஜனநாயக வழியில் பல போராட்டங்களிலும் ஈடுபட்டவர்.

மண்ணிற்காக ஜனநாயக வழியில் போராடி உயிர் நீத்தவர்களில் தனக்கொரு இடம்பிடித்தவர் மாமனிதர் சின்னத்தம்பி சிவமகாராசா. இரக்க குணப்பண்பு கொண்டவர்களால் தான் தமது இனத்தைப் பற்றிச் சிந்திக்க முடியும். அப்படிப்பட்ட சிவமகாராசாவோடு பழகியவர்கள் இன்றும் வழிப்படுத்தப்படுகிறார்கள் என்றால் இவர் இந்த மண்ணில் பிறந்தது தமிழர்கள் செய்த பாக்கியமாகும். தான் உண்டு தன் வேலை என்று இருந்தவர்கள் தம்மை திரும்பிப் பார்க்க வைத்தவர் சிவமகாராசா. எவருடன் கோபப்படார் தமிழ் விரோதச் சக்திகளைத் தவிர.

மக்கள் பொதுப் பணிகளில் ஈடுபட்டு, விடுதலை இலட்சிய தாகத்தை தம்முள்ளே வளர்த்துக் கொள்பவர்கள் பின்னாளில் அனைவராலும் போற்றப்படும் தலைவர்களாக உருவாகிறார்கள். இவர்கள் அரசியல் தலைவர்களாகவும் பரிணமிப்பது உண்டு. இதற்கு சிவமகாராசா ஓர் உதாரணம். கூட்டுறவுத்துறையின் வளர்ச்சியில் சிவமகாராசா பெரும் பங்காற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்ற உறுப்பினராக இரு தடவைகள் பதவி வகித்தவர்.

சிவமகாராசா நல்ல தலைவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஒருவர். தனது 22ஆவது வயதில் மாவிட்டபுரம் கிராம முன்னேற்றச்

சங்கத்தின் செயலாளராகப் பொதுவாழ்வில் பிரவேசித்த சிவமகாராசா 68 ஆவது வயதில் சுட்டுக்கொல்லப்படும் வரை தனது வாழ்நாளைத் தமிழ்ச் சமூகத்தின் மேம்பாட்டுக்காக அர்ப்பணித்த ஒரு சிறந்த சமூக சேவையாளர்.

மாவிட்டபுரம் விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கத் தலைவர், தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், வலி.வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர், வலி.வடக்கு பிரஜைகள் குழு ஒன்றியச் செயலாளர், வலி.வடக்கு புனர்வாழ்வுக் கழகச் செயலாளர் என்று இளவயது முதலே தன்னலமற்ற பொதுவாழ்வில் ஈடுபட்டபடியால்தான் தமிழ்ச் சமூகம் மதிக்கும் தலைவர்களுள் ஒருவராக அவரால் உயரமுடிந்தது.

சுயவாழ்வின் சுகபோகங்களைத் துறந்து, பொதுநல வாழ்வை இலட்சியமாக வரித்து, அந்த இலட்சியத்திற்காக உறுதியோடு உழைத்த உயர்ந்த மனிதர் சிவமகாராசா. தமிழின விடுதலைக்காக ஒளிர்ந்த ஒரு இலட்சியச் சுடர் இவர். அரசியல் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு நல்ல மனிதர். அசாத்தியமான குணவியல்புகள் கொண்டவர். எளிமையும் இனிமையும் இணைந்த ஒரு இனிய மனிதர். அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்வார். அனைவரையும் கவர்ந்துகொண்ட ஒரு புரட்சிகரமான அரசியல்வாதியும், சமூக சேவையாளருமாவார்.

இவர் ஒரு சிறந்த தேசபக்தர். எமது மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்தவர். தமிழரின் வாழ்வு சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டு சிதைந்து போவதை அவர் அறவே வெறுத்தார். இந்த இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து தமிழ் மக்கள் முற்றாக விடுபட்டு, விடுதலை பெற்று, சுதந்திரமாக, நிம்மதியாக, கௌரவமாக வாழ்வதையே தனது வாழ்வின் இலட்சியமாக அவர் வரித்துக்கொண்டார்.

இவரது நண்பரான நாட்டுப்பற்றாளர் பொன்.கணேசமூர்த்தி அவரது வீட்டு வாசலில் வைத்து இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட போது அந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு சிவமகாராசா உரையாற்றும் போது ஜனநாயக வழியில் போராடுபவர்களை துப்பாக்கி முனையில் சுட்டுக் கொலை செய்யும் கோழைத்தனம் எந்த நாட்டிலும் இடம்பெற்றதில்லை என்று குறிப்பிட்டார். அன்றிலிருந்து இவரின் மீதும் குறிவைக்கப்பட்டதை இவரே சொல்லுவார். ஆனால் அவர் அஞ்சவில்லை. துணிந்து மக்களுக்காக சேவையாற்றினார்.

"நமது ஈழநாடு" நிர்வாக இயக்குநராக இருந்த போது சகல பணியாளர்களையும் தனியே தனது அறைக்குள் அழைத்து அவரது சம்பளம் அவருக்குப் போதுமா என்று கேட்டு அதற்கேற்ப சம்பளத்தைக் கொடுப்பார். பணியாளர் இருவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட போது சம்பவ இடத்துக்குச் சென்று நீதி கேட்டு இராணுவத்தினருடன் சண்டை போட்டவர். யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநர்களை விட இவர் ஒரு படி மேலே இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசியல், ஆன்மீகம், கூட்டுறவு, ஊடகம் எனப் பல்வேறு பெரும் தளங்களில் இவர் செயற்பட்டார். இவரது செயற்றளம் அகன்று விரிந்திருந்தது. யாழ்.மண்ணோடும் அந்த

மண்ணில் மக்களோடும் ஒன்றியதாக அவரது வாழ்வு சுற்றித்திரிந்தது. எதிரியின் அகோர ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டுள்ள யாழ்.மண்ணில் நின்றவாறு, எதிரியின் அழுத்தங்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் அசைந்து கொடுக்காமல் யாழ்.மக்களுக்கு என்றுமே காப்பரணாக நின்றார். போர் நெருக்கடி மிக்க நாட்களில் அந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் செய்தார். எல்லாவற்றுக்கும் மேலாக யாழ்.மண்ணில் "நமது ஈழநாடு" என்ற பத்திரிகையை ஆரம்பித்து, அப் பத்திரிகையின் நிர்வாக இயக்குநராக இருந்தவர். இவர் ஆரவாரமின்றி அமைதியாக ஆற்றிய மக்கள் பணி அளப்பரியது.

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தெல்லிப்பளை மண்ணின் முதல் அரசியல் போராளி பின்னாளில் யாழ்.மாவட்ட தளபதியாக இருந்த லெப்.கேணல் மதியுடன் நெருக்கமான தொடர்பு கொண்டு தமிழ்த்தேசிய எழுச்சிக்கு தன் ஆயுள் உள்ள வரை உழைத்த மனிதன்.

சத்திய இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு அழித்து விடுவதில்லை. அவர்கள் எமது தேச ஆன்மாவில் என்றும் நீங்காத நினைவுகளாக காலமெல்லாம் நிலைத்திருப்பார்கள்.

"நமது ஈழநாடு" பத்திரிகையின் நிர்வாக இயக்குநராக இருந்தபோது 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 20 ஆம் திகதி இவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவருக்கு தேசியத்தலைவர் பிரபாகரனால் 'மாமனிதர்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது தமிழ்த்தேசிய வரலாற்றின் பதிவாகும்.

**சிவஞானம் சிறீதரன்**
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.

ஆயிரத்தில் நீயொருவன் சேவைக்கென்று பிறந்தவன் நீ
யாழ்நிலத்தில் உயர்ந்துநின்று மறைந்துவிட்டாய் திடீரென்று
எப்படிநாம் ஆறிடுவோம் ஆறிடத்தான் முடிந்திடுமா
இப்படி ஓர் இழப்பினை நாம் காண்பதற்கா கண்படைத்தோம்.



# கூட்டுறவின் ஆளுமை மிக்க தலைவர்

அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களின் நினைவாக அவருக்கென சிலை உருவாக்கப்படுவதிலும் நூல் வெளியிடுவதிலும் கலந்து கொள்வதில் பங்குகொள்ளக் கிடைத்தமையையிட்டு எல்லையில்லா மகிழ்ச்சியடைகின்றேன். நல்லதொரு கூட்டுறவாள னாக, சமூகத் தொண்டனாக, பாராளுமன்ற உறுப்பினராக மக்கள் தொண்டனாக வாழ்ந்து அமரத்துவமடைந்த பெருந்தகைக்கு சிலை யெடுப்பது எம் எல்லோருக்கும் கிடைக்கும் ஆத்ம திருப்தியாகும். எனது வாழ்க்கையில் கண்ட தன்னலம் கருதாத சேவகனாக அமரர் சிவமகாராசா அவர்கள் விளங்குவதை நினைத்துப் பெருமை கொள்கின்றேன். ஒரு கூட்டுறவாளர் எவ்வாறு வாழவேண்டும் என்பதற்கான உதாரண புருஷராக விளங்கியவரும் அவரேயாவார். இதன் காரணமாகவே எந்தவொரு கூட்டுறவு விழாவிலும் நினைவு கூரப்படும் ஒருவராக அமரர் சிவமகாராசா விளங்குகின்றார்.

அமரர் சிவமகாராசாவின் கூட்டுறவுக்கான தலைமைத்துவம் என்றுமே போற்றப்பட வேண்டியதாகும். தனது உதவியாளர்கள் அல்லது பின்பற்றுவோர் மீது செல்வாக்கினைச் செலுத்தி அதன் மூலம் என்ன இலக்கினை அடைய அவர் விரும்பினாரோ அதனை அடைந்துவிடும் ஆளுமை அவரிடம் காணப்பட்டது. ஜப்பானிய முகாமைத்துவத்தில் பிரபலம் பெற்றிருக்கும் நேர்க்கணிய சிந்தனை என்பது இவரிடம் காணப்பட்டது. இதன் காரணமாகவே கூட்டுறவாளர் களினால் விரும்பப்பட்ட ஒரு தலைவராக நீண்டகாலம் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் தலைவராக அவர் விளங்கினால் கூட்டுறவுக் கொள்கைகளை தெளிவாக விளங்கிக்கொண்ட காரணத்தினால் அமரர் சிவமகாராசா அவர்கள் அதிலிருந்து என்றுமே விலகிச் சென்றதில்லை. இதன் காரணமாகவே கூட்டுறவாளர்கள் தமக்கிருக்கும் சந்தேகங்களை இவரிடம் சென்று தீர்த்துக் கொள்வதும் அது சம்பந்தமான ஆழமான அறிவைப் பெற்றுக் கொள்வதும் சாத்தியமாயிற்று எனலாம்.

மக்கள் தலைவனாகத் திகழும் வல்லமை கொண்ட காரணத்தினாலேயே அவர் யாழ். மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டார். அரசியல் சித்தாந்தத்தில் தெளிவு இருந்த காரணத்தினால் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கான கருத்துக்களை வெளியிட்டு வந்தார். தமிழ் மக்கள் அனுபவித்து வந்த சொல்லொணாத் துன்பங்களை பாராளுமன்றத்தில் தெரியப்படுத்தியது மட்டுமல்லாது, அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்தவரும் இவரேயாவார். இதன் காரணமாகவே தமிழ் மக்களால் விரும்பப்பட்ட அரசியல் தலைவர்களில் ஒருவராகவும் இவர் சுடர்விட்டார்.

இலங்கையின் வடக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்ற போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்பதற்கென பல சமூக அமைப்புக்களில் தன்னை இணைத்துக் கொண்டார். இதன் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு எத்தகைய வழிகளில் உதவிகளைப் பெற்றுக்கொடுக்க முடியுமோ அவற்றையெல்லாம் பெற்றுக்கொடுப்பதில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார். இதுவே மக்கள் தலைவனாக இனங்காணும் நிலையை அவரிடம் தோற்றுவித்தது. இவரது சேவை மக்களுக்குத் தேவைப்படும் வேளையில் அவர் அமரராகிவிட்டமை எமக்கு பேரிழப்பாகும். இருந்தும் அவரது இலட்சியங்களை நாம் அடைவதை அவரது ஆத்மாவிற்கு நாம் செய்யும் கைமாறாகும். இதன்மூலம் எம்மவர் மனதில் என்றும் நிலைத்து நிற்கும் பெருந்தகையாக அவரை மாற்றம் செய்யமுடியும் என்ற நம்பிக்கையுடன் வாழ்வோமாக.

"வாழ்க அவர் புகழ்"

**பேராசிரியர் க. தேவராஜா**
தலைவர், வணிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

பாழாயப் போன யுத்தம் உங்கள் உறவை
பாதியிலே அறுத்துவிட்டாலும் - கொண்ட
பாசம் குறையாமல் எம்மை
பெருமிதத்துடன் அன்பாய் அரவணைத்தீர்கள்



# குன்றென நின்றவர் கொலைக்களப்பட்டார்!

உலகம் அதிர்ந்தது உயர்ந்தோர் கவன்றார்
நலம் பெற மக்களை நாள்தோறும் காத்தவர்
நிலங்கடந்தனராம் நீசர்கள் செயலால்
கொலைக்களப்பட்டார் குன்றென நின்றவர்
விலையிலா உயிரை வீணர்கள் பறித்தார்
மலையெனப் பண்பால் மனங்களில் பதிந்தவர்
நிலையிலா யாக்கையை நீக்கினர் ஐயோ!
மன்னுயிர் தோன்றி மறைவது என்றும்
கண்ணெதிர் காணும் காட்சியே எனினும்
தன்னுயிர் போலத் தரணியை விரும்பிய
மன்னவன் வீழ்ச்சி மனதினிற் கதிர்ச்சி
இல்லறந் துறந்து இயங்குவோர் முனிபோல்

தன்னலமின்றித் தரணியில் வாழ்ந்தவர்,
பொன்னென மண்ணைப்போற்றிய பெரியோர்
எண்ணிலாப் பெருமைகள் இயல்பென வந்தும்
எண்ணம் பெருக்கா திருந்த மனிதர்
கூட்டுறவியக்க கொள்கையில் மூழ்கி
நாட்டுக் (கு) உழைத்த நற்பேராளர்
துர்க்கையின் திருவடி துணையெனக்கொண்டு
தக்கார் துணைகொண்டு தனித்தே வாழ்ந்தவர்
எங்கள் கழக இளையார் தம்மை,
பொங்கிடும் அன்பினால் போற்றிய பெரியோர்

நாள்தோறும் எங்கள் நலஞ்சிறந்திடவே
நீள நினைந்த நிமிர்வுடைச் சான்றோர்

அன்பே வடிவமாம் அவரையும் யாரோ
கொன்றிட நினைந்தார் கொதித்தது நெஞ்சம்
ஈழத்தாயே! எங்களின் வாழ்வு
மீள உதித்து மேல்வரும் போதும்
ஐயன் இல்லா அவலம் நினைந்து
துயரம் பொங்க துயிலா (து) அழுதிடும்
விழியெலாம் கண்ணீர் வெள்ளம் பாயும்
நல்லவர் தொடரும் நாசங் காணா(து)
உள்ளம் மகிழ்ந்து உலகைக் கடந்தார்
பாவிகள் நாங்கள் பார்ப்பதற்கென்றும்
மேவிடும் தீமைகள் மென்மேல் உளதோ
அன்னையே துர்க்கா அன்பனின் ஒளிசேர்
உயிரை உந்தன் ஒளிதரும் பாத,
நிழலிற் சேர்த்து நிம்மதி தருவாய்
சிவமகா ராஜச் செம்மலை என்றும்
அவலம் அகற்றி அடியினில் வைப்பாய்!

**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**

அன்பான பேச்சு, பார்வையிலே பரிவு, அமைதி, அடக்கம் அவரின் குணத்தின் வடிவம். கடமையும் கட்டுப்பாடும் அவர் வாழ்க்கை உயர்வின் அடித்தளம். வேலையும் தொண்டும் அவரின் பிறப்பின் கொடை. இதுவே அன்னாரை அரச சேவையில் இணைத்தது.

# கூட்டுறவாளர், சமூகசேவையாளர் அமரர் சி. சிவமகாராசா MP

இலங்கையில், கூட்டுறவுத்துறை பெரும் அபிவிருத்தி கண்ட மாகாணமாக வடமாகாணம் திகழ்ந்தது. கிராமங்களில் உணவுப் பொருட்கள் நியாய விலைக்கு விற்பனை செய்யும் சங்கக் கடைகள் தொடக்கம் வங்கிகள், வைத்தியசாலைகள் வரை பலதுறைகளிலும் கூட்டுறவு வியாபித்திருந்தது. ஆய்வுகளின் படி வடக்கில் கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் 2ஆம் உலகப் போருக்குப்பின் தாயகம் திரும்பிப் பொதுச்சேவையில் ஈடுபட்ட மலாயன் பென்சனியர்களும் ஆசிரியர்களும் அத்துறைக்கு வழங்கிய தலைமைதான் காரணம் என அறியக்கூடியதாக உள்ளது. இத்துறையில் மக்கள் ஈடுபாட்டையும் தேவையையும் உணர்ந்த அரசாங்கம் அதனை அரசியல் மயப்படுத்த முனைந்தது. 1978 அளவில் சட்டத்தின் மூலம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு அதன் தலைவரை நியமிக்க சிபார்சு செய்யும் அதிகாரம் அப்பகுதி பாராளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்பட்டது. அரசியலில் பிரபலம் அடைவதற்கு கூட்டுறவுத்துறையை சிலர் பயன்படுத்தினர்.

சின்னத்தம்பி சிவமகாராஜா அவர்கள் யாழ்ப்பாண கூட்டுறவுத்துறை வளர்ச்சிக்கு குறிப்பிடக்கூடிய பங்கு ஆற்றியுள்ளார். இளமை முதலே சமூக சேவையிலும் கூட்டுறவுத்துறையிலும் நாட்டம் கொண்டவர். 1968ஆம் ஆண்டு மாவிட்டபுரம் விளைபொருள் உற்பத்தி விற்பனை சங்கத்தின் தலைவராகப் பணிகளை ஆரம்பித்து 1998ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சபையின் பணிப்பாளருள் ஒருவராக உயர்வு பெற்றார். 1978ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் திரு. அமிர்தலிங்கம் அவர்களின் சிபார்சு பெயரில் தெல்லிப்பளை ப. நோ. கூட்டுறவுச் சங்க நியமனத் தலைவராகப் பொறுப்பேற்றார். பின்பு சட்டம் மாற்றப்பட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர்கள், அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்படும் முறைமை வந்ததும் அவர் தொடர்ந்தும் அங்கத்தவர்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைவராக 2006ஆம் ஆண்டு வரை பணி செய்தார்.

சிவமகாராஜா அவர்கள் தந்தை செல்வாவுடன் தொடர்புகொண்டு தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார். தந்தை செல்வாவின் மறைவிற்குப் பின் தலைவர் அமிர்தலிங்கம் காலத்தில் தொடர்ந்தும் அவருடன் பணியாற்றினார். தொகுதிப்பணிகளைக் கவனிக்கும் பொறுப்பை மகாராஜா அவர்களே ஏற்று நடத்திவந்தார். 1990ஆம் ஆண்டில் ஓர் சுயேட்சைக் குழு மூலம் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். மீண்டும் 2000ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரானார். இவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் போர்ச் சூழலினால் பாதிக்கப்பட்ட வலி.வடக்கு மக்களுக்கு பெரும் உதவிகளைப் பெற்றுக் கொடுத்தார்.

அவர் சமூகசேவையிலும் பெரும் ஈடுபாடு காட்டினார். கண்பார்வையற்றோர் நலன்கருதி செல்வி சின்னத்தம்பி அவர்களின் முயற்சியால் தொடங்கப்பட்ட "வாழ்வகத்தின் " தலைமைப் பொறுப்பேற்று கண்பார்வையற்றோர் நலன் பேண பல அனுதாப உதவிகளை வழங்கினார். ஆரம்பத்தில் வாழ்வகத்திற்கு அரச உதவி கிடைக்கப்பெறாத நிலையில் சிவமகாராஜா அவர்கள் நிதி உதவிகளை வழங்கினார். அதுமட்டுமல்லாது வாழ்வகத்திற்கு ஓர் நிரந்தர வதிவிடம் அமைத்துக் கொடுக்க வேண்டும் எனும் நோக்குடன் தெல்லிப்பளையில் ஓர் நிலம் வாங்குவதற்கு முற்பணம் கொடுத்து உதவினார். செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி.வடக்குக் கிளையின் தலைவராகவிருந்து பல மனிதாபிமான பணிகளை மேற்கொண்டார்.

அவர் இந்திய அமைதிப்படைகள் யாழ்ப்பாணத்திலிருந்த காலத்திலும் பின்பு இலங்கை இராணுவ நடவடிக்கையின் போதும் மக்கள் இடம்பெயர்ந்த காலத்திலும் செய்த பணிகளை மக்கள் இன்றும் நினைவு கூருவர். இந்திய இராணுவம் வரும் என்பதை நன்குணர்ந்து சங்கத்து பொருட்களை எல்லாம் வேறிடங்களுக்கு கிளைகளை இடம்மாற்றி வலி.வடக்கு மக்கள் சங்கத்தின் சேவையைப் பெற வழிவகுத்துக் கொடுத்தார். அவர் தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தலைவராகவிருந்த காலம் அவருக்குப் பெரிய சவாலாக அமைந்தது. அவர் அதனால் ஆபத்துக்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவர் ஒருமுறை ஓர் ஆயுத கும்பலால் கடத்தப்பட்டு பின்பு பொதுமக்களின் அழுத்தத்தினால் விடுதலை செய்யப்பட்டார். அவர் இறுதிவரை மக்கள் தொண்டனாகவே வாழ்ந்தார்.

**சட்டத்தரணி சிற்றம்பலம் கணேசலிங்கம்**
நன்றி கொழுந்து 2013
கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்.

# அவர் சாவதில்லை....

நதி ஒன்று ஓடியது பயிர் வளர நல் நீர் கொண்டு
நல்ல ஊற்றெடுத்து சிறப்பாய் அமைந்தது இந்நற்தொண்டு
மக்களுக்கு நல்இன்பம் தந்தது அச்சமூகத் தொண்டு
அந்நீர் இன்று நின்று விட்டது.
இதனால் நின்று விட்டது
அப்பெருந் தொண்டு

வெண்ணிற ஆடை, நெற்றியில் திருநீற்றுக் கோடுகள்
மனதிலே பற்பல எண்ணக் கருவூலங்கள்
துர்க்கை அம்மன் கோவிலில் நடமாடும் காட்சிகள்
இவை தான் அவர் தினமும் கடமைக்குப் போகும் கோலங்கள்

குடும்பத்தில் மூத்தவர், முயற்சியில் முன்னவர்
ஏணியாக தோணியாக செயல்பட்ட முனைவர்
அன்புதான் அவர் ஆயுதம் ஆளுமையில் முதன்மர்
மூளையால் ஆராயும் தன்மையில் முதல்வர்

செஞ்சிலுவைச் சங்கத்தில் சங்கமமானவர்
சமூக சேவையில் ஊறித் திளைத்தவர்
மக்கள் சேவகன் என மதிக்கப்பட்டவர்
செயல்வீரன் சொல்வதை செயலில் காட்டியவர்

பணியுமாம் பெருமை பொறுமைக்கு அணிகலன்
அறிவுரைகள் அத்தனையும் ஆணித்தரமானவை
மௌனம் அவரின் அற்புத மொழி
மக்கள் சேவையே அவரின் முக்கிய தொழில்

ஆண்டுப் பொதுக் கூட்டம், பட்டிமன்றம், புத்தகவிழா
கருத்தரங்கு, கதாப்பிரசங்கம், தேர்த்திருவிழா

தைப்பொங்கல் போன்ற பெருவிழா
எங்கும் காணலாம் களகச்சிதமாக எவ்விழாவிலும்

புத்தகம் படிப்பதில் ஆர்வம் அதிகம்
படிப்பகம் நடத்திய புதுவித அனுபவம்
கண்டதும் கற்றுப் பண்டிதனான அதிசயம்
அவர் கைப்பட்டால் காரியம் யாவும் அற்புதம்

ஊனினை உருக்கி உள்ளொளி பரப்பியவர்
உயிர் இருக்கும் வரை உத்தமராய் வாழ்ந்தவர்
உயிருக்கு உயிராக ஊரையே நேசித்தவர்
உத்தம புத்திரனாய் உயர்ந்து நின்றவர்

அறநெறி படைத்த சான்றோனாக
மக்கள் சேவையே மகேசன் சேவகனாக
வேண்டுவோர்க்கு வேண்டியதை ஈன்ற வள்ளலாக
தனித்திருந்தே தைரியத்தை வளர்த்தவர், இறப்பையும் பெற்றவர்

வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்
சாவை வென்றவன் ஒருவரில்லை இது உண்மை
மக்கள் மனதில் பதித்தவர் தன்னை உதிரமாக
அவர் சாவதுமில்லை மக்கள் மறப்பதுமில்லை.


**பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் J.P**
B.Sc. M.Sc, Ph.D (Lond) Hon.D.Sc (Sri Lanka)
தலைவர்,
இ.செ.ச. யாழ்.கிளை. யாழ்ப்பாணம்.

09.09.2006

மாந்தருள் மாணிக்கமாய்
மாண்புறு சமூகத்தில்
மலைபோல் உயர்ந்து விட்டீர்கள்
இனி உங்கள் அன்பு போல் எங்கு காண்போம்



# பெறுமதிமிக்க தலைவர் அமரர் சிவமகாராசா

எமது இனம் தனது போராட்ட அரசியல் வரலாற்றில் பல பெறுமதி மிக்க விலைமதிக்க முடியாத போராளிகளை, தலைவர்களைப் பெற்று இழந்திருக்கின்றது. அந்தவகையில் அவர்களில் ஒருவராகத்தான் அமரர் சிவமகாராசா அவர்களும் இணைந்திருக்கின்றார்.

தனது வாழ்நாளில் தனக்கென எதையுமே பெற்றுக் கொள்ளாமல் வாழ்ந்து விட்டுச் சென்ற மாமனிதர். தமிழ் மக்களின் விடுதலை சார்ந்த தமது போராட்ட வாழ்வில் தனக்கென ஒரு குடும்பம் உருவாக்கினால் அதுகூட சுமையாகிவிடும் எனக் கருதியோ என்னவோ இறுதிவரை திருமண பந்தத்தில் கூட இணைந்து கொள்வதைத் தவிர்த்தே வாழ்ந்தவர். எப்பொழுதும் கால்பாதத்திற்கு சற்று மேலே வேட்டித்துண்டு, ஒரு அரைக்கை மேல்சட்டை இதுதான் அவருடைய எளிமைமிகு கோலமாக நான் மிகவும் சிறு வயதிலிருந்து பார்த்து வந்திருக்கின்றேன். இளம் வயதிலேயே பொது சேவையில் இணைந்து விட்டார். ஈழத்து காந்தி எனப்போற்றப்படும் தந்தை செல்வாவின் தொண்டனாக அரசியலில் பிரவேசித்தவர். வலிகாமம் வடக்கில் பல்வேறான குழுக்கள், சங்கங்களின் தலைமைப் பொறுப்பை மிகவும் சிறுவயதிலேயே அலங்கரித்த பெருமைக்குரியவர். தெல்லிப்பழை ப.நோ.கூட்டுறவு சங்கத்தில் மிக நீண்டகாலம் யாரும் விரல் நீட்டி குற்றம் சொல்ல முடியாதவராக சிறந்த தலைமைத்துவ திறன் மிக்கவர்.

1989களில் பாராளுமன்றத்திற்குச் செல்வதற்கான சந்தர்ப்பங் கிடைத்தது. எனினும் சிறிது காலப் பகுதியிலேயே பதவியினைத் துறக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. பதவிகளை என்ன நோக்கத் திற்காகப் பெற்றார்களோ எந்தவிதமான ஆணையை மக்களிடம் கோரினார்களோ, அதனை நிறைவேற்ற முடியாத போது அதிலிருந்து பயனில்லை என்பதை நிரூபிப்பதாகவே அது அன்று அமைந்திருந்தது. அது மாத்திரமன்றி 1989இல் அவர் சுயேட்சைக் குழுவினராக

நாடாளுமன்றம் சென்றது. பதவி சுகபோகத்திற்காக அல்ல. அன்றைய காலகட்டத்தில் அது தவிர்க்க முடியாத இராஜதந்திர நகர்வு என்பதையும் மெய்ப்பித்து நின்றார். அந்தவகையில் தமிழ் மக்களின் உண்மையான விடுதலை சார்ந்து அவர் எந்தவிதமான முடிவுகளையும் எடுக்கவல்லவர் என்பதையும் நிரூபித்தார். இவை அனைத்திற்கும் பின்னரும் அவர் களத்திலேயே நின்றார். தான் நேசித்த மக்கள் மத்தியிலேயே இந்த மண்ணிலேயே வாழ்ந்தார்.

இதன் பின்னரும் பல்வேறான சோதனைகளையும் வேதனைகளையும் கூட்டுறவிற்காகவும் தமிழின விடுதலை வேண்டியும் சந்தித்தார். இருப்பினும் இம் மண்ணிலேயே நின்றார். மீண்டும் 2000ஆம் ஆண்டில் பாராளுமன்றம் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு திரு.வீ.ஆனந்தசங்கரி திரு.மாவை சோ.சேனாதிராஜா ஆகியோரோடு சேர்ந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போதைய பாராளுமன்றமும் சிறுகாலத்திலேயே கலைந்து போனது. அதற்குப்பிறகு தேர்தல்களில் பங்கெடுத்திருப்பினும் வெற்றியடையும் வாய்ப்புக் கிடைத்திருக்கவில்லை. எனினும் போட்டியிட்ட தேர்தல் தொகுதியில் அம்மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட ஒருவராகவே திகழ்ந்தார்.

மண்ணை மக்களை நேசித்த ஒருவனை அந்த மக்களும் நேசித்ததில் வியப்பில்லை. அவர் இதன் பின்னரும் தனது மக்களுக்கான சேவைகளைப் பல்வேறு மட்டங்களிலே தொய்வின்றித் தொடர்ந்தார். 2001ஆம் ஆண்டு தொடக்கம் அவர் உயிர் பறிக்கப்படும் வரை "நமது ஈழநாடு" பத்திரிகையின் நிர்வாக இயக்குனராகச் செயற்பட்டு வந்தார். 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20ஆம் திகதி கோழைத்தனமான முறையில் கொடியவர்களால் கொலை செய்யப்பட்டார் எந்த மண்ணின் விடுதலைக்காக, எந்த மக்களுக்காக வாழ்ந்தாரோ அந்த மண்ணிலேயே வீழ்த்தப்பட்டார் என்பது கூட அவருக்கான பெருமைதான் என்பதைக் கொலைகாரர்கள் அறிந்திருக்கவில்லை. அந்தவகையில் அவர் வீழ்த்தப்படவில்லை விதைக்கப்பட்டார்.

என்னுடைய காற்சட்டைப் பருவம் முதல் கனவுகளை வளர்த்த மாமனிதனுக்காக என்னுடைய அஞ்சலியோடு நிறைவு செய்கின்றேன்.

**பா. கஜதீபன்**
உறுப்பினர்
வடக்கு மாகாணசபை.

பொதுமக்கள் தொண்டு மலை சரிந்தது. துப்பாக்கி முனையில் சாய்ந்தார்.

தெல்லிப்பழை ப.நோ. கூ. சங்கத் தலைவர், கூட்டுறவாளர், சமூக சேவையாளர்

# இறவாத புகழ் படைத்த அமரர் சிவமகாராசா

இறவாத புகழ் படைத்த அமரர் சிவமகாராசா
வெள்ளைநிற உடையகலாத் தூய தோற்றம்
விரும்பி வரவழைக்கின்ற புன்சிரிப்பு
உள்ளத்தின் உயர்வுணர்த்தும் முகத்தின் சாந்தம்
உதவுதற்குத் தயாரென்றே உயரும் கைகள்
தள்ளரிய எத்துறைக்கும் முகம்கொடுத்து
சாதனைகள் காட்டுகின்ற தூயவாழ்வு
வள்ளலே சிவமகா ராசாவுங்கள்
வசமாக்கிச் சென்றனையே வாழ்வாய் நெஞ்சில்

ஈழமணித்திருநாட்டின் சிரமாமென்ன
இயல்பாக அமைந்தெவரும் போற்றநின்ற
யாழ்ப்பாண மூலவள ஊற்றுக் கண்கள்
எனத்திகழும் ஏற்றமிகு வலி.வடக்கை
வாழவைத்த வரலாற்று நாயகர்கள்
வரிசையிலே தலைமகனால் வாழ்வு கண்ட
தாழ்வறியாச் சிவமகாராசநே தம்
தவமகனே உன்இறப்பை தாங்குவோமோ

வலி.வடக்குத் தொண்டு நிறுவனங்களெல்லாம்
வளமான உன்தலைமை கொண்டுயர்ந்தார்
வலுவான கூட்டுறவுத் தலைமை தாங்கி
வெள்ளிவிழாக் கண்டுபெரும் பெருமை பெற்றீர்
நலிவுற்றுப் புலம்பெயர்ந்து மக்கள்போக
நாடியவர் வாழ்விடங்கள் எங்கும் சென்று
வலிதான நிறைபரப்பிச் சேவை செய்த
வரலாறு காணாத பெரியோன் நீயே

தனக்கென வாழாது பிறர்க்குரியனாகித்
தன்னலத்தைப் பொதுநலத்துக் கர்ப்பணித்து
தன்மானம் தமிழ்மானம் தமிழர்மானம்
தரணிமிசை காத்திடவே கடமையென்று
தன்னுயிரின் மேலாகக் கடமைகாத்து
தனக்குவமை இல்லாத சான்றோனாகி
இன்னிலத்தில் இறவாத புகழ்படைத்தீர்
எங்கள் சிவமகாராசா என்றும் வாழ்வீர்.

**கலாபூசணம், சைவப்புலவர், சு.செல்லத்துரை**
இளவாலை



# போற்றுதற்குரிய பொதுப்பணி செய்த பெரியோன்

1986 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் ஒரு நாள் தலைவருடைய வாகன சாரதி என் வீட்டுக்கு வந்து தலைவர் உன்னை வந்து சந்திக்குமாறு கேட்டுள்ளார் என என்னிடம் கூறிச் சென்றார். நானும் அதன்படி சென்று அவரைச் சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் கூறினார். நீ இப்பொழுது பார்க்கும் வேலையை விட்டு விட்டு என்னுடன் வந்து சங்கத்தில் வேலை செய் என உரிமையுடன் கேட்டுக் கொண்டார். (நான் அப்பொழுது காங்கேசன்துறைமுகத்தில் ஜெயா அன் கோவில் இலிகிதராக வேலை செய்து கொண்டிருந்தேன்)

அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவ் வேலையை நீக்கம் செய்து விட்டு சங்க அலுவலகத்தில் எனது பணியினை மேற்கொண்டேன். அன்றிலிருந்தே தலைவருக்கும் எனக்கும் இடையில் நெருக்கமான ஓர் உறவு ஏற்பட்டது. என்னிடம் கூறும்போது தான் கூட்டுறவுத்துறைக்கு வருவதற்கு எனது தந்தையார் தான் காரணமாக இருந்தார் என்றும், அதனால் தான் என்னையும் இங்கு இணைத்துக் கொண்டேன் எனக் கூறினார்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக தெ.ப.நோ.கூட்டுறவுச் சங்க தலைவராகவும் யாழ்.மாவட்ட கூட்டுறவுத் தலைவராகவும் இன்னும் பல தொண்டு நிறுவனங்களிலும் தன்னை இணைத்துக் கொண்டு, தன் சொந்த வாழ்க்கையையே பொதுப்பணிக்காக மாற்றி வாழ்ந்ததோடு மட்டுமல்லாமல், அரசியலிலும் தனக்கான பணியினைச் செவ்வனே செய்துவந்தார். அவரின் அருகிலிருந்து பழகியவன் என்ற வகையில் நானும் அவர் பிறந்ததனால் எனது ஊரும் பெருமிதம் கொள்கின்றது.

1986இல் இருந்து 1992ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நான் சங்கத்தில் பணியாற்றியிருந்தேன். ஆரம்பத்திலிருந்தே அவர் மீது அன்பும், மரியாதையும் கொண்டு பழகிய நான், பின்னாளில் மிகவும் தோழமையுடன் பழகினேன். அவரும் எனது வயதையோ,

அனுபவத்தையோ பார்க்காது மிகவும் நெருக்கமாகப் பழகிவந்தார். இதனால் நிறைய விடயங்களை அவரிடமிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவர் அடிக்கடி என்னிடம் கூறிய வார்த்தைகள் பசுமரத்தாணி போல் இன்றும் என் நினைவில் உள்ளன. நீ பொதுச் சேவை செய்யும்போது நிறையவே விமர்சனங்கள் வரும். அதனால் நிதானம் இழக்காதே என்பார். அதிலும் எப்பவும் நாங்கள் செய்யும் சேவையை எங்களின் வாயால் கூறக்கூடாது. மற்றவர்கள் தான் அதை தம்வாயால் கூற வேண்டும் என்பார்.

நான் அவரைப் பார்த்து வியந்த விடயம் மனமார்ந்த தன்னலமற்ற சேவை குறிப்பாக அவரிடம் என்னைக் கவர்ந்த விடயம் அவரிடமுள்ள ஆளுமை பல பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டாலும் எல்லாவற்றையும் நிதானமாகவும் நேர்த்தியாகவும் செய்து முடிக்கும் தன்மை.

அன்னார் எமது சமூகத்திற்கு ஆற்றிய சேவை அளப்பரியது. அவை என்றும் எங்களால் மறக்க முடியாதவை போற்றுதலுக்கு உரியவை. அவர் எம்மை விட்டு மறைந்தாலும் அவர் செய்த அர்ப்பணிப்புக்களை நினைத்து அவருக்கு சிலை எழுப்புவதுடன் மலர் வெளியிடுவதையும் அறிந்து மிகவும் ஆத்ம திருப்தி அடைகின்றேன்.

இம்மலர் முயற்சியை மேற்கொண்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் நினைவுகளைப் பகிர்ந்துகொள்ள எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியதையிட்டு மிகவும் சந்தோசமடைகின்றேன். அத்துடன் இம்மலர் வெளியீட்டுக் குழுவுக்கு எனது மனம் நிறைந்த நன்றியினையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி.கமலக்கண்ணன்**
தலைவர்,
மக்கள் ஒன்றியம்,
பிரித்தானியா

ஊரோ புலம்புதையா உன்சுற்றம் ஏங்குதையா
தலைவா என மகிழ்வுடன் நினைத்திருந்தோம் மாயமாக
எம்மைவிட்டுப் போனதேனோ
வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதுதான் மனிதநேயச் சிறப்பாகும் என
வாழ்ந்தீரே
அம்பாள் சந்நிதியில் உங்கள் ஆத்மா சாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம்.



# வலிகாமத்தில் கூட்டுறவுத் துறையின் முன்னோடி தலைவர் ஐயா அற்புதமான மானிடம் சிலை திறப்பு விழாவின் சிந்தனையில்.......

வலிகாமம் வடக்கில் ஏறக்குறைய மூன்று தசாப்த கால இடைவெளியில் என் வாழ்வு தெல்லிப்பழையுடன் செலவாகியது. தெல்லிப்பழைப் பிரதேசம் பல பிரசித்தி பெற்ற வழிபாட்டுத் தலங்களாலும் பெரும் அறிஞர்களாலும் சிறப்புப்பெற்று விளங்குகின்றது. இங்கு வாழ்ந்த பல பெரியார்களை நான் நன்கு அறிந்திருக்கின்றேன். பல மனிதநேயமுள்ள மனிதர்களையெல்லாம் சந்தித்திருக்கின்றேன். ஆயினும் நான் எல்லோருடனும் அதிகம் அணுகுவதில்லை. இங்கு ஒரு மனிதத்தைக் கண்டேன் அவர் தான் பெரியார் "சிவமகாராசா ஐயா" அவர்கள். இவரை இவரின் பெயரைக் குறிப்பிடாது நாம் எல்லாம் "தலைவர் ஐயா" என்றுதான் அன்பாக அழைப்போம். பெரியார் சிவமகாராசா ஐயா அவர்களை முதன் முதலில் பழக்கம் செய்து வைத்தவர்கள் இருவர். ஒருவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்து சிவத்தமிழ் செல்வி அம்மையார், மற்றவர் முன்னாள் இணைச் செயலாளராக இருந்த காலஞ்சென்ற திரு.க. தணிகாசலம் அவர்கள் அன்றுதொட்டு இவரோடு இறுதிநாள் வரைக்கும் இருவரும் நீண்ட அன்பும் ஆராமையும் கொண்டே பழகினோம். அவருடைய பிரிவு என்னை பெரிதும் வாட்டியது.

தென்மராட்சி மட்டுவிலில் பிறந்த எங்களுக்கு வலிகாமம் புதியதாகவே இருந்தது. தலைவர் ஐயா அவர்கள் வலிகாமத்தில் வாழ்ந்த பெரியோர்கள், சான்றோர்கள் பற்றியெல்லாம் எனக்கு அடிக்கடி எடுத்துக் கூறுவார். பெருமை மிகுந்த வலிகாமத்து பிரமுகர்களை எல்லாம் அறிமுகம் செய்து வைத்த பெருமை அவர்களுக்கே உண்டு. அவர் ஒரு சில சமய நூல்களையும் அன்பளிப்பாகத் தந்துள்ளார். அவரைப் போன்று பெரும் நட்புக்குப் பாத்திரமான அன்பரை என் வாழ்வில் இனி எவரையும் சந்திக்க முடியாது அவரது இழப்பு பெரு வெற்றிடமாகத்தான் இன்றும் உள்ளது.

ஊர் உலகில் உள்ளவர்கள் அனைவரது சுகதுக்கங்களில் கலந்துகொள்ள தவறவிடவே மாட்டார். மற்றவர்களுடைய துன்பங்களையெல்லாம் தமதாக்கிக் கொண்டு சமரசம் கூறுவார். 2005ஆம் ஆண்டு என் தந்தையார் மரணத்தறுவாயில் இருந்தார். அவரைப் பார்வையிட மட்டுவிலுக்கு யான் சென்றேன். இச்செய்தியை அறிந்த தலைவர் ஐயா அவர்கள் உடனே மட்டுவிலுக்கு என் தந்தையாரைப் பார்வையிட வந்தார். இங்கு வந்து தந்தையாரின் சுகநலன்கள் பற்றி அளவளாவிக் கொண்டு இருந்தார். சிறிதுநேரத்தில் என் தந்தையார் மரணத்தைத் தழுவிக்கொண்டார். அந்த தருணத்தில் எங்களுக்கெல்லாம் ஆறுதல் வார்த்தை கூறி அமைதி பெறச் செய்தார். ஆயினும் அவரின் நட்புக்கு கைமாறாக எதைச் செய்யமுடியும் என்கின்ற போது எம்மையெல்லாம் வருத்துகின்றது.

தலைவர் ஐயா அவர்கள் யுத்த நெருக்கடியான காலங்களில் நாம் நித்திரையற்ற இரவுகளைக் கழித்த போது எல்லாம் எமக்கு பக்கபலமாக பெரும் தொண்டு செய்திருக்கின்றார். 1987, 1990, 1992, 1995 ஆகிய காலங்களில் நாங்கள் அவலப்பட்ட நேரத்தில் அவர் செய்த உதவிக்கரம் என்றுமே மறக்க முடியாதது. இக்காலங்களிலெல்லாம் எங்கே எவருக்கு உதவவேண்டுமோ அங்கெல்லாம் தமது உதவிக்கரம் நீட்டுவார். கல்விச்சாலை, கோயில் விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், நூல் வெளியீடுகள் அனைத்திற்கும் தமது பங்களிப்பைச் செய்துள்ளார். இவரது தருமங்கள் அனைத்துமே இடதுகை, வலதுகை தெரியாத கொடைகளாகும். அவர் செய்த பணிகள் உலகளாவியது.

1988ஆம் ஆண்டு "மட்டுவில் தந்த பண்டிதமணி சி.க" என்ற பண்டிதமணி அவர்களின் நூலை திருநெல்வேலியில் வெளியிட்டேன். தலைவர் ஐயா அவர்கள் வெளியீட்டு விழாவில் பங்கு பற்றியதுடன் தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் சிறப்புப் பிரதியைப் பெற்று சிறப்புரை ஆற்றினார் என வெளியிட்டுப் பணிக்கும் பெரும் உதவி செய்தார். பெரும் அறிஞர்கள் கூடிய அவையில் தான் கல்வி கற்ற பண்டிதமணி அவர்களின் "இலக்கிய வழி" நூல் பற்றி பேசிய கருத்துக்கள் அனைவரையும் கவர்ந்தது.

ஐயா 20.02.1978ஆம் ஆண்டு தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்றார். கூட்டுறவுத் துறைக்குப் பெருந்தொண்டாற்றினார். வெள்ளிவிழாக் கண்டார். "கூட்டுறவு தீபம்" வெளிவந்தது. யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் கூட்டுறவுத்துறைச் சட்டத்தை பாராளுமன்றத்தில் அமுலுக்குக் கொண்டுவந்தார். தம்மை ஆளாக்கிய கூட்டுறவுத் துறைக்கு செய்த நன்றி மறவாப் பெரும் பண்பை வெளிக்காட்டினார்.

எங்கள் சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்களுடன் பெருமதிப்பும், பெருமரியாதையும் கொண்டவராக இருந்தார். அம்மா அவர்களின் பணிகளையெல்லாம் போற்றி வாழ்ந்தவர். துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொண்ட இவர் காலத்துக்கு காலம் செய்த தொண்டுகள் வரலாற்றுப் பதிவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவருடைய வாழ்வில் பெரும்பாலான காலத்தை நித்திரையற்ற இரவுகளாகவே கழித்திருக்கின்றார். மக்களுக்கு என்ன செய்ய வேண்டும், என்ன செய்யலாம் என்ற எண்ணங்

களெல்லாம் அவரது இருதயத்தில் துடிதுடித்துக் கொண்டே இருந்தது. தமது வாழ்நாளில் அடித்த காற்றுக்களுக்கெல்லாம் அசைந்தும் அசையாமலும் தொண்டுகளை மேற்கொண்டிருந்தார். இறப்பதற்கு முன்னுள்ள பத்து தினங்களும் இருக்க நிற்க நேரமற்று ஓடியாடித் திரிந்தார். யார் யாரை எங்கே பிடித்து துயரம் அடைந்த மக்களுக்கு எவ்வாறு நிவாரணம் அளிக்கலாம் என்ற சிந்தனைகள் அவரை முட்டி மோதிக் கொண்டிருந்தது. மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்று ஓடித்திரிந்த புனித ஆத்ம தலைவர் ஐயா எங்களையும் விட்டு ஓடிவிட்டாரே?

தலைவர் ஐயா ஒரு துர்க்கை அம்பாளைத் தரிசிக்கும் நியமம் கொண்ட பக்தர். இவர் ஒரு பத்தினி பக்தர். ஐயா அவர்கள் துர்க்கை அம்பாளை சரணடைந்து விட்டார் என்பதில் மட்டுமே அமைதி பெறுவோம். தெல்லிப்பழை பல நோ.கூட்டுறவு சங்கம் அல்லல்பட்ட காலத்தில் யாழ்ப்பாண மக்களுக்கு சோறு போட்ட சங்கமாக இருந்தது. பல்வேறு இடர்களைத் தாண்டி நிற்கும் இச்சங்கம் இன்று புத்துயிர் பெற்று விளங்குவது தேவர்கள் உலகில் வாழும் மனித நேயர் சிவமகாராசா ஐயாவுக்கு சிலை நிறுவும் புண்ணிய கருமம் பெருமை தருவதாக அமையும்.

**கா.சிவபாலன்**

சர்வதேசக் கூட்டுறவு இணைப்பு நிறுவனம் 1995இல் பிரகடனப் படுத்திய ஏழு (7) கூட்டுறவுக் கொள்ளைகள்

**1. உறுப்புரிமை**

தன் விருப்பார்ந்த தடையற்ற (திறந்த) உறுப்புரிமை

**2. ஜனநாயகம்**

ஜனநாயக முறையில் அமைந்த கட்டுப்பாடும் நிர்வாகமும்

**3. பொருளாதாரம்**

அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு

**4. சுதந்திரம்**

சுதந்திரமாகவும், சுயமாகவும் தொழிற்படல்

**5. கல்வி**

கல்வி, பயிற்சி, தகவல்

**6. ஒத்துழைப்பு**

கூட்டுறவுச் சங்கங்களிடையே ஒத்துழைப்பு

**7. சமூகம்**

சமூக மேம்பாடு

# சிவமகாராசா என்னும் தனிமனிதன்

"தலைவர் ஐயா" என்ற பெயரோடு எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்தவர் அமரர் சி.சிவமகாராசா அவர்கள். அவர் ஆற்றிய பணிகளில் பல பொதுமக்களுக்குத் தெரிந்தாலும் தெரியாத பல பணிகளும் ஆற்றியுள்ளார். தலைவர் ஐயாவின் மனதில் என்ன உள்ளது என்பதை யாராலும் அறியமுடியாது. யாராவது திருப்பித் திருப்பிக் கேட்டால் புன்சிரிப்புதான் அதன் பதிலாகும். ஔவையாரின் "உடையது விளம்பேல்" என்ற கூற்றை இறுதிவரை காப்பாற்றியவர்.

எத்தனையோ பிரச்சனைகள் வந்தபோதும் துணிந்து நின்று அதற்கு முகம் கொடுத்தவர். தன்னைப் பேசியவர்களையும் புன்சிரிப்போடு வரவேற்பவர். ஒரு மனிதனைப் பற்றி எடை போடுவதற்கு தலைவர் ஐயாவிற்கு நிகர் யாரும் இல்லை. தான் ஒரு காரியத்தைச் செய்ய நினைத்தால் எத்தனை முறை சென்றாவது எத்தனை பேரைக் கரைச்சல் பண்ணியாவது செய்ய முடித்துத் தான் ஓய்வார். தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச் சங்க வரலாற்றில் அவரது பணிகள் பொன் எழுத்தால் பொறிக்கப்பட வேண்டியவை. அதன் பிரதிபலிப்புத்தான் அவருக்கு உருவச்சிலை நிறுவுவது.

எனது பெரிய தாயார் அமரர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களுக்கு சமுதாயப் பணி ஆற்றுவதற்கு பக்கபலமாக இருந்து ஆலோசனைகள் வழங்கியவர் தலைவர் ஐயா. துர்க்காபுரம் மகளிர் இல்ல பிள்ளைகளுக்கு எந்த நெருக்கடியான காலத்திலும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாமல் பாதுகாத்தவர் தலைவர் சிவமகாராசா அவர்கள். ஷெல் வீச்சு உக்கிரமடைந்த பொழுது ஆலய வளாகத்தை விட்டு எல்லோரும் வெளியேறிய பொழுதும் கோயில் கடமைகள் ஒழுங்காக நடைபெற வேண்டும் எனக்கருதி சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக்குருக்கள், திரு.சிவபாலன் ஆகியோருடன் கோயில் தேர்முட்டியில் தங்கி இருந்தவர்.

இரண்டு முறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபொழுதும் பாராளுமன்றம் முடிந்ததும் அடுத்த நாள் யாழ்ப்பாணம் திரும்புகின்ற ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இவர் தான். எந்தவித ஆடம்பரமும் இன்றி மிக எளிமை மனிதராக மக்களுடன் மக்களாக நடமாடியவர். துர்க்காபுரம் மகளிர் இல்லம் இடம்பெயர்ந்து உசன் கந்தசாமி கோவில் வளாகத்தில் தங்கிய பொழுது தானும் உசன் கந்தசாமி கோவிலில் தங்கி பிள்ளைகளுக்கு வேண்டிய அனைத்தையும் செய்தார். பணத்தட்டுப்பாடு ஏற்பட்ட பொழுது சைக்கிளில் வடமராட்சி வரை சென்று தனக்கு வேண்டிய வங்கி முகாமையாளர்களிடம் காசோலையைப் பணமாக மாற்றிக் கொண்டு வந்து கொடுத்து இல்லத்தை இயங்கச் செய்தார்.

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் பிறந்த நாள் அறநிதியம் என்னும் அமைப்பு உருவாக்க நினைத்த பொழுது சட்டத்தரணி கணேசலிங்கம் மூலம் அதைத் தயாரித்து அதில் ஆரம்பகால உறுப்பினராக இருந்து. அதை நடைமுறைப்படுத்தியவர் இவர். இன்றும் அந்த இடத்தை அவரது சகோதரி திருமதி ஞானேஸ்வரன் நிரப்பி சேவையாற்றி வருகின்றார்.

ஊடகவியலாளராக அவர் ஆற்றிய பணிகள் ஏராளம். யாழ்ப்பாண மாவட்டம் இக்கட்டான காலத்தில் இருந்த நேரம் வன்னிப் போர் நடந்தபொழுது யாழ். மாவட்ட செய்திகளைச் சேகரித்து வவுனியா நிருபர் ஊடாக இலண்டன் பி.பி.சிக்கு உடனுக்குடன் வழங்கிய பெருமை இவரைச் சாரும். அப்படிச் செய்தி வழங்கிக்கொண்டு இருக்கும் பொழுதே மரணத்தையும் தழுவவேண்டி ஏற்பட்டது.

எத்தனையோ பெரிய பதவிகளை வகித்தாலும் மிகவும் எளிமையாக மக்களோடு மக்களாக இருந்து சேவையாற்றி தனக்கென எதையும் தேடாது தான் சிறுவயதில் இருந்து விரும்பிய தமிழின விடுதலைக்காய் இறுதி மூச்சுவரை போராடி எத்தனை அச்சுறுத்தல் வந்த பொழுதும் இந்த மண்ணை விட்டு வெளியேறாமல் மக்களோடு மக்களாக இருந்து எந்த மக்களும் எந்த நேரமும் சந்திக்கக்கூடிய ஒரு மனிதனாக வாழ்ந்து தான் நேசித்த மக்களை விட்டுப்பிரிந்த அமரர் சின்னத்தம்பி சிவமகாராசாவின் நாமம் இந்த மண்ணில் என்றும் ஒலிக்க வேண்டும் அவரின் பெயரில் பல பொதுப்பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என மிகவும் பணிவாக வேண்டுகின்றேன்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி<br>குடும்பத்தினர் சார்பாக<br>ச. உமாசுதன்

# துயர் துடைத்த தூதுவன்

"தோன்றில் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைவாக ஆசியாக் கண்டத்தில், தென்னாசிய வலயத்தில், இந்துமா சமுத்திரத்தின் மத்தியில் ஒரு மாம்பழ வடிவினைக் கொண்டமைந்திருக்கும் இலங்கைத் தீவின் வடபால் அமையப்பெற்ற யாழ்ப்பாணத்தில் இயற்கை வனப்புகளின் சங்கமிப்புடன் நீண்டு பரந்த வயற்பரப்புக்களையும், வியர்வை சிந்தி உழைக்கும் உயரிய விவசாயக் குடும்பங்களையும், பல்துறைசார் தொழில்கள் புரிவோரையும் உயர்ந்து நிற்கும் கோபுர தரிசனங்களையும் ஒட்டுமொத்தத்தில் அறிவின் சிகரமாய் சிறந்த வாழ்க்கைக் கோலத்தைக் காட்டிநிற்கும் கொல்லங்கலட்டி எனும் கிராமத்தை அடியொற்றிப் பிறந்த உத்தம புருசராம் சிவமகாராசா.

ஒவ்வொரு மனிதனுக்கும் சொந்த வாழ்க்கையில் மறுக்கப்பட்ட பக்கங்கள், மறக்கப்பட முடியாத பக்கங்கள் என்பவை நிச்சயம் உண்டு. ஆனால் என் பக்கங்கள் இவற்றிற்கெல்லாம் மேலாக போற்றப்படத்தக்க மாமனிதர்களால் நிறைக்கப்பட்டுள்ளது. அதுதான் உண்மையும். அவ்வகையில் முதன்மையானவர் இவ்எழில் கொஞ்சும் கிராமத்தின் தவப்புதல்வர் சி. சிவமகாராசா ஆவார். இவரின் பாசறையில் வளர்ந்தவர்களில் நானும் ஒருவன். அதைக் காட்டிலும் அவருடைய நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் பாத்திரமானவன் என் இளமைக்காலத்தில் இவருடன் கழித்த நாட்கள் மிகவும் இனிமை யானவை. சுவாரசியமானவை. அர்த்தம் பொதிந்தவை. அவற்றில் சிலவற்றை இங்கு எடுத்தியம்புகின்றேன். அந்த உன்னத மனிதனை இழந்த சோகத்துடன்....

நான் சிறுவனாக முன்பள்ளியில் கற்கும்போது அவர் மருமகன் சர்வாவுடன் வீட்டு முற்றத்திலே விளையாடுவது வழக்கம். அவ்வாறான

நாட்களில் வெண்மைநிற உடையுடன் கண்ணால் கண்டேன் அவரை. ஆனால் எனக்குக் கதைக்கும் வாய்ப்பு கிடைப்பதில்லை. ஆனாலும் பின்னாட்களில் அவருடைய மருமகன் மாரினதும், சகோதரர்களினதும் நட்பின்பால் நாங்கள் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டதன் விளைவாக தலைவர் சி. சிவமகாராசாவுடன் ஏற்படுத்தப்பட்ட ஒரு பாசப் பிணைப்பு மிகவும் பலமானது. இத்தகைய உத்தம தலைவரின் மனம் மிகவும் விசாலமானது. உள்ளதை உள்ளபடியே கூறுவது. சுருங்கக் கூறின் உண்மையைச் சொன்னால் பொய் உரைக்கத் தெரியாதவர். இதனால் ஒருபடி மேலெழுந்து தொணி உயர்த்திப்பேசி மக்களை ஏமாற்றத் தெரியாத உயரிய குணத்தைக் கொண்டவர் எனலாம்.

தன் தாயன்னை மீதும் தாயகத் தமிழன்னை மீதும் அளவற்ற பற்றுக்கொண்ட அவர் 1987களில் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் தலைவராக இருந்து ஆற்றிய பணிகளை எம்மக்கள் இன்றும் நினைவு கூருவதை என்னால் அவதானிக்க முடிகின்றது. "அற்றார் அழிபசி தீர்ப்பதில் இவருக்கு இணை" இவரே எனுமளவிற்கு இவர்போன்று வேறொருவர் இனி கிடைப்பதென்பது அரிதே. சேவையையே நோக்காகக் கருதி வாழ்ந்த மனிதன் அரசியலின் பால் அவரது அனுபவம், திறமை என்பவற்றால் அவர் வகித்த பதவிகள், குறிப்பாக தந்தை செல்வநாயகம் தொடக்கம் இறுதிவரை அவரது சேவைமனப்பான்மையில் நான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் நினைக்கும்போது என்னுள்ளம் பெருமிதம் கொள்கின்றது.

சி. சிவமகாராசா அவர்கள் 1999ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது நான் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றிவிட்டுப் பெறுபேற்றிற்காகக் காத்திருந்த வேளை தன்னுடன் பணியாற்ற "மாதிவல" பாராளுமன்ற விடுதிக்கு வருமாறு கேட்டிருந்தார். இச்சமயம் அவரது மருமகன் சர்வா "அவனை அழைத்துச் சென்றுவிட்டால் நான் யாருடன் சுற்றித்திரிவது" என்றார். இங்கே நான் சிறந்த நட்பின் இலக்கணத்தைக் கண்டேன்.

ஆசை என்பது மனித குணம். ஆனால் பணத்தின் மீது பற்றுவைக்காத பண்பை நான் முதன் முதலில் கண்ட மனிதர் இவராகத்தான் இருக்கவேண்டும். சிலசமயங்களில் "நான் கொழும்பு செல்ல இருக்கின்றேன் எனது உடைகளை அடுக்கி வைத்துவிடு" என மருமகன் சர்வாவிடம் கூறுவார். அத்தருணம் நானும் சிலநேரங்களில் மடித்து வைத்தும் இருக்கின்றேன். அவருடைய அந்தப் பெட்டியை (சூக்கேஸ்) இரண்டு வயதுப் பிள்ளையும் எளிதாகத் தூக்கிவிடும் காரணம் அதற்குள் 2 வேட்டியும் 2 சட்டையும் இருக்கும். அதுதான் அவருடைய பொக்கிசம். அத்துடன் ஒரு கடித உறையில் பழைய காலத்து 1000ரூபாய் தாள் ஒன்று மடிப்பு வெடித்தபடி இருக்கும். இது ஏன் என்று ஒருநாள் கேட்டேன். இதற்கு அவர் "கைகாவலாகக் கொண்டு செல்கின்றேன்" என்று சிரித்தபடி பதில் தந்திருந்தார்.

தலைவர் கொழும்பு சென்றால் நாங்கள் ஏன் துர்க்கையம்மன் கோவிலடி வீட்டில் அவர் படுக்கும் சாய்மனைக் கட்டிலில் நித்திரை செய்வோம். யாரேனும் எம்மைத் தலைவர் என்று நினைத்துக் கதை சொன்னால் போதும் "ம்...ம்" என்று சொல்லி வந்தவரை ஏமாற்றிவிட்டுச் சிரித்த நினைவுகள் இன்றும் பசுமையாக இருக்கின்றது. எம்மனதில் தலைவர் குறிப்பறிந்து

செயற்படக் கூடியவர். நான் துவிச்சக்கரவண்டியில் வந்து "சர்வா நிற்கின்றானோ?" என்றால், "நானும் இப்பதான் வாறேன்" என்று கூறிவிட்டு சில நொடிக்குள்" வந்து போட்டான் போல இருக்கு" என்பார். என்னடா இவன் எங்காவது எழுதிவிட்டுச் சென்றானோ என்று என்மனதில் இசைபோட்டு எப்படி நீங்கள் சொல்கிறீர்கள் என்று கேட்டதற்கு உந்த தென்னம் பாத்தி தண்ணீரால் நிறைந்ததால் அவன் வந்து சென்றான் என்று அர்த்தம் என்றார். நான் சிரித்தபடியே சென்றேன்.

இவற்றிற்கும் மேலாக எங்களில் சிலர் ஐயா என்று கூறுவோம். சிலர் சொக்கா மாமா என்று கூறுவர். இன்னும் சிலர் கிழவன் என்னவாம் என்று கூறுவதெல்லாம் அவர்மேல் கொண்ட பாசத்தின் வெளிப்பாடே. தலைவன் மிகுந்த இறைபக்தி உள்ளவர். செவ்வாய்க்கிழமை தோறும் மாலை நேரம் வசந்தமண்டப பூஜை பார்க்க துர்க்கையம்மன் கோயிலின் தெற்குப் பக்கவெளி வீதிக்குச் செல்வார். பந்தபாசம் எதற்கும் இடம் கொடுக்காதவர். எல்லோரையும் சாதி, மத பேதமின்றி மதிக்கும் சிறந்த பண்பாளன். உண்மையைக் கூறினால் மகாராசா என்பது அவருடைய பெயரல்ல. இவரது குணத்திற்குரியதென்றே கூறலாம்.

தன் வாழ்நாட்களில் தனக்கென்று எதுவும் தேடிவைக்காத மனிதன் தாயக விடுதலைக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவராக திரு. அமிர்தலிங்கம் இருந்த வேளை எமது தலைவர். அவர் செயலாளராக அன்று இருந்தார். பின்னர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வேளையிலும் கூட தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்டிருந்தார். அதன் காரணமாக எங்கள் வலி. வடக்குப் பிரதேசம் வளப்படுத்தப்பட்ட மிகப்பெரும் சக்தியாக விளங்கியது.

1988 -1989களில் இந்திய இராணுவத்திற்குப் பயந்து கொழும்பிலே இளைஞர்கள் இருந்தவேளை 4ம் குறுக்குத்தெருவில் வெறும் காலுடன் "என்ன கோமண்ணை இந்த பக்கம்" என்று கூறி முதுகைத் தட்டிச் செல்கையில் பாராளுமன்றப் பணிகளுக்கு அப்பால் சங்கம் வளரவேண்டும். எமது மக்கள் பயன்பெற வேண்டும் என்கின்ற பெருவுள்ளம் அன்று அவரிடம் இருப்பதை நான் அறிவேன். திரு.சின்னத்தம்பி சிவமகாராசா என்பவர் எங்கள் ஊரிற்கு மட்டுமல்ல, இந்த நாட்டிற்காக கூட்டுறவாளர் வீரசிங்கத்திற்கு பின் கூட்டுறவுத்துறை வளர்ச்சியிலும், அரசியல் உரிமைக்காக பாராளுமன்றத்திலும் குரல்கொடுத்து சேவை புரிந்தவர் இதற்குச் சான்றாக அவரின் முயற்சியால் உருவாக்கப்பட்ட "கூட்டுறவிற்கு அறிமுகம்" என்ற நூல் அமைகின்றது.

உள்ளத்தில் தெளிவு கொண்ட நேரான சிந்தனை எப்போதும் இவரிடம் காணப்படும் எதற்கும் பொறுமையைக் கடைப்பிடிக்கும் உத்தமன் இவர். நண்பர்களை நாடு பூராகவும் கொண்ட இவர் எப்போதும் முகமலர்ந்து புன்சிரிப்புடன் நகைச்சுவையாகக் கதை கூறுவார். தன்னம்பிக்கையையும் துணிவையும் கொண்டவராகையால்தான் தனக்குத் துன்பங்கள், துயரங்கள் வந்த வேளையிலும் துவண்டு போகாமல் மக்களுக்காகவே மீண்டும் பாராளு மன்றம் சென்றவர். இதனால் தேசிய தலைவரின் பேரன்பிற்கும், மதிப்பிற்கும் பாத்திரமானார்.

ஒரு சம்பவத்தை அவருடைய பாசறையில் வளர்ந்து அவரது இன்ப துன்பங்களைக் கேட்டவன் என்ற வகையில் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஒரு காலத்தில் தேசியத் தலைவரின் பிள்ளைகள் அனைவரும் வெளிநாட்டில் படிக்கின்றார்கள் என்று அரச ஊடகங்கள் கூறிய சமயம் ஒருநாள் எமது தலைவரைத் தேசியத் தலைவர் அன்பின் நிமித்தம் பார்க்க அழைத்திருந்தார். அன்றைய தினம் உணவருந்திவிட்டு இருவரும் கதைத்துக் கொண்டிருந்தபோது திரு.சிவமகாராசா அவர்கள் தலைவரிடம் "உங்கள் பிள்ளைகள் பற்றி ஊடகங்கள் பேசுவது உண்மைதானா? என வினாவியபோது, "அண்ணை உங்களுக்கு நான் ஒழிக்க மாட்டேன்" எனக் கூறியபடியே தனது மூன்று பிள்ளைகளையும் தானிருந்த இடத்திற்கு அழைத்துச் சென்று தலைவரை மகிழ்வித்திருந்தார். இதை ஏன் சொல்கின்றேன் என்றால் இவரது பணி இவர் மீதான நம்பிக்கை என்பன ஒரு தேசியத் தலைவரால் எவ்வாறு கணிக்கப்பட்டிருந்தது என்பதைப் புலப்படுத்துவதற்கே. இதன் விளைவாகப் பெரும் ஊடகமான நமது ஈழநாடு பத்திரிகைக்கு நிர்வாக இயக்குனர் என்ற பதவியும் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

சில சமயங்களில் இடம்பெயர்ந்து சங்கம் தெல்லிப்பழை 08ஆம் கட்டையில் இயங்கிய காலத்தில் தலைவர் சுந்தர்ராஜனின் மோட்டார் வண்டியில் இருப்பதை வைத்து எங்கு செல்கின்றார் என்று கோவிலடியில் நிற்பவர்கள் சொல்லிவிடுவார்கள். அதுமட்டுமல்லாது நன்றி மறவாப் பண்பும் இவரிடம் நிறைந்து காணப்பட்டது. தனது இளமைக் காலத்தில் இருந்து இறக்கும் வரைக்கும் தனக்கு உதவியவர்களை ஒருபொழுது என்னிடம் அடுக்கிக் கூறியிருந்தார். அதிலும் ஊரிலே அச்சரம் கட்டி சின்னத்துரை என்ற உறவினர் முதல் தெல்லிப்பழையில் திரு.ஆறுமுகநாதன் புசி அண்ணை வரைக்கும் அடிக்கடி கூறுவார்.

சங்கம் இடம்பெயர்ந்த வேளை "ஆறுமுகநாதன் அண்ணை கட்டடங்களை சங்கத்திற்காகத் தந்தவர். அதேபோல் நான் 1999இல் பாராளுமன்றம் செல்வதற்கு பலாலியில் இருந்து இரத்மலானைக்குச் சென்று இறங்கும் போது ஒரு காரைக் கொண்டு வந்து அதில் என்னை ஏற்றி பாராளுமன்றம் அனுப்பி வைத்தவர் புசி அண்ணை நான் காரில் செல்லும்போது வீட்டைச் சுற்றிக் கார் நிற்கின்ற கட்சியைச் சேர்ந்த ஒருவர் முச்சக்கரவண்டியில் வருகை தந்தார். ஆனால் எனக்கு எங்கள் ஊரவர்கள் அப்படிச் செல்ல அனுமதிக்கவில்லை என்று என்னிடம் கூறிய போது ஒரு கணம் மெய்சிலிர்த்தது.

திட்டமிட்ட சதிகள் கூடியிருந்து குழிபறிப்பவர் மத்தியில் எதிர்நீச்சல் போட்டவர் எமது தலைவர் அவரை ஐயா என்று அனேகமானவர்கள் அழைப்பார்கள். அதேநேரம் அவரிடம் ஐயா என்றழைக்க வந்தவர் அழைத்த அதே வார்த்தையால் "வாங்கோ" என்று இன்முகத்துடன் வரவேற்பார். மிகவும் நேர்த்தியாக உடையணிந்த ஒருவர் யாழ்ப்பாணத்தை ஒரு கலக்குக் கலக்கிய பெரிய புள்ளி. இவை பணத்தால் அல்ல தனிப்பட்ட செல்வாக்கில் இவ்வாறாகப் பலதரப்பட்ட நட்பு வட்டம் தலைவருக்கு உண்டு.

2002, 2003 காலப்பகுதியில் பத்திரிகைப் பணியை முடித்துவிட்டு நாவலர் வீதியில் ஆனைப்பந்தி சந்திக்கு அண்மையில் நான் நண்பர் வீட்டில் நிற்பது வழக்கம். என்னைத்

தெல்லிப்பழையில் காணவில்லை என்றால் நண்பர் வீட்டில் நான் நிற்பதாகத் தலைவர் எண்ணுவர். தலைவர் சந்திக்கும் நண்பர் எனக்கும் நண்பர். ஆதலால் ஊர் விடயங்களைத் தொகுப்பதற்கு அவர்கள் என்னையும் தலைவரையும் தேடியபடி இருப்பார்கள்.


ஒரு நாள் வேள்வி கோயில் கொண்டாட்டங்கள், மேளக்கச்சேரிகள், மாட்டுச்சவாரி என்று உங்கள் ஊரில் ஏராளமான நிகழ்வுகளுக்காக மக்கள் தேவையற்று பணத்தைச் செலவழிப்பதாக ஒருவர் கூறியபோது தலைவர், "அதை நீங்கள் தடுக்க நினையாதீர்கள் எங்களுடைய மக்கள் கடின உழைப்பாளிகள் படம் பார்க்கவும் தொடர் நாடகங்களைப் பார்த்து மகிழவும் அவர்களுக்குத் தெரியாது. வருடத்தில் ஒருமுறை இவ்வாறு அவர்கள் கொண்டாடும் போது அவர்களுக்கு மகிழ்ச்சியாக அமைகின்றது. என்னுடைய தந்தையாரும் சவாரியில் பிரபல்யமானவர்தான்" என்று கூறினார். இவ்வாறு நான் பல சந்தர்ப்பங்களில் தலைவருடன் தலைவர் இன்றியும் பலரின் வாயால் கேட்டவற்றை நோக்குகின்ற போது தனது ஊரையும் தனது நண்பர்களையும் விட்டுக்கொடுத்து பேசியதில்லை.

நான் ஒரு நாள் எனது உறவினர் ஒருவரின் வீட்டில் பெரும்பான்மையின் முன்னாள் அமைச்சர் ஒருவரைச் சந்தித்தபோது தானும், தலைவரும் எதிர்க்கட்சி வரிசையில் அருகருகே இருந்த ஆசனங்களில் அமர்ந்திருந்ததாகவும், வடபுலத்தில் உண்மையும் நேர்மையும் உள்ள அரசியல்வாதி என்றால் அது சிவமகாராசா ஆகத்தான் இருக்கவேண்டும் என்று கூறினார். அப்போது தான் உணர்ந்தேன் தலைவரை ஏன் கொன்றார்கள் என்பதை.

தலைவர் ஒரு மூத்த அரசியல்வாதி, புகழ்பூத்த கூட்டுறவாளன், முற்போக்குவாதி , சமூக சேவகன், வலி.வடக்கு மக்களை சொந்த மண்ணில் வாழ வைப்பதற்கெனத் துடியாய்த் துடித்த ஒரு மாமனிதன். சுருங்கக் கூறின் வலி.வடக்கு வாழ் மக்களின் பெரும் பொக்கிசப் புருசர் இவர். இப்போதெல்லாம் அரசியல்வாதிகளுக்கு செருப்புத்தூக்கி சேவகம் செய்யும் தொண்டர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஆனால் செருப்பே இல்லாமல் M.P. ஆக இருக்கும்போதே துவிச்சக்கர வண்டியில் சென்ற ஒருவர் என்றால் அது தலைவர் திரு.சிவமகாராசாதான். அதனால்தான் அவர் இரண்டு சின்னத்தில் போட்டியிட்டுப் பாராளுமன்றம் சென்றிருந்தார். இத்தகைய மனிதன் இன்று இருந்திருந்தால் இந்நேரம் பாராளுமன்றத்தில் இருக்க வைத்திருப்போம். ஆனால் உம்மை சதிகாரரும் விடவில்லை. காலனவனும் விடவில்லை. உங்களைக் கவர்ந்து சென்றுவிட்டனர் வெகுவிரைவில்.

தலைவர் நீங்கள் சாகவில்லை சரித்திரத்தில்
இடம்பிடித்து விட்டீர்கள் வரலாற்றில்
மனிதனாக இல்லை "மா மனிதன்" ஆக.

ஈர விழிகளுடன்
உங்கள் பாசறையில் வளர்ந்த
"இளம்சிட்டு"



# தெல்லிப்பழைக்குப் பெருமை தேடித்தந்த பெரியார் சி.சிவமகாராசா அவர்கள்

யானும் நண்பர் சி.சிவமகாராசா அவர்களும் மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர்கள். நாங்கள் இருவரும் படித்த காலம் தொடக்கம் அன்பு பாராட்டி நட்புரிமையுடன் பழகினோம். அன்று அவரின் மறைவுச் செய்தி எங்களைப் பெரிதும் வாட்டியது.

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு பல அரச சார்பான கட்டட ஒப்பந்த வேலைகள் வந்தது. அத்தகைய வேலைகளை எம்மிடம் தந்திருந்தார் பெரியார் சிவமகாராசா அவர்கள். அவர் ஒப்புவித்த வேலைத்திட்டங்களை எல்லாம் சிறப்பாகவும் மிக நேர்மையாகவும் செய்து கொடுத்தோம். அதனால் சங்கமும் பெயர் பெற்றது. அதேபோல நாமும் பெயர் பெற்றோம். இதனால் நாங்கள் நன்மை பெற்றோம். இதற்கெல்லாம் பக்கபலமாக இருந்தவர் பெரியார் சிவமகாராசா அவர்களே என்றால் மிகையாகாது.

எங்கள் நாட்டு யுத்த நெருக்கடி காரணமாக தெ. பல நோ. கூ.சங்கம் பல இன்னல்களைச் சந்தித்தது. இதனால் இச் சங்கம் பல இடங்களில் இடம்மாற்றி இருந்து பல கஷ்டங்களைச் சந்தித்து செயலாற்றினார்கள்.

பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்து இறுதியாக திரு.சி. சிவமகாராசா அவர்கள் எம்மிடம் வந்து தங்கள் நிலைப்பாட்டைத் தெரிவித்தார். நாமும் தெ.பல நோ. கூ. சங்கம் எங்கள் வீட்டில் முழுமையாக இயங்க முழுமனதுடன் அனுமதியளித்தோம். இதனால் சங்கத்தின் நிர்வாகபீடம், நிதி அலுவலகம், கிராமிய வங்கி, களஞ்சியம், வாகனத் தரிப்பிடம், காவலாளர்கள் தங்கும் இடம் என்பன எல்லாவற்றுக்கும் எங்கள் வீடு இடமளித்தது. தெல்லிப்பளை சந்திக்கு தலைமைச் செயலகம் செல்லும் வரை எங்கள் வீடு பயன்படுத்தப்பட்டது எங்களுக்கும் பெருமையைத் தந்தது. நண்பராக அன்பராக இருந்த சிவமகாராசா அவர்களுக்கு "கூட்டுறவாளர் விருது" வழங்கியபோது


எங்கள் வீட்டிலே ஒரு பெருவிழா நடந்தது. இவ்விழாவுக்கு யாழ்.குடாநாட்டு மக்களே வருகை தந்தனர்.

பெரியார் சிவமகாராசா அவர்கள் மேற்குறித்த நன்றியை என்றும் மறக்கவில்லை. அவர் 2006ம் ஆண்டு அமரரான போது நாம் துன்பப்பட்டோம். இன்று தெ.பல. நோ. கூ. சங்க தலைமைக் காரியாலயத்தில் அன்னாருக்கு சிலை நிறுவுதலும் மலர் வெளியீடு செய்தலும் மிகவும் பாராட்டுவதற்கு உரியது அவரின் பன்முகப் பணி போற்றுதற்கு உரியது.

**தேசகீர்த்தி**
**லயன் ச. ஆறுமுகநாதன்**
**தெல்லிப்பழை**

சிறந்த கல்விமான், அரசியல்வாதி, சிறந்த தொண்டன், ஊடகவியலில் நிபுணத்துவம் என பல்துறை விற்பன்னர். அவரின் செயற்றிறனுக்கு அவரின் வாழ்க்கைக் காலத்தில் அவர் வகித்த பதவிகளே சான்றாகும்.

இவைபற்றியாவரும்நன்கு அறிவர். அமரரைப்பற்றிஓர்வரலாற்றுக் காவியமே படைத்துவிடலாம். எல்லாவற்றையும் இணைத்துக் குறிப்பாகக் கூறவேண்டுமானால் "பிறர் நலனுக்காகத் தன்னலம் கருதாத பெருமகன்" என்றே குறிப்பிட்டுக் கூறிவிடலாம்.



# இவர்கள் தான் வணக்கத்திற்கு உரியவர்கள்

1990ஆம் ஆண்டின் முற்பகுதி என்று ஞாபகம் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையிலான போர் நடந்து கொண்டிருந்த காலமது. இரவு பகலாக ஷெல் அடிகள், விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள், கண்ணி வெடிகள் என பயங்கரச் சம்பவங்கள் நடந்து கொண்டிருந்தன. யாழ்.குடாநாடு தென்னிலங்கையில் இருந்து முற்றாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. இதனால் யாழ்.குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

குடாநாட்டுக்கான தபால் பொதிகள் சுமார் மூன்று மாத காலம் எடுத்துவரப்படவில்லை இதனால் அரச நிறுவனங்கள் வங்கிகள், பொது ஸ்தாபனங்கள் மற்றும் பொது மக்களின் அன்றாட வாழ்க்கை எல்லாமே செயலிழந்து போயின. பெரும் முற்சியின் பலனாக கொழும்பிலிருந்து சுமார் 600இற்கும் மேற்பட்ட தபாற் பொதிகள் செஞ்சிலுவைக் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு அவை பருத்தித்துறை தபாலகத்தில் வைக்கப்பட்டிருந்தன. தபாற் பொதிகள் எடுத்துவரப்பட்ட செய்தி பரவியதும் அரச நிறுவனங்கள், வங்கிகள் பொது ஸ்தாபனங்கள், பொது மக்கள் எனப் பல்வேறு துறையினர் தபால் விநியோகத்தை துரிதப்படுத்துமாறு அழுத்தங்களைக் கொடுத்தனர்.

ஆனால் அன்று நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக தபால் பொதிகளை பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டு வருவதில் சில பிரச்சினைகள் தோன்றின. முதலாவது வாகனப் பிரச்சினை தபால் திணைக்களத்திடம் அந்தளவு எண்ணிக்கையான தபால் பொதிகளை ஏற்றி இறக்கக்கூடிய வாகனம் எதுவும் இல்லை. இரண்டாவது பரவலாக ஷெல் வீச்சுக்கள், விமானத் தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தபால் பொதிகளை எடுத்துவரும் பொழுது அவற்றின் பாதுகாப்புப் பற்றியும் யோசிக்க வேண்டியிருந்தது.

எது எப்படியிருந்த போதும் தபாற் பொதிகளை எடுத்து வந்து விநியோகிப்பதென முடிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக சில வாகன உரிமையாளர்களிடம் உதவி கோரியபோது வாகனங்களின் பாதுகாப்பைக் காரணம் காட்டி அவர்கள் தயக்கம் காட்டினர். இருந்தும் நாங்கள் முயற்சியைக் கைவிடவில்லை. நானும் அப்போதைய யாழ்.தபால் அத்தியட்சகராக இருந்த திரு.கனகசுந்தரமும் அப்போதைய தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக இருந்த திரு.சிவமகாராசாவைச் சந்தித்து நிலமைகளை விளக்கினோம். அவர் பொதுமக்களின் நலன்கருதி கூட்டுறவுச் சங்கத்தின் லொறி ஒன்றை ஒழுங்குபடுத்தி தபால் பொதிகளை எடுத்துவர உதவிபுரிந்தார். நான் மேலே குறிப்பிட்டது போல் அன்றைய பயங்கரமான சூழ்நிலையில் வாகனம் ஒன்றில் பொதிகளை ஏற்றி வருவது என்பது மிகவும் (Risk) அபாயம் ஏற்படக்கூடிய ஒரு நிலையாகும். ஏதும் நடந்துவிட்டால் தபால் பொதிகளும் இல்லை. ஏற்றி வந்த வாகனமும் இல்லை. இத்தனைக்கும் மத்தியில் எதையும் பொருட்படுத்தாது முழுக்க முழுக்க பொதுமக்களின் நலன்கருதி துணிந்து ஒரு வாகனத்தை ஒழுங்குபடுத்தித் தந்தது.

அவரின் பொதுமக்கள் சார்ந்த அக்கறையைக் காட்டுகின்றது. அன்று அந்த ஒரு தனிநபரின் உதவியால் அரச நிறுவனங்களுக்கு வங்கிகளுக்கு பொதுமக்களுக்கு மற்றும் பொது அமைப்புக்களுக்கென அந்தத் தபாற்பொதிகளில் எடுத்துவரப்பட்ட மிகப் பெறுமதிமிக்க பொருட்கள், ஆவணங்கள், கடிதங்கள் காப்பாற்றப்பட்டன. நெருக்கடியான கால கட்டங்களில் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கும் வேளையில் அவர்களுக்கு உதவி புரியும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அதிகாரிகள் தலைவர்கள் தான் போற்றப்பட வேண்டியவர்கள் வணக்கத்துக்குரியவர்கள் அந்தவகையில் எனது பார்வையில் காலஞ்சென்ற தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு.சிவமகாராசாவும் பாராட்டுக்குரியவர் வணக்கத்துக்குரியவர் என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

**இ.திருநாவுக்கரசு**
(ஓய்வுபெற்ற சுன்னாகம் தபாலதிபர்)

கீதையின் உட்பொருளை இயம்ப வல்லவன் நீ
சேவைக்கெனப் பிறந்த வள்ளலே
மக்கள் பணிக்காக வாழ்நாளை அர்ப்பணித்து
வரலாற்றுத் தடம் பதித்த வல்லவனே!



# அமரர் சிவமகாராசாவின் பண்புகள்
## சகோதரி சிந்தனையில்

இவரைப் பற்றி நினைவு கூரும் மிக நல்லநாள் இன்று.

மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு
இவரிடம் உண்டு

செய்ய வேண்டியது - உதவி
எவருக்கும் மறுக்க மாட்டார்

மிகவும் வேண்டாதது - வெறுப்பு
இவரிடம் கிடையாது

மிகப்பெரிய தேவை - சமயோசித புத்தி
இவரிடம் நிறையவே உண்டு

மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
இவர் யாரிடமும் காணமாட்டார்

கீழ்த்தரமான விடயம் - பொறாமை
யாரிடமும் கொள்ளமாட்டார்


நம்பக்கூடாது - வதந்தி
இவர் நம்பவே மாட்டார்

ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு
இவர் அதிகம் பேசமாட்டார் ஆனால் செயலில் காட்டுவது அதிகம்

எல்லோரோடும் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் இருப்பதே
இவரது பண்பு

சாந்தமான மனதில் இருந்து ஊற்றெடுப்பதே - வெற்றி
என்பது இவரில் நாம் கண்ட உண்மை.

**பெரியதம்பி நகுலேஸ்வரி (நவமணி)**



# சேவையால் உயர்ந்தவர் சிவமகாராசா அவர்கள்

மூன்னொரு கால் சீருடனும் சிறப்புடனும் விளங்கிய கிராமம் கொல்லங்கலட்டி. இங்கே தான் விவசாயக் குடும்பத்தில் சின்னத்தம்பி சுந்தரம் தம்பதியர்க்கு மூத்த புதல்வனாகப் பிறந்தவர்தான் அமரர் சிவமகாராசா அவர்கள்.

தன் இளவயதிலேயே அன்பு, கருணை, நேர்மை, நிதானம் செயற்றிறன் ஆகிய நற்பண்புகளைத் தனக்கே உரித்தான அணி கலன்களைக் கொண்டு விளங்கலானார். யாவருடனும் மிகப் பண்பாளனாகப் பழகும் இப்பெருமகன் "கூட்டுறவே நாட்டுயர்வு" எனும் தத்துவத்துக்கு அமைய அடித்தள ஏழை, எளிய மக்களின் வாழ்வுயர அல்லும் பகலும் அயராது உழைக்கலானார். அதன் பயனாக கால்நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவனாகச் செயற்பட்ட பெருமைக்கும் உரிமையானார்.

தனது இளமைப்பருவத்திலேயே அதாவது 1960ஆம் ஆண்டளவில் மாவை கொல்லங்கலட்டி சனசமூக நிலையத்தில் செயற்றிறன் மிக்க செயலாளராக தன்னை இணைத்துக் கொண்டவர். பொதுசன சேவையில் பிரகாசிக்கவும் தொடங்கினார். குடும்பநிலைமையைக் கருத்தில்கொண்டு 1971ஆம் ஆண்டில் தெல்லிப்பழைக் கிராம சபையில் ஓர் லிகிதராகப் பணியைத் தொடங்கி பொதுமக்களின் நல்லபிப் பிராயத்துக்கும், நன்மதிப்புக்கும் பாத்திரமானார்.

இந்தநேரம் தான் தந்தை செல்வாவின் அரவணைப்பும் அவருக்குக் கிடைத்தது. அடித்தள மக்களோடு தன்னையும் இணைத்து மக்கள் சேவகனாகப் பரிணமிக்கத் தொடங்கினார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் விளங்கிய இவ்விளைஞன் தந்தை செல்வாவின் நம்பிக்கைக்கும் நன்மதிப்புக்கும் பாத்திரமானார். அதன்பேறாக

பெரியாரின் பிரத்தியேக செயலாளராகவும் பணிபுரிந்தார். தந்தை அவர்கள் காங்கேசன்துறை தொகுதியில் தொடர்ச்சியாக வெற்றியீட்டவும் முக்கியமானவர்களில் இவரும் ஒருவர் என்பதும் நாடறிந்த உண்மையாகும். அந்த காலத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரபல்யமான நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்திலும் செல்வாக்குச் செலுத்தும் ஓர் பிரமுகராகவும் இவர் விளங்கத் தவறவில்லை.

1981ஆம் ஆண்டில் வலி.வடக்குப் பிரதேச சபைத்தலைவர் பதவியும் இவரை வந்தடைந்தது. மக்கள் சேவையே மகேசன் சேவை என்றுணர்ந்த இப்பெரியார் மக்கள் மத்தியில் மேலும் பிரபல்யமானார். 1991ஆம் ஆண்டில் சுயேட்சைக்குழு ஒன்றின் ஊடாகப் பாராளுமன்றத்திலும் பிரவேசித்தார். 2000ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு இரண்டாவது தடவையாகவும் பாராளுமன்றத்தில் பிரசன்னமானவர் பெரும் சிங்களத் தலைவர்களின் நன்மதிப்பையும் பெற்றார். சாதாரண விவசாயக் குடும்பத்தில் வழிவந்த இப்பெருந்தகையாளன் தனது கடின உழைப்பாலும் உறுதியான சொல்வன்மையாலும் மக்கள் மனதில் உறுதியானதோர் இடத்தைப் பிடித்துக் கொண்டார்.

இவரின் செல்வாக்கை ஜீரணிக்க முடியாத ஓர் கயவர் கூட்டத்தின் அநாகரிகமான செயற்பாட்டிற்கு இலக்கானார். மறைந்தும் மங்காப் புகழ்கொண்ட இப்பெருந்தகையின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி


**வை.சுப்பிரமணியம்**
தலைவர்,
அளவெட்டி மகாஜன சபை
சனசமூக நிலையம்


"வாழ்வெனும் மையல்லிட்டு வறுமையாம் சிறுமை தப்பி
தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது"
என்ற பாடலுக்கு இலக்கியமாக விளங்கிய அமரர் சிவமகாராசா அவர்களைப் போற்றி நிற்போமாக.



# சிவமகாராசாவின் வாழ்க்கைச்சுவடுகள்

யாழ்ப்பாணத்தின் வடகோடியில் அமைந்துள்ள கொல்லங்கலட்டி எனும் எழில்மிகு கிராமத்தில் சின்னத்தம்பி சுந்தரம் தம்பதியரின் மூத்த மகனாக 28.06.1938ஆம் ஆண்டு சிவமகாராசா அவர்கள் இளவாலையில் பிறந்தார். இவரின் தந்தையார் சாமி சின்னத்தம்பி செல்லப்பாசாமியின் ஆத்மீக சிந்தனையில் ஈர்த்து எடுக்கப்பட்ட காலத்தில் ஆண்மகவு கிடைக்கப்பெற்ற பாக்கியத்தை நினைவு கூர்ந்து "சிவ" எனும் இறையடியை முதன்மையாகக் கொண்டு சிவமகாராசா என இறையன்பு மிக்க நாமம் சூட்டினார் என்பது எனது பெற்றோர் வாய்வழியாக வந்த கதை.


திருமதி நகுலேஸ்வரி பெரியதம்பி (நவமணி) திரு.சின்னத்தம்பி கயிலைமகான் (முன்னாள் ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்), திருமதி அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன் (முன்னாள் ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்) ஆகியோரை தன் அன்புச்சகோதரர்களாகப் பெற்று இனிதே வளர்ந்து வரலானார்.

"வளரும் பயிரை முளையில் தெரியும்"என்பதற்கிணங்க நிதானமும் நல்லொழுக்கமும் புத்திக்கூர்மையும் அவரிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்தன. தனக்குச்சரி எனப் பட்டதைச் சொல்வதற்கோ, செய்வதற்கோ அவர் ஒருபோதும் தயங்கியதில்லை. மற்றவர்களுக்கு எச்சந்தர்ப்பத்திலும் தற்துணிவுடன் உதவுவதே அவருடைய உயர் பண்பாக அமைந்திருந்தது.

### குடும்ப வாழ்வில்.....

கொல்லங்கலட்டி வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் அளவெட்டி சின்னத்துரை உபாத்தியார் முன்னிலையில் ஏடு தொடக்கப்பட்ட சிவமகாராசா அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை 1943ஆம் ஆண்டு கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலையில் ஆரம்பித்தார்.

## 1961 இல் குடும்பம்



## சிவமகாராசாவின் சகோதரர்கள்



திருமதி பெ.நகுலேஸ்வரி




திரு.சி.கயிலைமகான்



திருமதி ஞா.அன்னபரிபூரணம்

## மைத்துனர்




திரு.மு.ஞானேஸ்வரன்



திருமதி க.மலைமங்கை

## மருமக்கள்



லம்பிடா. சர்வா. அபர்னா

## சிவமகாராசா கற்ற பாடசாலை (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)



## சிவமகாராசாவிற்குக் கற்பித்த ஆசிரியர்கள்



மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. T.T.ஜெயரட்ணம்



புலவர் நா.சிவபாதசுந்தரனார்



கவிஞர் செ.கதிரேசபிள்ளை



அமரர் சி. சின்னத்துரை



அமரர் A.B. சிற்றம்பலம்

பின்னர் இடைநிலைக்கல்வியை 1947ஆம் ஆண்டு தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் ஆங்கில பாடநெறியில் கற்று சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் சிறப்பாகத் தேறி உயர் கல்வியை தமிழ்மொழி மூலம் மேற்கொண்டார். கல்லூரி வாழ்வில் தமிழ் புலமையினாலும் சிறந்த கட்டுரை எழுதும் ஆற்றலாலும் கவிஞர் கதிரேசபிள்ளை, புலவர் சிவபாதசுந்தரனார் ஆகிய அக்கால மகாஜனாக் கல்லூரி ஆசிரியர்களின் நன்மதிப்பையும் அன்பையும் பெற்று புலமை மிக்கவராகத் திகழ்ந்தது மட்டுமல்ல அவர்களிடம் பெற்ற கல்வியறிவினால் இலக்கியம், நாடகம் மற்றும் கலைத்துறைகளில் அதிகம் ஈடுபாடும் இரசனையும் கொண்டவராக விளங்கினார். அமரர் வே.சிற்றம்பலம், க.சின்னத்துரை ஆகிய ஆசிரியர்களின் வழிகாட்டலில் கல்லூரியில் நடைபெறும் சமய நிகழ்வுகளை முன்னின்று நடத்துவதிலும் ஆர்வம் காட்டியமை அவரது சேவையின் அடித்தளமாக அமைந்தது என உறுதியாகக் கூறமுடியும். மேலும் கட்டுரைப் போட்டிகளிலும் சமய அறிவுப் போட்டிகளிலும் பங்குபற்றி சிறப்புப் பரிசில்களைப் பெற்று மகாஜனாக் கல்லூரி அதிபர் ரீ.ரீ ஜெயரட்ணம் அவர்களின் பாராட்டுக்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சிவமகாராசா தனது பள்ளிக்காலத்திலே உலக தேசிய தலைவர்களின் சுயசரிதைகள், இலக்கிய நூல்கள், சஞ்சிகைகள் போன்ற பல்திறப்பட்ட நூல்களையும் கிளானை பாரதி சனசமூக நிலையத்திலும் மாவை கொல்லங்கலட்டி சனசமூக நிலையத்திலும் கற்று தன் அறிவையும், தமிழ்ப் பற்றையும், தேசிய உணர்வையும் வளர்த்துக் கொண்டார்.

அக்காலத்தில் மாவை சனசமூக நிலையத்தின் முக்கிய காப்பாளராக விளங்கிய அமரர் சரவணமுத்து J.P அவர்களின் வழிகாட்டலில் அருள்நெறிக்கழக அமைப்பாளராகவும், சனசமூக நிலைய, கிராம முன்னேற்ற சங்க செயலாளராகவும் பணிபுரிய ஆரம்பித்து தன்னை சமூக, அரசியல், ஆன்மீக சேவையில் ஈடுபடுத்திக் கொண்டது மட்டுமல்லாமல் கல்வியிலும் கவனம் செலுத்தினார்.

மாணவனாக இருக்கும்போதே பொதுநல சேவைகளில் ஈடுபாடுடையவராக இருந்தவர் என்பதற்கு அப்போது நடந்த ஒரு சம்பவம் நினைவிற்கு வருகிறது. சிரேஷ்ட தராதரப் பரீட்சை (S.S.C) நடைபெற்றுக் கொண்டிருந்த தினத்தில் அதிகாலையில் எழுந்து அப்போதைய கிராம சபைத்தவைர் கதிரையாண்டி (ஆண்டி) மாஸ்ரருடன் இணைந்து தெல்லிப்பழையில் உள்ள ஒழுங்கையைத் திருத்துவதற்கு உதவிசெய்த பின்னரே காலை பரீட்சை மண்டபத்திற்குச் சென்றார் என்பதை பின்னர் அறிந்தபோது அவர் வீட்டிலுள்ளவர்களின் எதிர்ப்பிற்கு உள்ளான போதும் அவரது பொதுநல சிந்தனை இன்றும் பெருமிதம் கொள்ள வைக்கின்றது.

குழந்தைப் பருவத்திலே எமது வீட்டு முற்றத்தில் உள்ள புளியமரத்தின் கீழ் கோவில் அமைத்து வளவு முழுவதும் தோரணங்கள் கட்டி அலங்கரித்து சிறிய குழந்தைகள் நடைபயிலும் வண்டிலில் தேர் அமைத்து தன்னை பூநூல் தரித்த அந்தணராகப் பாவனை செய்து எம்மவரையும் அயலில் உள்ள சிறுவர்களையும் அழைத்து திருவிழாக்கள் கொண்டாடுவது சிவமகாராசாவின் இளமைக்கால செயற்பாடுகளும் வழிபாடுமாகும்.

தன் பதினைந்தாம் வயது தொடக்கம் அதிகாலையெழுந்து காலைக்கடன் முடித்து வெள்ளைநிற நாலுமுழ வேட்டியுடன் பூக்கொண்டு வீரகத்தி விநாயகர் கோவில் வீதி சுற்றி

கும்பிட்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இடப்பெயர்வால் பிள்ளையார் கோவிலுக்கு செல்லமுடியாத நிலையில் தெல்லிப்பழை துர்க்கை அம்மனை தினமும் வலம்வந்து கும்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஒரு தனி மனிதனின் நடத்தைகள் சமூகத்தில் பல்வேறு உறவுகளை ஏற்படுத்திவிடும் அமரர் சிவமகாராசாவை எங்கள் குடும்பத்தினர் "தம்பி" என்றும் மகாராஜபுரம் சந்தானம் அவர்களின் இசையை விரும்பிக் கேட்பதனால் "சந்தானம்" என்றும் அழைத்தனர். பலநோக்கு கூட்டுறவுச்சங்கப் பணியாளர்கள் "தலைவர்" எனவும், மருமக்களான லம்போ, சர்வா, அபர்ணா ஆகியோர் "சொக்கா மாமா" என்றும் அரசியல் வாழ்வில் " ஐயா" என்றும், அந்தணக் குழந்தைகள் "தாத்தா" எனவும் பாசத்துடன் அழைத்தனர்.

அவரது அன்றைய குடும்ப பொருளாதார நிலையைக் கருத்தில்கொண்டு தனது தந்தையாருக்கு வெற்றிலைக் கொழுந்திற்கு நீர்பாய்ச்சுவதற்கும், துலா மிதிப்பதற்கும் பாத்தி கட்டுவதற்கும் உதவிபுரிந்தவர். குடும்ப உறவுகளின் வாழ்விற்காக அமரர் திருநாவுக்கரசு அவர்களால் நடத்தப்பட்ட "யாழ் மெற்றல் இன்டஸ்றீஸ்" என்ற அலுமினிய தொழிற்சாலையில் குறைந்த ஊதியத்திற்குப் பணிபுரிந்தமை மறக்கமுடியாது. வறுமையிலும் செழுமையாக இருக்க விரும்பிய அவர் தனது குடும்பம் சைவ தமிழ் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பேணி நடக்க வேண்டுமென்பதில் மிகவும் உறுதியாக இருந்தார். வீட்டில் பலவிதமான கட்டுப்பாடுகளுடன் வாழ்க்கையை வாழவேண்டுமென எம்மவர் எல்லோரும் வலியுறுத்தப்பட்டனர். தாயார், சகோதரி குடும்ப பணிகளைச் செய்ய முடியாதநிலை ஏற்படும்போது மிக நேர்த்தியாக வீட்டில் சமையல் செய்த நாட்களுமுண்டு. உறவினர்களின் வீடுகளில் நடைபெற்ற சுகதுக்க நிகழ்வுகளை முன்னின்று நடத்தியதோடு, அவர்களது நம்பிக்கைக்குரியவராகவும் அவர்களது துன்பங்களையும் துயரங்களையும் தாங்கி நிற்கும் தூணாகவும் வாழ்க்கை நடத்தியவர் இவர்.

**கூட்டுறவின் குரலாக......**

சிவமகாராசா 1971ஆம் ஆண்டு தெல்லிப்பழைக் கிராம சபையின் நிரந்தர நூலக உதவியாளராகப் பதவி வகித்து அரசசேவையில் தன்னை இணைத்துக் கொண்டார். தொடர்ந்து 1972இல் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைக்குழு, பொதுச்சபை என்பவற்றில் அங்கத்துவம் வகித்ததினூடாக 1978இல் அதன் தலைவராக உயர்ந்தார். சங்கத்தின் செயற்பாடு அபிவிருத்திக்கென பல திட்டங்களை வகுத்து நெறிப்படுத்தி வெற்றியும் கண்டார். அத்தகைய அவரது அயராத உழைப்பின் பயனாய் 22 ஆண்டுகள் தெல்லியூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்து அதன் பெருநிலையைக் கண்டு மனமகிழ்ந்தார்.

வலி.வடக்கு பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவு வைத்தியசாலை போன்ற பல கூட்டுறவு அமைப்புக்களிலும் தலைவராக இருந்து பிரதேச மட்டத்திற்கு தனது கூட்டுறவுப்பணியை விரிவுபடுத்திக் கொண்டார். இதன் பயனாக வலி.வடக்கு வாழ் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கினைப் பெற்று சிறந்த கூட்டுறவாளனாக மதிக்கப்பட்டார்.

# பல்வேறு நிகழ்வுகளில் அமரர் சிவமகாராசாவின் பங்கு...



அமரர் வ.சரவணமுத்து அவர்களும், தந்தை செல்வாவும் அருள்நெறிக்கழக நிகழ்வில்



1968ம் ஆண்டு அருள்நெறிக் கழக பரிசளிப்பின் போது செயலாளராக...




1968ம் ஆண்டு சன சமூக நிலைய திறப்புவிழாவின் போது...

## பல்வேறு நிகழ்வுகளில் அமரர் சிவமகாராசாவின் பங்கு...



கொல்லங்கலட்டியில் நடைபெற்ற அமரர் வன்னியசிங்கம் நினைவு விழாவில்...



முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களுடன்...

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் சுதந்திரமாகவும், ஒற்றுமையாகவும் சமூக மேம்பாட்டிற்காகவும், செயலாற்ற வேண்டுமென்பதில் அதிகம் அக்கறை கொண்டு 1981 இல் மாவட்ட கூட்டுறவுச் சபையின் பணிப்பாளராக இணைந்து மாவட்டத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் , பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்கள், சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்கள் என அனைத்துக் கூட்டுறவாளர்களையும் இணைத்ததுடன் 1986 வரையிலான நெருக்கடியான காலப்பகுதியில் சமாசத் தலைவர் என்ற ரீதியில் அன்றைய போர்ச்சூழலும் தனித்து நின்று சொத்துக்களை இயன்றவரை பாதுகாத்து கூட்டுறவுத்துறையை ஸ்திரப்படுத்தினார்.

போர்ச்சூழலில் பல சவால்களை எதிர்கொண்ட போதும் துணிகரமாக தன் உயிரையே துச்சமென மதித்து கூட்டுறவுப் பணியாளர்களையும் உற்சாகப்படுத்தி அவர்களுடன் தாமும் இணைந்து லொறியில் காங்கேசன்துறை வரை சென்று மக்களுக்கான உணவுப்பொருட்களை ஏற்றி வருவதற்கு அவர் பட்ட இடர்கள் எண்ணிலடங்கா, இந்நிலையில் இலங்கையில் பரீட்சார்த்தமாகத் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றாக தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கமும் தெரிவு செய்யப்பட்டமை அவரது உழைப்பிற்கு கிடைத்த பரிசேயாகும்.

சிவமகாராசாவின் தலைமையில் "கூட்டுறவுக்கோர் அறிமுகம்" எனும் நூல் வெளி வந்தமையும் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 80ஆவது சர்வதேச கூட்டுறவு விழாவின் போது அவர், அமைச்சர் கரு ஜெயசூரியாவினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும், தெல்லிப்பழை மக்களுக்கு தேசிய மட்டத்தில் பெருமை சேர்த்த வரலாற்றுப் பதிவுகளாகும்.

1988இல் தெல்லிப்பழைக் கூட்டுறவுச் சங்க எழுச்சியில் பெருமை பெற்றுவந்த சிவமகாராசாவின் உயிருக்கு அச்சுறுத்தல் நேர்ந்தமை, துர்அதிஷ்டவசமான துன்பியல் நிகழ்வாகும். 28.11.1988 அன்று இனந்தெரியாதோரால் தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட இருந்த சமயம் கூட்டுறவு மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக இந்திய இராணுவத் தளபதி அருண்பிரசாத் அவரை மீட்டு, உயிர் பிழைத்தமை துர்க்கை அம்மனின் அருட்செயலாகும்.

கூட்டுறவுச் சங்கம் என்றால் சிவமகாராசா, சிவமகாராசா என்றால் கூட்டுறவுச் சங்கம் என பிரபல்யம் பெற்றிருந்த சமயத்தில் அரசியல் எதிரணியினரின் சூழ்ச்சியை நம்பிய அரசியல்குழு 1991ஆம் ஆண்டு கூட்டுறவுத் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யும் படியும் பொதுச் சேவையில் இருந்து விலகி இருக்கும்படியும் தடை உத்தரவு பிறப்பித்தது இதனால் சொல்லொணாத் துன்பத்துக்கு ஆளாகி கூட்டுறவுத்தலைவர் பதவியை இராஜினாமாச் செய்தார். பல சவால்களை எதிர்கொண்ட இக்காலம் கூட்டுறவு வாழ்வின் சோதனைக் காலம் என்பதனை "திறந்தவெளிச் சிறைவாசத்தை நான் அனுபவித்துக் கொண்டிருக்கின்றேன்" என்ற அவரின் கூற்றிலிருந்து உணரமுடியும். உலக தேசிய தலைவர்களுக்கு நேர்ந்த சம்பவம் போன்ற இந்நிகழ்வின் தாக்கம் நீண்டகாலம் நீடித்து நிற்கவில்லை "தர்மத்தின் வாழ்வதனை

சூது கவ்வும் தர்மம் மறுபடியும் வெல்லும்" என்ற வாக்கு நிதர்சனமாகி மீண்டும் 1996ஆம் ஆண்டு மக்களால் அதே அரசியல் குழுவின் இணக்கத்துடன் தலைவராக நியமிக்கப்பட்டமை களங்கமற்ற, நேர்மையான சேவைக்குக் கிடைத்த வெற்றியாகக் கொள்ளமுடியும்.

அவரின் கூட்டுறவு சேவைக்கு பங்கம் ஏற்படுத்திய எதிரணியினரை இனங்கண்டபோதிலும் பகைமை காட்டாத உயர்ந்த பண்பு பிறவியின் கொடை என்று கூறினால் அதுமிகையல்ல.

**அரசியல் நெறியில்......**

ஈழத்தமிழர்களின் அரசியல் வரலாற்றில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தோற்றம் ஒரு திருப்புமுனை என்று சொல்லலாம். தந்தை செல்வநாயகம், கோப்பாய் கோமகன் வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன் முதலான தலைவர்கள் ஒன்று சேர்ந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தனர். இக்கட்சியின் ஆரம்பம் தமிழ்த்தேசியம், தமிழர் தாயகம் என்ற கோட்பாடுகள் தோற்றம்பெற்ற பொற்காலம் என்று கூறலாம்.

தமிழரசுக்கட்சியின் தலைவரான தந்தை செல்வா சிவமகாராசாவின் தேசிய உணர்வையும் தமிழ்ப்பற்றையும் தன்னலமற்ற சேவையையும் சரவணமுத்து J.P அவர்கள் மூலம் அறிந்து தமிழரசுக் கட்சியுடன் இணைத்துக் கொண்டார். இதுவே சிவமகாராசாவின் அரசியல் பயணத்தின் ஆரம்பம் என்று கூற முடியும் தந்தை செல்வாவின் அரசியல் பாசறையில் வளர்ந்து தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமென 40 ஆண்டுகளுக்கு மேலாக தன்னை அர்ப்பணித்து போராடிய ஓர் மூத்த அரசியல்வாதியாக மக்களால் கணிக்கப்பட்டார்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென கிராம மட்டங்களில் கூட்டங்களை நடத்தி இனத்தின் விடிவிற்காக குரல் கொடுத்ததோடு தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரான அமரர் கு. வன்னியசிங்கத்தின் நினைவு விழாவை, எமது கொல்லங்கலட்டிக் கிராமத்தில் சிறப்பாக நடத்த வேண்டுமென இந்தியாவிலிருந்து முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ விசுவநாதம் அவர்களை அழைப்பதற்கான ஒழுங்குகளை செய்வதில் முக்கிய பங்கு கொண்டு செயலாற்றி கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களால் செயற்றிறன்மிக்க அரசியல்வாதி என பாராட்டப்பட்டமை மறக்க முடியாத நிகழ்வாகும்.

அமரர் சிவமகாராசா இளைஞர் பேரவையின் தலைவர் என்ற நிலையில் கிளிநொச்சியிலிருந்து சிறைக்கைதிகள் மீண்ட சமயத்தில் யாழ்.கோட்டையில் ஏற்பட்ட மோதலில் இவர் தாக்கப்பட்டு தெருவில் வீசியெறியப்பட்ட போது பாராளுமன்ற உறுப்பினரான அமரர் தர்மலிங்கம் அவர்களின் அன்புக் கரங்களினால் பாதுகாக்கப்பட்டார்.

1975ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் முற்றவெளியில் தமிழராய்ச்சி மாநாடு நடைபெறுவதற்கான பணிகளில் ஈடுபட்டார். மாநாட்டின் இறுதி நாளன்று நடைபெற்ற துர்அதிஷ்டவசமான சம்பவத்தால் அங்கு சிவமகாராசா இறந்து விட்டார் என்ற வதந்தி கேட்டு, வருந்திய நிலையில், மரணித்த மக்களுக்கு உதவிக்கரம் நீட்டி தன்னலமற்ற சேவையை செய்து அவர் வீட்டிற்கு மீண்டபோது, நாம் பட்டது துயரம், ஆனால் அடைந்தது பெருமை.

தமிழரசுக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினராக இருந்து வந்ததுடன், தந்தை செல்வாவின் அறங்காவல்குழு உறுப்பினராகவும், செயல்பட்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டார். காங்கேசன்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் இருந்த வேளையில், அவரின் பிரத்தியேக செயலாளராகக் கடமையாற்றி, மக்களின் தேவைகளை நிறைவுசெய்து சிறந்த அனுபவத்தைப் பெற்றிருந்தார்.

நாட்டில் நிகழ்ந்த போராட்டத்தினால் மக்கள் இடம்பெயர்ந்து அல்லல்பட்டு தவித்த சூழ்நிலையில் பல்வேறு சவால்களை இவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அன்றைய நெருக்கடியான அரசியல் நிலைமையில் சிவமகாராசா அவர்களுக்கு 1989ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட வேண்டும் என அதிகாரம் பெற்ற குழு ஒன்றினால் அழுத்தம் கொடுக்கப்பட்டது. இந்நிலையில் மக்களை விட்டு வெளியே செல்ல விருப்பமின்றி தேர்தலில் போட்டியிடுவது தான் ஒரே வழி எனத் தீர்மானமெடுத்து, சுயேட்சைக்குழுவில் போட்டியிட்டார். இதனால் யாழ்.மாவட்டத்தில் 3ஆவது அதிகபடியான விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். ஆயினும் மிகச் சொற்ப காலத்தில் சூழ்நிலை காரணமாகவும் மக்கள் நலன்கருதியும் பாராளுமன்றப்பதவியை இராஜினாமாச் செய்தார். ஆனால் 2000 ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். மக்களின் மீள் குடியேற்றம் பற்றியும் போரின் அவலங்களில் இருந்து மக்களை மீட்கக் கோரியும், பாராளுமன்றில் குரல் கொடுத்தார். ஆயினும் பாராளுமன்றம் ஒரு வருட காலத்திற்குள் கலைக்கப்பட்டதால் சேவையைத் தொடர முடியவில்லை. மீண்டும் 2001ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக்கூட்டணியில் போட்டியிட்டு சொற்ப விருப்பு வாக்குகளினால் தோல்வியடைந்த போதிலும் மக்கள் இத்தோல்வியில் தமக்கு நம்பிக்கையில்லை என தம் அதிருப்தியைத் தெரிவித்தமை இவருக்குக் கிடைத்த வெற்றியேயாகும்.

தமிழினத்தின் உரிமைப் போராட்டத்திற்கு இணைந்து போராடிய வலி.வடக்கு மக்களின் மீள்குடியேற்றத்திற்காக 2004ஆம் ஆண்டு முதன் முதலாக துர்க்கையம்மன் கோவில் அருகில் அகிம்சை நெறிப்போராட்டத்தை தொடக்கி வைத்த பெருமை இவருக்குண்டு.

18.07.2005இல் யாழ்.கைலாசபதி மண்டபத்தில் நடைபெற்ற பொது அமைப்புக்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தமிழர் உரிமைகளைக் காக்கும் எழுச்சிமிகு பேரணியை நடத்த தீர்மானம் எடுத்தமை, வாழ்வின் இறுதிவரை எடுத்த போராட்ட உணர்வை வெளிப்படுத்துவதாக உள்ளது.

"சிவமகாராசா அவர்கள் தமிழர்களின் உரிமைக்காக அகிம்சை வழியில் போராட்டங்களில் இணைந்து கொண்ட மூத்த அரசியல்வாதிகளில் ஒருவர் அவர் இறப்பு கவலைக்குரியது" எனவும் இந்திய பாராளுமன்ற உறுப்பினர் வை.கோபாலசாமி தமிழருக்கான உரிமைப் போராட்ட ஊர்வல இறுதி நிகழ்வில் கூறியமை என்றும் பெருமைக்குரியதாகும்.

மக்களின் துயர்துடைக்க பல சாத்வீக போராட்டங்களை முன்னின்று நடத்திய விசுவாச முள்ள அரசியல் வாதியான சிவமகாராசாவின் அரசியல் சேவைகள் இன்று இலைமறை காயாக மறைந்தும் மறைக்கப்பட்டும் வருவது துர் அதிஷ்டவசமானதாகும்.

## பன்முக சேவை பற்றிய பார்வையில் ஊடகத்துறை....

அமரர் சிவமகாராசா பத்திரிகையின் இயக்குனராக, தன் ஆளுமையை வெளிக் கொணர்ந்த திறமை இவருக்குண்டு. ஊடகவியலாளர் என்ற வகையில் எந்தப் பிரச்சினையை அணுகும்போதும் எவருடைய உணர்வுகளையும் பாதிக்காத வகையில் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதான சிறந்த அணுகுமுறை பத்திரிகையின் தரமதிப்புக்குக் காரணமாக அமைந்தது. நமது ஈழநாடு பத்திரிகை ஊடாக வெளிநாட்டு ஊடகங்களுக்கு தமிழ் மக்களின் உரிமைக்காக உணர்ச்சியுடன் வெளிப்படுத்திய கருத்துக்களே அவரது உயிர் பறிக்கப்படுவதற்கு காரணமாக அமைந்தது என பலராலும் பேசப்படுவதை அறியமுடிகின்றது. இப்பத்திரிகை அமரர் சிவமகாராசாவின் மறைவிற்குப் பின் வெளிவராமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையில்......

போரினால் ஏற்பட்ட இடப்பெயர்வின் போது மாவட்ட வைத்தியசாலையும் பல ஆண்டுகளாக தற்காலிக இடங்களில் அல்லல்பட்ட வேளைகளில் அமரர் சிவமகாராசா தனி மனிதனாக தெல்லிப்பளைக் கூட்டுறவு வைத்தியசாலைத் தலைவர் என்ற நிலையில் புகலிடம் வழங்கி மாவட்ட வைத்தியசாலைக்கு புத்துயிர் ஊட்டியமை அவரது தனித்துவமான சாதனை ஆகும்.


இவரது சேவை பற்றி அக்கால மாவட்ட வைத்திய அதிகாரி Dr. சிவராணி அவர்கள் தமது இரங்கற் செய்தியில் எமது வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் தலைவர் சிவமகாராசா அவர்கள் தெல்லிப்பழைக் கூட்டுறவுச்சங்கத் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர், எல்லா வற்றிற்கும் மேலாக மனிதநேயப் பண்பாளர், "யதார்த்தமான சமூக நலன் விரும்பி" என்ற பல்வேறு பாத்திரங்களினூடாக (Roles) எமது வைத்தியசாலைக்கு பல்வேறு உதவிகள் புரிந்தவர் வைத்தியசாலை நிர்வாகத்திற்குத் தேவைப்பட்ட போதெல்லாம் தோள் கொடுத்தவர். எமது ஊழியர் நலனோம்பு விடயங்களிலும் கைகொடுத்தவர் எனக் கூறியதிலிருந்து சிவமகாராசா அவர்களின் தன்னலமற்ற பன்முக சேவையை உணரமுடியும்.

## வாழ்வகமும் செஞ்சிலுவைச் சங்கமும்

விழிப்புலனற்றோருக்காக அமரர் செல்வி அ. சின்னத்தம்பி அவர்களின் தியாகத்தில் உருவாகிய "வாழ்வகம்" என்ற அமைப்பின் வளர்ச்சியில் அன்று சிவமகாராசா அவர்கள் செய்த சேவை மறக்கமுடியாதது. வாழ்வகம் தன்னை நிலையாக்கிக் கொள்ள இடமற்றிருந்தபோது அதைக்கட்டியெழுப்ப வேண்டும் என்ற தூர சிந்தனையும், அப்பிள்ளைகளுக்காக அரச நிதியற்ற வேளையில் நிதிவழங்கி கட்டிக்காத்தமையும், கண்ணும் கருத்துமாக தினமும் வாழ்வகத்திற்குச் சென்று அவர்களைக் கவனித்து ஆதரவு வழங்கியமையும் இன்றைய வாழ்வகத்தின் வளர்ச்சியில் அடித்தளமும் அத்திவாரமும் என்பது என்றும் நன்றியுடன் நினைவு கொள்ள வேண்டியதாகும்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவராகவும் புனர்வாழ்வுக் கழக செயலாளராகவும், பிரஜைகள் குழுத் தலைவராகவும், பணிபுரிந்து போர் அனர்த்தங்களினால் துன்புற்ற மக்களின் துயர் துடைக்க நிவாரணங்கள் வழங்கியும் கடன் உதவி பெற்றுக்

## பல்வேறு நிகழ்வுகளில் அமரர் சிவமகாராசாவின் பங்கு...



அமரர் பண்டிதர் நாகலிங்கம் அவர்களின் படைப்பான “செந்தமிழ் இலக்கண விளக்கம்” புத்தக வெளியீட்டு விழாவின் போது...



பரிசளிப்பு விழாவில் அமரர் சிவமகாராசா



தந்தை செல்வா நினைவு விழாவில் மலர்மாலை அணிதல்

# தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய நிகழ்வின்போது...



கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியை சிவமகாராசா வணங்குகின்றார்...



சிவமகாராசா தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய விழாவில் பங்குகொண்டபோது...

கொடுத்தும், சுய தொழில்களை மேற்கொள்ள ஊக்கமளித்தும், றோட்றிக் கழகம் மூலம் வீடுகள் அமைத்துக் கொடுத்தும் மேற்கொண்ட பன்முகப் பணிகள் மகத்தானவை.

### கல்வி

கல்வியில் வளர்ச்சியை ஏற்படுத்த பொருளாதார, சமூக, பண்பாட்டு மாற்றங்கள் அவசியமானவை என்பதை கருத்தில்கொண்டு பாடசாலைகள், கோட்டம், வலயம் ஆகிய கல்வி நிறுவனங்களுக்கு வேண்டிய போக்குவரத்து வசதி நிதி உதவிகளை அவ்வப்போது கூட்டுறவின் ஊடாக வழங்கி கல்வியை மேம்படுத்தினார். மேலும் ஆங்கிலக்கல்விப்பயிற்சி, தொழிற்பயிற்சி என்பவற்றை வழங்கியதோடு வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு கல்வியைத் தொடர ஊக்கமளித்தும் பல்கலைக்கழக இலக்கிய மன்றம் வளர ஆதரவளித்தும் ஆற்றிய பணிகள் கல்விசார் பங்களிப்புக்களாகும்.

### ஆன்மீகம்

திருமண பந்தத்தில் ஈடுபடாது பிரமச்சாரிய வாழ்வை மேற்கொண்ட அமரர் சிவமகாராசா ஆன்மீக நெறியில் பற்றுறுதி கொண்டவராக இறைபக்தியில் நம்பிக்கை கொண்டு ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்ட ஒருவர். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அறநிதிச் சபையின் உறுப்பினராக இருந்து ஆன்மீகத் தொண்டுகள் புரிந்துள்ளார். போரினால் இடம்பெயர்ந்த காலங்களில் துர்க்கை அம்மன் இல்லப் பிள்ளைகளுக்கு கூட்டுறவு மூலம் ஆற்றிய அளப்பரிய சேவைகளை இன்றும் இல்லப்பிள்ளைகள் நினைவு கூருவதைக் காணமுடியும்.

மகாராஜ ஶ்ரீ து. சண்முகநாதக் குருக்கள், சிவஶ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் , பிரம்மஶ்ரீ சுந்தரேஷ்வரக்குருக்கள், கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கலாநிதி அதி வணக்கத்திற்குரிய பேராயர் எஸ்.ஜெபநேசன் ஆகிய ஆன்மீக சிந்தனையாளர்களில் மிக நெருக்கமான அன்பையும் உறவையும் பெற்று அவர்களின் சமய தொண்டிற்கு உறுதுணையாக வாழ்ந்து ஆத்ம திருப்தி பெற்றிருந்தமை வாழ்வின் சிறப்பு அம்சமாகும்.

அமரர் சிவமகாராசா விசுவாசமான நண்பர்களையும் பெற்றிருந்தமை உயர் இலட்சியங்களை அடைய வழிகோலியது. வாழ்வின் பெரும் பகுதி நேரத்தை சமூகத்தோடும், நண்பர்களோடும் ஈடுபடுத்திக் கொண்ட சிவமகாராசா அரசியல், கூட்டுறவு, ஊடகம், ஆன்மீகம் என பலதுறை சார்ந்த நண்பர்களை மட்டுமல்ல அவர் உயிர் காத்த உத்தமர்கள் என பலர் இருந்தபோதிலும் அவர்களை முழுமையாக அறிந்துகொள்வது மிகவும் கடினமான விடயம் எவ்விடத்திலும் நான் சிவமகாராசாவின் சகோதரி எனக் கூறிக்கொள்ளும் சந்தர்ப்பங்களில் மக்கள் காட்டும் அன்பும் உதவியும் கண்ணீர் மல்கி நிற்கும் நிலையும் பிரதேசசபைத் தேர்தலில் எனக்கு அளித்த விருப்பு வாக்குகளும் என் உள்ளத்தை நெகிழ வைத்த நட்பு உணர்வுகளின் பதிவாகும்.

எல்லா நண்பர்களையும் என்னால் கூற முடியாவிட்டாலும் மறைந்த தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம், இலக்கியவாதி அமரர் பொன்.கணேசமூர்த்தி இடர் வந்த சமயத்திலும் பக்கபலமாக துணைநின்ற கூட்டுறவுப் பணியாளர் சுந்தரராஜன்

அந்தணனாகி நின்று அருந்துணை புரிந்த சுந்தரேஸ்வரக்குருக்கள் ஐயா, லண்டன் வாழ் கமலக்கண்ணன், முன் வீட்டில் சகுனம் பிழைக்காது முகம் முளித்து செல்ல உதவிய கணேசன், மதி போன்ற ஒரு சில நண்பர்கள் காட்டிய ஆதரவும் வாழ்வியலில் உறவினர்களான வே.சண்முகநாதன், ஆ.சுதனும் கைகொடுத்துதவிய நிகழ்வுகளும் இன்றும் என் மனதில் பசுமையாக இருப்பதை நினைவு கூருகின்றேன். இச்சந்தர்ப்பத்தில் என் நினைவுக்கு எட்டாத அறியாத நண்பர்களும் நினைவுக்குரியவர்கள் என்பது மறுக்க முடியாது.

மேலும் மைத்துனர்களான உயர்நீதிமன்றில் முதலியார் பதவி வகித்த அமரர் பெரியதம்பி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முன்னாள் அதிபர் மலைமங்கை இ.போ. போசாக்கு சபையில் முன்னாள் லேத்மன் ஆகப் பணிபுரிந்த ஞானேஸ்வரன் ஆகியோர் சிவமகாராசாவை குடும்பத்தின் மூத்த தலைமகனாக ஏற்று அவரது இலட்சியக்கனவுகளை அன்று தொடக்கம் இன்றுவரை நிறைவேற்ற முன்னின்று உழைப்பதும் உயர் அன்பின் வெளிப்பாடுகளாகும்.

இறுதியாக 20.08.2006ஆம் ஆண்டு அதிகாலை துப்பாக்கி வேட்டுக்கு பலியாகிவிட்டார் என்ற செய்தி கேட்டு துர்க்கை அம்மன் கோவிலில் இருந்தவர்களும், கூட்டுறவுப் பணியாளர்களும், உறவினர்களும், மக்களும் ஊரடங்கு சட்டத்தையும் மீறிக்கொண்டு வெள்ளைக் கொடியுடன் கண்ணீர் சிந்தி நின்ற காட்சியை எழுத முடியவில்லை. பயங்கரமான சவால்கள் மத்தியில் ஆயிரக்கணக்கான மக்கள் மரண ஊர்வலத்தில் கண்ணீருடன் சென்ற காட்சியை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை.

**தங்கை**
**அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன்**

"கூட்டுறவுத் துறையில் நாடுயரவுழைத்து சிகரமாவீர்
வந்தோரெலாம் வாழ்வாங்கு வாழ வாரிக் கொடுத்த
பெருந்தகையாவீர்
கற்றோர் சபையும் வியக்கும் வகையில் கடமையுணர்வு
கொண்ட ஊடகவியலாளரானீர்
கருமங்கள் பலவாற்ற ராட்டினமாய் சுழன்று வென்றீர்
சான்றோர் போற்ற வாழ்ந்து இன்று சரித்திரமானீர்"

# கூட்டுறவில்

# தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கீதம்

இராகம்: பூபாளம் தாளம் : ஆதி

பல்லவி

தெல்லிப்பழைக் கூட்டுறவுச் சங்கமெங்கள் சங்கமிதை
அல்லும் பகலும் பாடுபட்டு அயராமல் வளர்த்திடுவோம் - தெல்

அனுபல்லவி

எல்லவரும் கூடியிங்கு என்றும் உறவாடி நின்று
நல்வாழ்வு வாழ்ந்திடவே நமக்குதவும் சங்கமிது - தெல்

சரணங்கள்

தெல்லிப்பழை மயிலிட்டி காங்கேசன் பிரதேச
எல்லைவரையுள்ள மக்கள் எங்கிருந்தாலுமவர்
தொல்லை துயர் துடைத்துக்கை தூக்கிவிடுவதற்கு
வல்லதொரு சங்கமென வளர்த்திடுவோம் நாமே - தெல்

உறவுக்குக் கைகொடுப்போம் உண்மைக்கு உயிர்கொடுப்போம்
பிறருக்குமாக வாழும் பெருமைக்குரியவராவோம்
திறமான சங்க மென்று திசைவென்று நின்றபுகழ்
இறவாமல் காத்திடுவோம் என்றும் உழைத்திடுவோம் - தெல்

நாடுநலம் பெறவும் நம்மவர் உயர்ந்திடவும்
பாடுபடும் ஏழைமக்கள் பதவிகள் பெற்றிடவும்
வாடும் பயிர் வளர்க்கும் வான்மழை போல நாங்கள்
கூடியுழைத்திடுவோம் கோடிநன்மை கண்டிடுவோம் - தெல்


**ஆக்கம்: சைவப்புலவர் சு.செல்லத்துரை**
**இசையமைப்பு : இசைக்கலைமணி ஞானசொரூபன்**



80ஆவது சர்வதேச கூட்டுறவுத் தின வைபவம் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கத் தலைவருமான எஸ். சிவமகாராசா பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அமைச்சர் கரு ஜயசூரியவிடமிருந்து சிறந்த சேவையாளருக்கான விருதினைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். மத்தியில் அமைச்சர் ஏ. ஆர். எம். காதர் காணப்படுகின்றார்.

## கூட்டுறவாளன் அமரர் சிவமகாராசா அவர்கள்

| | | |
|---|---|---|
| 1968 - 1971 | தலைவர் | மாவிட்டபுரம் விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம் (மாவிட்டபுரம் ப.நோ. கூ. சங்கம்) |
| 1978 - 1979 | நியமனத்தலைவர் | தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம் |
| 1979 - 1991 | தெரிவுத்தலைவர் | தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் |
| 1981 - 1989 | தலைவர் | ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சபை யாழ். கிளை |
| 1986 - 1989 | பணிப்பாளர் | ஸ்ரீலங்கா சந்தைப்படுத்தல் சம்மேளனசபை |
| 1988 - 1991 | தலைவர் | வலி.வடக்கு கால்நடை வளர்ப்போர் கூ.சங்கம் |
| 1989 - 1991 | தலைவர் | யாழ். மாவட்ட விளைபொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்க சமாசம் |
| 1989 - 1991 | பணிப்பாளர் | ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபை |
| 1995 - 2000 | தலைவர் | தெல்லிப்பழை ப.நோ.கூ சங்கம் |
| 2003- | தலைவர் | தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் |



# கூட்டுறவுக்கு ஓர் எடுத்துக்காட்டு

யாழ்ப்பாணம் கூட்டுறவுக்குப் பெயர்பெற்ற இடம் திரு.வீரசிங்கம் போன்ற உயர்ந்த கூட்டுறவாளர்களை இந்த மண் உருவாக்கியுள்ளது. திரு.சிவமகாராசாவை நான் அறிய வந்தது கூட்டுறவூடாகத்தான் எழுபதுகளின் கடைசிப் பகுதியில் என்னுடைய துணைவியார் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவு ஒன்றியத்தின் மகளிர் குழுத் தலைவியாக பணியாற்றினார். அவ்வேளையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுடன் எனக்கும் தொடர்பேற்பட்டது. தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்றால் அது சிவமகாராசாவையே குறிக்கும். நான் அறிந்த காலம் வரையும் அவர்தான் அக்கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவராக இருந்துள்ளார். கூட்டுறவுச் சேவைக்காக வாழ்ந்தவர் திரு.சிவமகாராசா.

மாலையில் துர்க்கையம்மனைத் தரிசிக்க நாம் செல்லும் போதெல்லாம் அம்பாளுடைய வாசலிலே அவர் நின்று வழிபட்டுக் கொண்டிருப்பதைக் காணுவது வழக்கம். இப்பொழுது அந்தக் காட்சியினைக் காண்பதில்லை. அவர் புண்ணியம் செய்தவர். இந்த உலகை விட்டுச் சென்று இறைவனுடைய திருத்தாளிலே அமைதி பெற்றுவிட்டார். பாவம் செய்த நாங்கள் இந்த உலகத் துன்ப துயரங்களுக்கு நடுவே இன்னும் இருக்கின்றோம் என்று நியாயப்படுத்தி அமைதி கொள்ளலாம்.

பல கூட்டங்களிலே அவருடன் நானும் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைத்ததுண்டு. அவர் அதிகம் பேசமாட்டார். ஆனால் சொல்ல வேண்டிய விடயத்தைச் சுருக்கமாகச் சொல்லி விளக்கி விடுவார். மாறுபட்ட கருத்து இருப்பின் வெளிப்படையாகச் சொல்லுவார். சில வேளைகளில் தனியாகச் சந்தித்துச் சொல்லுவார். இது தொடர்பாக எனக்கு நேரடி அனுபவமுண்டு. எப்பொழுதும் எங்கும் வெண்மையான ஆடையுடன் தோன்றுவார்.நிமிர்ந்த நடையுடையவர். கூட்டுறவுக்காகவும் சமூக சேவைக்காகவும் தன்னுடைய வாழ்நாளை அர்ப்பணித்த அந்தப் பெருமகன் பார்வதி உடனுறை பரமேஸ்வரனுடைய திருத்தாள்களிலே அமைதியுற அந்த இறைவனையே வேண்டுகின்றோம்.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

# அமரர் சிவமகாராசாவின் 9ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில்

**விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன்**

சிறுவயது முதலே பொதுப்பணிகளில் ஈடுபட்டு, இலட்சிய தாகத்தை வளர்த்துக்கொள்பவர்கள் பின்னாளில் அனைவராலும் போற்றப்படும் தலைவர்களாக உருவாகின்றார்கள். இவர்கள் அரசியல் தலைவர்களாகவும் பரிணமிப்பதுண்டு. இதற்கு அமரர், மாமனிதர் சிவமகாராசா ஓர் உதாரணம். ஆனால் இன்று அரசியல்வாதிகள் பெரும்பாலும் உருவாக்கப்படுகிறார்கள் என்று வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

அமரர் சிவமகாராசா கூட்டுறவுத் துறையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியதோடு, இரண்டு தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்தவர். "நமது ஈழநாடு" பத்திரிகையின் நிர்வாக இயக்குநராகவும் இருந்த அவர் 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். விடுதலைப் புலிகளால் "மாமனிதர்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்ட அன்னாரது நினை வேந்தல் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை தெல்லிப் பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், அமரர் சிவமகாராசா நல்ல தலைவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஒருவர். தனது 22ஆவது வயதில் மாவிட்டபுரத்தில் கிராம முன்னேற்றச் சங்கத்தின் செயலாளராகப் பொது வாழ்வில் பிரவேசித்த அவர் 68 ஆவது வயதில் சுட்டுக் கொல்லப்படும் வரை தனது வாழ்நாளைத் தமிழ்ச் சமூகத்தின் மேம்பாட்டுக்காக அர்ப்பணித்த ஒரு சிறந்த சமூக சேவையாளர். மாவிட்டபுரம் விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கத் தலைவர், தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், வலி.வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர், வலி.வடக்கு பிரஜைகள் குழு ஒன்றியச் செயலாளர் வலி.வடக்கு புனர்வாழ்வுக் கழகச் செயலாளர் என்று இளவயது

முதலே தன்னலமற்ற பொது வாழ்வில் ஈடுபட்டதால் தமிழ்ச் சமூகம் மதிக்கும் தலைவர்களுள் ஒருவராக அவரால் உயர முடிந்தது. அவ்வாறு அவரை மக்கள் அடையாளம் கண்டதால் தான் அரசியலிலும் வெற்றிபெற வைத்து இரண்டு தடவைகள் நாடாளுமன்றத்துக்கும் அனுப்பி வைத்தார்கள்.

ஆனால் இன்றைய சூழ்நிலையில் ஒருவர் திடீரென அரசியலில் நுழைந்து வெற்றிபெற முடிகிறது. சமூகத்துக்கு கடந்த காலங்களில் அவர் ஆற்றிய பணி என்ன என்பதைவிட தேர்தலுக்குச் செலவழிப்பது இப்போது அவரிடம் உள்ள பணம் எவ்வளவு என்பதே வெற்றியைத் தீர்மானிக்கின்றது. நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்கள் மில்லியன் கணக்கான ரூபாக்களை விளம்பரப்படுத்துவதற்காகச் செலவிட வேண்டியிருந்தது. சிவமகாராசா போன்ற சமூகப் பணியாளர்கள் அரசியலில் பிரவேசிப்பதற்கான கதவுகள் அடைக்கப்பட்டு வருகிறது என்றார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டுறவாளருமான அமரர் சி.சிவமகாராசாவின் 9 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற போது வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் மங்கல விளக்கேற்றுவதையும் , அன்னாரின் உருவப்படத்துக்கு மலரஞ்சலி இடம்பெறுவதையும், கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (இ-23)

**நன்றி- வெள்ளி யாழ்.தினக்குரல்**
**21 ஆகஸ்ட் 2015**

ஆயிரத்தில் ஒருவர் சிறப்பாக வலி. வடக்கு மக்களுக்காகவும் பொதுவாகத் தமிழ் ஈழ மக்களுக்காகவும் வாழ்ந்தார். இல்லற வாழ்வில் ஈடுபடாமல் பிரமச்சாரியாகத் தன்னை மற்றவர்களுக்காகத் தியாகம் செய்து வாழ்ந்த பரோபகாரி



# கூட்டுறவாளர் சிவமகாராசா ஐயா அவர்கள் எமக்கு ஓர் நல்வழிகாட்டி

சின்னத்தம்பி சுந்தரம் தம்பதியினருக்கு மூத்த மகனாகப் பிறந்த சின்னத்தம்பி சிவமகாராசா அவர்கள் உண்மையான உழைப்பினாலும் உறுதியான சொல்வன்மையினாலும் தியாக சிந்தனையாலும் மக்கள் மனதில் நல்லதொரு இடத்தைப் பிடித்துக் கொண்டவர். சிவமகாராசா ஐயா அவர்கள் தனது கல்வியைப் பூர்த்தி செய்ததன் பின்னர் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என நினைத்த பெரும் உள்ளங் கொண்டவர். அந்தவழியில் தனது முதலாவது சேவையை மாவிட்டபுரம் கிராம முன்னேற்ற சங்கத்தின் செயலாளராகவும் மாவை கொல்லங்கலட்டி அருள்நெறி கழக அமைப்பாளராகவும் ஆரம்பித்து தொடர்ந்து அவரது சேவை உயர்வடைந்து பல அமைப்புக்களில் பதவி வகித்து 1978ஆம் ஆண்டு எமது தெலலிப்பளை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து பல ஆண்டுகள் தலைவராகப் பதவி வகித்து கூட்டுறவின் நிர்வாகத் திறமையினால் மக்கள் மனதில் இடம்பிடித்தார்.

1990ம் ஆண்டு சுயேட்சைக் குழு மூலம் பாராளுமன்ற உறுப்பினராகவும் மீண்டும் 2000ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டு நாட்டிற்காகவும் கூட்டுறவுத் துறைக்காகவும் பாராளுமன்றில் குரல் கொடுத்தவர் சிவமகாராசா ஐயா அவர்கள். தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் பதவியில் இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்கு முழுநேர தொண்டனாகப் பணிசெய்தவர். சங்கத்தின் பெயரை முன்னிலைக்குக் கொண்டு வந்ததுடன், பல கூட்டுறவாளர்களை உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு. நான் இன்று கூட்டுறவாளனாக இருப்பதற்குக் காரணமாக இருப்பவர் சிவமகாராசா ஐயாவே முதன்மையானவர். நேரிய போக்கு, சாதாரண சுபாவம் கொண்டவர். விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்ற துறைகளைக் கூட்டுறவின் ஊடாக திறம்பட நடத்திப் பல பெரியவர்களின் பற்றுக்கும் பாசத்திற்குரியவர் ஆனார்.

தலைவர் ஐயா 2000ஆம் ஆண்டு பாராளுமன்றில் உரையாற்றிய நேரம் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளருக்குச் சம்பளம் குறைவாக இருப்பதை சுட்டிக்காட்டி அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என உரை நிகழ்த்தியதை நான் அறிந்தேன். அது மட்டுமல்லாது கூட்டுறவில் அதிக காலம் சேவையாற்றிய பணியாளர்களுக்கு பதக்கம் அணிவித்துக் கௌரவிப்பதை நான் கண்டுள்ளேன். அதுமட்டுமல்லாது 25 ஆண்டுகளாக கூட்டுறவில் ஈடுபட்ட கிளைக்குழு பொதுச்சபை உறுப்பினர்களைக் கௌரவித்து வந்துள்ளார்.

வலிகாமம் இடப்பெயர்வுக்கு பின் நான் தலைவர் ஐயாவுடன் மிகவும் நெருங்கிப் பழகியவன். 2003ஆம் ஆண்டு நடைபெற்ற தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குனர்சபை தெரிவின்போது 18-35 வயதுக்கு இடைப்பட்ட இருவரை தெரிவு செய்ய வேண்டிய நிலைமை உருவாக்கப்பட்டது. அப்பொழுது அதில் என்னையும் ஒருவனாக சேர்த்து தேர்தல் முறையில் வெற்றிபெறச் செய்தவர் சிவமகாராசா ஐயா அவர்கள். மோட்டார் சைக்கிளில் என்னுடன் வரும்போது பல பெரியவர்களைத் தேடிச் சந்தித்து வருவார். அவர்களில் ஒரு சிலர் அமரராகி விட்டனர். சிலரை ஞாபகப்படுத்த வேண்டியவனாக இருக்கின்றேன்.

தற்போதைய யாழ்.அரசாங்க அதிபர் அவர்களின் தந்தையார் பண்டிதர் நாகலிங்கம் ஐயா, மில்க்வைற் தொழிலதிபர் கலாநிதி கனகராசா அவர்கள் மக்கள் வங்கி முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி அவர்கள் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், அளவையூர் மோகனா சுந்தரமூர்த்தி அவர்கள், அதிபர் ஆசி. நடராசா அவர்கள், இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் அவர்கள் தெல்லி எஞ்சினியர் தொழிலதிபர் புஸ்பநாதன், வீமன்காமம் செ.வைத்திலிங்கம் ஐயா இவர்களைப் போன்ற பெருமக்கள் சிவமகாராசா ஐயாவின் பேராதரவாளராக இருந்தமையும் இவர்கள் சிவமகாராசா ஐயாவுடன் ஞாபகப்படுத்த வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர். இவர்களைப் போன்று என் பாட்டனாகிய கிராமசபை லிகிதராக இருந்த நாகரத்தினம் அவர்களைப் பற்றி எனக்கு அடிக்கடி நினைவூட்டுவார். அவர் உங்களின் ஒரு சமூக சேவையாளன். அவரது வழியில் நீர் வரவேண்டும் என்று தூண்டுதலாக இருந்தவர் சிவமகாராசா ஐயா அவர்கள். பெரியார் தந்தை செல்வாவின் வழியில் நடக்க வேண்டும் என விருப்பம் கொண்டவர். பாராளுமன்ற உறுப்பினர் அமிர்தலிங்கம் ஐயா அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான இவரின் செயலாளராகவும் இருந்துள்ளார்.

அம்மையார் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாள் அறநிதிய சபையின் உறுப்பினராகவும் துர்க்காதேவி தேவஸ்தானத்தோடு நெருங்கிப் பழகியவரும் இடம்பெயர்ந்த காலத்தில் அங்கு தங்கியிருந்து யுத்த சூழ்நிலையிலும் காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து மா இறக்கிக் கொண்டு வந்து கோயில் முன்புறத்தில் நிறுத்தி வைத்து கச்சேரி பணியாளருடன் அனைத்து பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விநியோகம் செய்த துணிச்சலான மனிதர் தலைவர் சிவமகாராசா ஐயா அவர்களே. நித்தமும் துர்க்காதேவி தேவஸ்தான காலை பூசை வழிபாட்டில் கலந்து கொள்பவர். 2001ம் ஆண்டு தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் சிவமகாராசா ஐயா அவர்களுக்கு கூட்டுறவுக்கு ஆற்றிய சேவையை நினைவு கூர்ந்து பாராட்டி சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதனால் தமக்கும் பெருமை சேர்த்தனர். கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் ஐயா அவர்களின் பணியை

ஞாபகப்படுத்தி அனைத்து கூட்டுறவாளர்களுக்கும் கூட்டுறவே நாட்டுயர்வு என நிலைநாட்டிய மாமனிதர் சிவமகாராசா ஐயா அவர்கள் மகாஜனாக் கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்களுள் இவரும் பாராளுமன்றம் சென்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையின் தலைவராக இருந்தமையினால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையை கூட்டுறவு வைத்தியசாலையில் இயங்குவதற்கு இடமளித்ததை எவராலும் மறக்கமுடியாது. அது மட்டுமல்லாது நடேஸ்வராக் கல்லூரிக்கு கூட்டுறவு வைத்தியசாலையின் வைத்தியர் தங்கும் இல்லத்தை இயங்குவதற்கு இடமளித்த பெருமையும் இவரையே சாரும். தலைவர் சிவமகாராசா ஐயா இதுமட்டுமல்லாது பார்வை அற்ற பிள்ளைகளை நிர்வகிக்க வேண்டும் என்றெண்ணம் கொண்டு வாழ்வகத்தின் நிர்வாக தலைவராகவும் செயற்பட்டவர் சிவமகாராசா ஐயா அவர்கள். இவர் கூட்டுறவுக்கு செய்த சேவையைத் தனது கூட்டுறவின் பதவிக்காலத்திலேயே மறைந்தமையையும் நினைவு கூர்ந்து பத்தாவது ஆண்டில் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் வளாகத்தில் அன்னாரது திருவுருவச் சிலையையும் நிறுவி ஞாபகமலர் ஒன்றையும் வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இப்பணிக்கு நல்லாதரவு வழங்கிய எமது கூட்டுறவுச் சமூகத்தினருக்கும் அன்னாரது உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மிகுந்த கடப்பாடு உடையேன்.

"கூட்டுறவே நாட்டுயர்வு"

**ந.உமாகரன்**
தலைவர்,
தெ.பல நோ.கூ.சங்கம்,
தெல்லிப்பழை

முகத்திலே பொலிவு அகத்திலே அழகு
இகத்திலே மதிப்பு மதிப்பாலே பணிவு
பணிவோடு துணிவு துணிவோடு கனிவு
கனிவோடு கலந்த கனமான வாழ்வு.

## பல்வேறு நிகழ்வுகளில் அமரர் சிவமகாராசாவின் பங்கு...



சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைச்சர் கரு ஜெயசூரியாவிடமிருந்து சிறந்த சேவைக்கான தேசிய விருது பெறல்



கூட்டுறவு விழாவில் சிவமாகாராஜா கலாநிதி A.T. ஆரியரட்னாவை வரவேற்றல்




கூட்டுறவு விழாவில் கம்ப பாரதி ஜெயராஜ் உரை

# வெளியீடுகள்




சேவைநலன் பாராட்டு




சிலை திறப்புவிழா அழைப்பு




நினைவிதழ்

# பாராளுமன்றில் கூட்டுறவின் குரல்

**கௌ**ரவ பிரதித் தவிசாளர் அவர்களே, கூட்டுறவு இயக்கத்தில் நீண்டகால ஈடுபாடுடையவன் என்ற வகையில் இந்தச்சந்தர்ப்பத்தில் நான் கூட்டுறவு இயக்கம் பற்றிய சில கருத்துக்களைச் சொல்லி வைக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன். இந்த நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் கூட்டுறவுத் துறை முக்கிய இடத்தை வகிக்கின்றது. இந்தக் கூட்டுறவுத் துறை சம்பந்தமாக இந்தப் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒரு நிலையான கொள்கையை வகுத்துக் கொள்ளவில்லையென்பதைக் கூறி வைக்க விரும்புகின்றேன். எனக்குத் தரப்பட்ட நேரம் குறுகியதாக இருப்பதனால் சில குறிப்புக்களை மட்டும் கூற எண்ணுகின்றேன்.



கூட்டுறவு இயக்கச் செயற்பாடுகள் இப்போது மாகாண மயப்படுத்தப் பட்டிருக்கின்றன. மாகாண சபைகளுக்கு கூட்டுறவுக் கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட வேண்டும் அவற்றை நாங்கள் சீர்திருத்தினால் தான் கூட்டுறவுத் துறையினால் உண்மையான பொருளாதார வளர்ச்சிக்கு உதவ முடியும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

வடக்கு- கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் அங்கு கூட்டுறவு ஆணையாளர் ஒருவர் மட்டுமே இருக்கிறார். அலுவலர்கள் பெருந்தொகையானோர் பற்றாக்குறையாகவுள்ளனர். 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட ஆளணித் திரட்டுக்கு அமைவாகவே கூட்டுறவு உத்தியோகத்தர்கள் அங்கு இருக்கின்றார்கள். எனவே

ஆளணித் திரட்டு மறுசீரமைக்கப்பட வேண்டும். கூட்டுறவு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். கூட்டுறவுத்துறை உண்மையிலேயே நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிக்கின்ற ஒரு துறையாகும். எனவே அத்துறையை வளர்ப்பதற்கு வேண்டிய உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டிய பொறுப்பு இந்தக் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சுக்கு உண்டு. அந்த வகையில் வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய விசேட வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கௌரவ அமைச்சர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். அம்மாகாண சபையின் கீழ் இயங்கும் கூட்டுறவுத்துறையில் பிரதி ஆணையாளர்களும் இல்லை. ஆகவே மாகாண சபையில் பிரதி ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

கூட்டுறவு அலுவலர்கள் இதுவரை காலமும் கூட்டுறவுப் பரிசோதகர்கள் என்றே அழைக்கப்பட்டு வருகின்றார்கள. Police Inspector, Sanitary Inspector என்பது போல் Cooperative Inspector என்று கூட்டுறவு உத்தியோகத்தர்கள் அழைக்கப்படுகின்றார்கள். இவ்வாறு ஒரு Inspector என்ற வகையில் கூட்டுறவு உத்தியோகத்தர்களைக் குறிப்பிடுவதை மாற்றிக்கொள்ள வேண்டும். அவர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கணிக்க வேண்டும். அவர்களைக் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் என்று அழைப்பதே பொருத்தமானது. ஆனபடியால் அவர்களுடைய பதவிப் பெயரை மாற்றியமைப்பது பொருத்தமானது என்று எண்ணுகின்றேன்.

வருங்காலத்தில் கூட்டுறவுத் துறையைக் கணினி மயப்படுத்த வேண்டும். நவீன கால மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் கூட்டுறவுத்துறை மறுசீரமைக்கப்பட வேண்டும். கூட்டுறவுத்துறை நீண்டகாலமாக முன்னேற்றம் ஏற்படுத்தப்படாமல் கவனிப்பாரற்று கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றது. இந்தக் கூட்டுறவுத்துறையை மறுசீரமைப்பது காலத்துக்கேற்ற தேவையாகும். உற்பத்தித்திறனை வளர்ப்பதற்கேற்ற கல்வித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதுவரை காலமும் பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரி சகல கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கும் கூட்டுறவு அலுவலர்களுக்கும் உரிய பயிற்சிகளை வழங்கி வந்தது. இப்பொழுது அது மாகாண மயப்படுத்தப்பட்டதனால் வவுனியாவில் தமிழ்ப் பகுதிக்கென்று ஒரு கூட்டுறவுக் கல்லூரி நிறுவப்பட்டிருக்கின்றது. இந்தக் கூட்டுறவுக் கல்லூரியின் தேவைகள் அதிகமாக உள்ளன. கூட்டுறவுக் கல்வி விரிவுரையாளர்கள் மற்றும் கூட்டுறவு நூலகம், கல்லூரிக்கு வேண்டிய ஏனைய தளபாட உபகரண வசதிகள் என்பன அங்கு தேவையாக உள்ளன. ஒரு கல்லூரி உடனடியாக ஆரம்பிக்கப்படும்போது அங்கு பல குறைபாடுகள் இருக்கும். அவற்றை நிவர்த்தி செய்வதற்கு விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கூட்டுறவுத்துறையிலே முக்கியமானவர்கள் அதன் பணியாளர்கள். அவர்களுடைய சம்பளம் மிகக்குறைந்த அளவிலேயே இருக்கின்றது. இதனால் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு பல சம்பள மீளாய்வு அறிக்கைகள் வெளிவந்தன. வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் 31/99 ஆம் இலக்க சுற்று நிருபத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட சம்பளம் இன்னும் பணிப்பாளருக்குக் கிடைக்கவில்லை. சம்பள மீளாய்வு

செய்து போது பல்வேறு காரணங்களைக் கருத்தில் கொண்டு எடுத்துத்தான் சம்பளம் கொடுக்கலாம் என்ற நிலை இருக்கக்கூடாது. ஆனபடியால் வடக்கு- கிழக்கு மாகாணத்திலேயுள்ள சகல கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கும் இந்த சம்பள உயர்வு உடனடியாகக் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதைவிட வடக்கு- கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் கூட்டுறவு இயக்கங்கள் இந்த யுத்தத்தினால் பல அனர்த்தங்களை எதிர்நோக்கியிருக்கின்றன. நிதி நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கின்றன. ஆனபடியால் அங்குள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம் மீனவர் கூட்டுறவுச்சங்கம் போன்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிதி வசதி செய்து அவற்றைச் சீராக இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை விரைவாக எடுக்கவேண்டும். ஏனெனில் கூட்டுறவுச் சங்கங்கள்தான் யுத்த காலத்திலும் இயற்கை அனர்த்தங்கள் நிகழ்கின்ற காலத்திலும் மக்களுக்குத் தொண்டாற்றி வருகின்றன. மீனவர்கள் விவசாயிகள் போன்ற பல்வேறு துறையினருக்கு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதில் ஏன் கால தாமதம் ஏற்படுகின்றது என்பது புரியவில்லை. அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் எடுத்து கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வேண்டிய ஓய்வூதியத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்ததாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு இன்னும் பல தேவைகள் இருக்கின்றன. முக்கியமாக கணக்கு வைப்பு முறையில் கட்டுப்பாட்டுப் படிவங்கள் 32,42 என்ற வகையில் பல படிவங்கள் இருக்கின்றன. காலத்தின் தேவைக்கேற்ற வகையில் கணக்கு வைப்பு முறையை மாற்றியமைக்க வேண்டும். அவற்றை கணினி மயப்படுத்த வேண்டும். இந்தப் படிவங்களின் தொகையைக் குறைக்க வேண்டும். சங்க ஊழியர்களின் வேலைப்பழுவை குறைத்து விரைவான சேவை செய்யக்கூடிய வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டு எனது உரையை முடிக்கின்றேன்.

உண்மையில் என் நண்பன்
நல்லதோர் பிறவி - அவர்
உன் எல்லையில்லா பாசமதனை அறிந்திட்டேன்
என் இறுதி நிகழ்வில் என் கலங்கிய முகம் கண்டு.



# எங்கள் வழிகாட்டி கூட்டுறவாளர் அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா

வலிகாமம் வடக்கில் சமூக சேவைக்காகவே தன்னை அர்ப் பணித்துள்ள பெருமைக்குரியவர் அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா அவர்கள்.

சேவை செய்வது மேலான இன்பம் என்றும் இலட்சியத்துடிப்புடன் இயங்குகின்ற உத்தம புருஷர்களில் அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களும் ஒருவராவார்.

இளமை முதலே சமய, சமூக சேவையில் நாட்டம் கொண்ட இவர் சிறந்த கண்ணியம் மிக்கவராகவும் தனது கிராமமாகிய கொல்லங் கலட்டியில் தொடங்கிய சமூக சேவையை வலி.வடக்குப் பிரதேசம், யாழ். மாவட்டம் அகில இலங்கை தேசிய மட்டம் வரை விஸ்தரித்திருந்ததைக் காணமுடிந்தது.

1968ஆம் ஆண்டில் மாவிட்டபுரம் விளைபொருள் உற்பத்தி விற்பனவுச்சங்கத் தலைவராக கூட்டுறவு சேவையை ஆரம்பித்த இவர் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கொல்லங்கலட்டி கிளையினூடாக (கிளை இல.14) பொதுச்சபை உறுப்பினராக ஆரம்பகாலம் முதல் (1972) இன்றுவரை (2006.08.20) சேவையாற்றி வந்த பெருமை இவருக்கு உண்டு.

அத்துடன் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் 1978.02.20 தொடக்கம் தொடர்ந்து 1991.12.08 வரை தலைவராகவும் மீண்டும் 1996.11.01 முதல் 2000.10.13 வரை தலைவராகவும் மீண்டும் 1996.11.01 முதல் 2006.08.20ம் திகதி வரை (அமரத்துவம் அடையும் வரை) தலைவராகவும் இருந்த பெருமைக்குரியவராவார்.

ஏறக்குறைய இருபத்தொரு வருட காலம் தலைவராயிருந்து இந்த நாட்டின் தலைசிறந்த கூட்டுறவுச் சங்கமாக இதனை வழிநடத்தியமை யாவரும் அறிந்ததே.

தெல்லிப்பளை கூட்டுறவுச் சங்கம் என்றால் சிவமகாராசா. சிவமகாராசா என்றால் தெல்லிப்பளை கூட்டுறவுச் சங்கம் என்று எல்லோரும் அறியும் அளவு பிரபல்யம் பெற்றமை இவரது சேவைக்குச் சான்றாகும்.

செயல்வீரன் என்ற சொல்லுக்கு அமைய இவரது கூட்டுறவுச் சேவை தெல்லிப்பளை பிரதேசத்திலிருந்து யாழ்.மாவட்டம் முழுவதும் விரிந்து பரந்து யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் முதலாவது தலைவராக (1989 - 1991) இருந்து அதனை வளர்த்தெடுத்ததும் ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ். கிளைத் தலைவராக (1981-1991) இருந்தும் இயக்குனராக இருந்தும் செய்த சேவையும் யாழ். மாவட்ட விளைபொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் முதலாவது தலைவராக (1982-1991) இருந்து ஆற்றிய அளப்பெரும் சாதனைகளும் மாவட்ட மட்டத்தில் இவரது சேவைக்கு சான்று பகர்வனவாகும்.

யாழ்.மாவட்ட மட்டத்தில் செய்த சேவையின் சிறப்பால் இவரது கூட்டுறவுச் சேவை நாடளாவிய மட்டத்தில் தேசிய மட்ட சேவையாக மலர்ந்தது மட்டுமன்றி, தேசிய முன்னோடியாகவும் இவரை அறிமுகம் செய்தது எனலாம்.

ஸ்ரீலங்கா சந்தைப்படுத்தல் சம்மேளனப் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவு சபைப் பணிப்பாளராகவும் (1989-1991) ஒரு முறை மட்டுமல்லாது மீண்டும் (1991- 2000)சேவைபுரிய வைத்ததும் இவரது திறமைக்கும் சேவைக்கும் கிடைத்த பரிசு எனலாம்.

கூட்டுறவுக்கோர் அறிமுகம் எனும் நூலில் அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா தலைமையில் தெல்லிப்பளை ப.நோ.கூ சங்கத்தின் வெளியீடாக வந்தமை தேசிய மட்டத்தில் பெருமை சேர்த்துள்ள வரலாற்றுச் செய்தியாகும்.

"கூட்டுறவுத்தீபம்" என்னும் சிறப்பு மலர் வெளியிடப்பட்ட இவ்வெளியீட்டு விழாவின் போது அப்போது வலி. வடக்குப் பிரதேச செயலாளராயிருந்த திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் அவர்களால் "பரோபகாரச் செம்மல்" என்னும் பட்டம் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்ட அவரின் சேவைக்கு பெருமை சேர்த்துள்ளது எனலாம்.

போர் அனர்த்தங்களால் துன்புற்ற மக்களின் துயர் துடைப்பதற்காக உருவாக்கப்பட்ட பல அமைப்புக்களிலிருந்தும் மக்கள் துயர் தீர்த்த சேவையாளனும் ஆவார். வலி. வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவராயிருந்து (1988-1991) (1995 - 2000) அதனைத் திறம்பட நெறிப்படுத்தி யாழ். மாவட்டத்தில் முன்னணி சங்கமாக வளர்த்த சேவை மெச்சத்தக்கதாகும்.

எண்ணிலடங்காத வகைகளில் பாதிப்புக்குள்ளான வலி. வடக்கு மக்களுக்கு அபயக் கரம் நீட்டி உதவிய வலிகாமம் வடக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் 1992 முதல் துரித அங்கத்தவராயும் பின் தலைவராயும் இருந்து சேவையாற்றியுள்ளார். வீடில்லாத மக்களுக்கு வீமன்காமம் வீடமைப்புத் திட்டத்தின் மூலம் வீடமைத்துக் கொடுத்தும் இந்திய இராணுவ காலத்தில் உலருணவு நிவாரண விநியோகத்தைப் பொறுப்பேற்று பாதிக்கப்பட்டோருக்கு வழங்கியமையும் மறக்க முடியாத பெரும் பணிகளாகும்.

தமிழ் மக்கள் அனுபவிக்கும் சொல்லொணாத் துன்பத்தையும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியையும் பாராளுமன்றத்தில் இடித்துரைப்பதன் மூலம் இந்நாட்டு மக்கள் எல்லோரும் அறியும்படி செய்யும் உலக நாடுகளுக்கு எடுத்துரைக்கவும் வாய்ப்பாக சுயேட்சைக்குழு 01 இன் மூலம் 1989 பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகச் சேவையாற்றியுள்ளார்.

மீண்டும் 2003 ஆம் ஆண்டு தெல்லிப்பளை பல நோ.கூ.சங்கத்தின் தலைவராக சேவையாற்றி தெல்லிப்பழை சந்தியில் அமைந்துள்ள தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தின் தலைமைக் காரியாலயம் மொத்த நிலையங்கள் என்பவற்றினை எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் 2004.09.15ஆம் திகதி மீண்டும் இயங்க வைத்து இக்கட்டத்தினை மீளத்திருத்தி அமைப்பதற்கு அப்போது யாழ். அரச அதிபராக இருந்த திரு.செ.பத்மநாதன் அவர்களினால் மீள்நிர்மாண சேவைக்காக 80 இலட்சம் ரூபா வரையில் பணத்தினை பெற்று நவீன முறையில் திருத்தியமைக்கப்பட்டு புதிய கட்டடம் 2005.01.24ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட பெருமை அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களையே சாரும்.

அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களின் 20.08.2006ஆம் திகதி அகால மரணமான செய்தி கேட்டு எமது கூட்டுறவுச் சமூகம் ஆழ்ந்த கவலையில் மூழ்கியது. எனினும் இவ்வாறான எங்கள் வழிகாட்டியை நாங்கள் இழந்து நிற்கின்றோம்.

அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா அவர்கள் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மீதுள்ள பக்தியினாலும் துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகத்துடன் வைத்துள்ள தொடர்பினாலும் 11.08.2006 ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க தலைமைக் காரியாலயம், மொத்த நிலையம் என்பவற்றை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இயக்க வைத்தது எங்களால் மறக்க முடியாத ஒன்றாகும்.

**திரு. ச.தனபாலசிங்கம்**
தலைவர்,
தெல்லிப்பழை பல நோ.கூ.சங்கம்,
தெல்லிப்பழை.

வாழ்க்கைப் பாதையில் பல தடைகள்
தடுத்த போதும் அவைகளை என்றுமே
தளராத துணிவோடு தகர்த்தெறிந்தீர்
கொண்ட இலட்சியம் வெல்வதற்காய்

## சிவமகாராஜா தன் நண்பர்களுடன்...



இலக்கியவாதி பொன். கணேசமூர்த்தியுடன்...



உமாகரனுடன் (துற்போதைய சங்கத் தலைவர்)...



சுந்தரராஜனுடன் (கூட்டுறவுச் சங்க பணியாளர்)...

# மரணத்தைச் துச்சமென நினைத்து பொதுச் சேவையில் மரணித்த முதன்மைக் கூட்டுறவாளர்

பிறந்தவரெல்லாம் ஒருநாளில் இறப்பது நிச்சயமான ஒன்றென்பது உலக ஒப்புதல். ஆயினும் இன்று மனித உயிர்கள் எண்ணுக்கணக்கற்று ஏன்? எதற்கு? என்ற காரணமின்றிக் காவு கொள்ளப்படுவதும் அவற்றைப் பற்றிய கரிசனையெதுவும் இல்லாத நிலையும் சர்வசாதாரணமாகி விட்டது. இந்த வகையில் எமது மத்தியிலே ஆறு தசாப்த காலங்களுக்கு மேல் வாழ்ந்து கடந்த 2006.08.20ஆம் நாளில் தனது இன்னுயிர் நீத்த அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களும் அடக்கமாகின்றார்.

அமரர் அவர்கள் சாமானியமான ஒருவரல்லர். அவருடைய வாழ்வு ஒரு சராசரி மனித வாழ்வை விட மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஒரு சமூக நோக்குடையவராக பலதுறை ஆளுமையும் செயற்பாடும் உள்ள ஒருவராக, சமூக முக்கியத்துவம் பெற்ற ஒருவராக அமைந் திருந்தது. எமது நாட்டில் குறிப்பாக தமிழ்ச் சமூக அமைப்புக்களில் அமரர் அவர்களுடைய பங்களிப்பில்லாத துறையே இல்லை எனலாம். அந்த அளவிற்கு அவருடைய சமூகத் தொடர்புகள் பரந்துபட்டு இருந்தது. தலைசிறந்த கூட்டுறவாளனாய், அரசியல்வாதியாய், ஊடகத்துறை சார்ந்த நிர்வாகியாய், ஆன்மீக எடுகோள்களுக்கான ஆலோசகனாய் கல்விசார் நிறுவனங்களின் துணைவனாய் மிளிர்ந்தவர். அமரர் அவர்களுடைய வாழ்க்கையில் கூட்டுறவுத்துறை அவருடன் இரண்டறக் கலந்த ஒன்றாகும். இந்த நாட்டில் இல்லாதவர் என்றொருவர் இல்லை என்ற நிலையினைத் தோற்றுவிப்பதில் கூட்டுறவும் கூட்டுறவுச் ஜனநாயகச் செயற்பாடும் சிறந்தவொரு ஊடகமாகும் என்பதைத் தனது கொள்கையாக வரித்துக் கொண்டவர். அதனாலே தான் ஓர் அரசபணியில் சேவையாளனாக இருந்து பின்னர் தான் ஏற்றுக்கொண்ட அரசியல் கொள்கையில் வடபகுதியின் புகழ்பூத்த அரசியல் தலைவர்களான தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்றோருடன் இணைந்து களமாடினார். கூட்டுறவுத்துறை எழுபதுகளின் பின்னர் அரசு வசப்பட்டு அரச நியமனங்களால்

மறுசீரமைப்பு என்ற வேடத்தில் சின்னாபின்னப்பட்டிருந்த காலகட்டத்தில் அதன் ஜனநாயக சுதந்திரத்துக்காக உரக்க குரல் கொடுத்து எண்பதாம் ஆண்டு காலப்பகுதியில் தெல்லிப்பளைக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மரணிக்கும் வரை அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தலைவராகச் செயற்பட்டார். அதனைத் தொடர்ந்து இலங்கையின் தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ். மாவட்டத் தலைவராகவும், இலங்கையின் தேசிய கூட்டுறவுச் சபையின் மத்திய குழுப் பணிப்பாளராகவும் இறக்கும் வரையும் பல்வேறு முக்கிய பதவிகளை அலங்கரித்தவர்.

அமரர் அவர்களின் பொதுச் சேவையின் பரிமாணமாக எமது நாட்டில் இடம்பெற்ற மூன்று காலகட்டங்களில் வந்த பாராளுமன்றப் பொதுத்தேர்தல்களில் தமிழ்த் தேசியத்தை நேசித்தவராகப் போட்டியிட்டார். முதல் இரு தேர்தல்களில் தமிழ்த் தேசியத்தை நேசித்தவராகப் போட்டியிட்டார். முதல் இரு தேர்தல்களில் வெற்றி பெற்றுப் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியமை அன்னார் இணைந்து கொண்ட கூட்டுறவுத் துறைக்கும் பெருமை சேர்த்தது. அன்னாரின் நிறைவான கொள்கைப் போக்கு அவர் தனது வெற்றியிலும் சரி தோல்வியிலும் சரி ஒரே மாதிரியான போக்கினையே தமதாக்கிக் கொண்ட நிலை சான்றாகும். பல்வேறு காலகட்டங்களிலும் கூட்டுறவுச்சபை தெரிவுகளில் வெற்றியினையும் தோல்வியினையும் சந்தித்துள்ளார். அவற்றையெல்லாம் எந்தவித சலனமும் இன்றி யாவருடனும் சகஜமாகவே பழகுவார். இது அன்னாரது ஆத்மாவின் உண்மையான வெளிப்பாடாகும். வாழ்க்கையில் அவர் பதித்த பதிவுகள் காலத்தால் அழித்துச் செல்ல முடியாதவையாகும். அன்னார் பொதுச் சேவைக்கென தன்னை அர்ப்பணித்தவர் என்பதற்கு அவரது மரணம் கட்டியம் கூறும். தெல்லிப்பளைக் கூட்டுறவுக் கொள்கைப் போக்கினை எடுத்துக்காட்டுவதுடன் என்றென்றும் அவரது சேவையினை நினைவு கூர்ந்து கொண்டேயிருக்கும். கொள்கையில் நிலை நின்று சேவை செய்பவர்களுக்கு அச்சுறுத்தலும் அவதிகளும் சொல்லிக்கொண்டு ஏற்படுவதில்லை என்பதற்கு அமரர் சிவமகாராசாவின் வாழ்க்கையும் மரணமும் சமூகத்துக்கு எடுத்துக் காட்டாகும். அறத்தின் பாற்பட்ட சேவைக்கென தன்னையே அர்ப்பணித்த அமரரின் ஆன்மா இறைவனடியில் சாந்தியடையும்.

**த.சிதம்பரப்பிள்ளை**

முன்னாள் தலைவர்,

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

# கூட்டுறவுக்கோர் இலக்கணம்

"மக்கள் சேவையே மகேசன் சேவை"

என தன் வாழ்நாளை மக்களுக்காக அர்ப்பணித்தவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் சி.சிவமகாராசா அவர்கள். இவர் அடிமட்ட நிலையிலிருக்கும் பாமர மக்களின் ஒத்தாசையுடன் கூட்டுறவின் நன்மையை, பெருமையை, ஒற்றுமையின் வலிமையை ஒருங்கிணைந்து கூட்டுறவின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர். வலிகாமம் வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தைச் சிறப்பாக முன்னெடுத்து மிளிரச் செய்த பெருமைக்குரிய தலைவர் ஆவார்.

இலங்கை வரைபடத்தில் யாழ். குடாநாடு தலையாகப் பிரகாசிக்கிறது. அத்தலையின் உச்சிக்கிரீடம் தான் வலிகாமம் வடக்கு. ஐம்பத்தெட்டு தசம் ஐந்து சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கொண்டது இப்பிரதேசம் "பொன்விளையும் பூமியாக" சகல நிலவளங்களும் நிறைந்திருக்கும் பூமி வெற்றிலைச் செய்கைக்கு பிரசித்தி பெற்ற இடம். வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வணக்கத்தலங்கள், கீரிமலைக்கேணி, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பிரபல பாடசாலைகள், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, மீன்பிடித்துறைமுகம், விமானத்தளம், காங்கேசன்துறைத் துறைமுகம் என்பவற்றை உள்ளடக்கிய கேந்திர வலயம்.

செழிப்புற்றிருந்த இப்பிரதேசம் 1978ஆம் ஆண்டுக்கு பின்னர் யுத்த காரணத்தினால் பெரும் பகுதி பாலைவனம் போல காட்சியளிக்கின்றது. பாதுகாப்புக் காரணங்களுக்காகவென அரசாங்கம் இப்பிரதேசத்தை உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியிருக்கின்றது. இதனால் இப்பிரதேச மக்கள் தங்கள் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது"

எனும் வள்ளுவன் வாக்கிற்கமைய வலி. வடக்கு பிரதேச மதத்தலைவர்கள் புத்திஜீவிகள் கல்விமான்களால் "வலி. வடக்குப் புனர்வாழ்வுக் கழகம்" ஸ்தாபிக்கப்பட்டது. இதன் செயலாளராக அமரர் சிவமகாராசா செயற்பட்டார். இப்பிரதேச மக்களை மீள சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கும் சுயமாகத் தங்கள் தொழில்களை ஆரம்பிப்பதற்கும். நஷ்டஈடுகளை அரசாங்கம் அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொடுப்பதற்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடங்களைப் புனரமைத்துச் சேவை செய்யவும் இக்கழகம் பல முயற்சிகளை மேற்கொண்டது. இதில் அமரர் சிவமகாராசாவின் பங்களிப்பு மகத்தானது.

**சு. பரமநாதன்**
முன்னாள் தலைவர்
வலிகாமம் வடக்கு, புனர்வாழ்வுக் கழகம்

தனிமனிதனாக உலாவி, தனிமையாக வாழ்ந்து, தனக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்து மக்களின் தர்மசாதனமாக விளங்கிவந்த சிவமகாராசா இன்று எமக்கிடையேயில்லை. வீழ்ந்து சரிந்து விட்டது.

ஓர் தியாக பிம்பம், மாவைக்கந்தனது உயர்ச்சிக்கும், கந்தப்பெருமானது ஆலய வளர்ச்சிக்கும். கந்தப்பெருமானது பூசை உற்சவங்கள் என்னதான் தடையிருப்பினும் அவற்றைக் களைந்து எம்பெருமானின் மேன்மை மகத்துவத்திற்கும் தினமும் அயராது தொண்டுசெய்த தொண்டு புத்திரன் இறைவனடி சேர்ந்துவிட்டார். இதேபோல்தான் உலக மகா புருஷனான மகாத்மா காந்தியின் விதியும் அமைந்தது.

# கூட்டுறவுச் சபை ஊழியர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு



மாலை அணிவிப்பவர் சி. கயிலைமகான் (ஆசிரிய ஆலோசகர்)

**யா**ழ்.மாவட்ட கூட்டுறவு சபை ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும், யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் முதலாவது தலைவர், சி.சிவ மகாராசா மற்றும் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் முதலாவது செயலாளர் சு.சிவசுப்பிரமணியம் ஆகியோரின் உருவப்பட திரை நீக்க நிகழ்வும் நேற்று இடம் பெற்றது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு சபை ஊழியர் நலன்புரிச்சங்கத் தலைவர் ந.ஆனந்தராஜா தலைமையில் நேற்று காலை 11.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவுச் சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.


இறைவணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் இராஜாராம் மங்கள விளக்கினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து வரவேற்புரை, தலைமையுரை என்பன இடம்பெற்றது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் இராஜாராம் கூட்டுறவு சபையின் முதலாவது தலைவர் சி.சிவமகாராசாவின் உருவப்பட திரைநீக்கத்தினையும், சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசத்தலைவர் இலகுநாதன் கூட்டுறவு சபை செயலாளர் சு.சிவசுப்பிர மணியத்தின் உருவப்பட திரை நீக்கத்தினையும் செய்து வைத்ததுடன் மலர் மாலை அணிவித்து கௌரவித்தனர்.

யாழ். மாவட்ட கூட்டுறவு சபை செயலாளர் வேதவள்ளி நினைவுப் பேருரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் தலைவர், செயலாளர், முன்னாள் தலைவர், முன்னாள் செயலாளர்கள், அங்கத்தவர்கள் மற்றும் உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


**நன்றி தினமுரசு 19.02.2012**

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமகாராசாவின் சிலைக்கு அடிக்கல்



யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான அமரர் சி. சிவமகாராசாவிற்கு சிலை அமைக்கும் முகமாக அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளை பல நோக்கு கூட்டுறவுச் சங்க வளாகத்தில் நடைபெற்றது.

தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் ந.உமாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சங்கப் பணியாளர்கள், ஊழியர்கள், பொதுமக்கள், உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



தெல்லிப்பழை பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்

கூட்டுறவு விழா

30.06.2001

கூட்டுறவாளர்
திரு.சின்னத்தம்பி சிவமகாராசா(பா. உ.)
அவர்களின்,

சேவைநலன் பாராட்டு விழாவும்

கூட்டுறவுத்தீபம் சிறப்பு மலர் வெளியீடும்.

01.07.2001


கூட்டுறவுப் பெரியார்கள்
சங்கக் கூட்டுறவாளர்கள்
சங்கக் கூட்டுறவுப் பணியாளர்கள்

கௌரவிப்பு விழா

அன்பர்கள், ஆதரவாளர்கள், கூட்டுறவாளர்கள் அனைவரையும் வந்து கலந்து மகிழ்ந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்
தெல்லிப்பழை
23.06.2001

விழாச்சபையினர்



கூட்டுறவாளர்
திரு.சின்னத்தம்பி சிவமகாராசா(பா.உ.)
அவர்களின்,
சேவைநலன் பாராட்டு விழாவும்
கூட்டுறவுத் தீபம் சிறப்பு மலர் வெளியீடும்.

காலம் : 30.06.2001 சனிக்கிழமை பி.ப 2.30 தொடக்கம்
இடம் : சங்க விழா மண்டபம்

தலைவர் :
திரு. ச. தனபாலசிங்கம்(சங்கத் தலைவர்)அவர்கள்

முதன்மை விருந்தினர்கள்
திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்கள்
பாராளுமன்ற உறுப்பினர்(யாழ்.மாவட்டம்)

திரு.மாவை.சோ.சேனாதிராசா அவர்கள்
பாராளுமன்ற உறுப்பினர்(யாழ். மாவட்டம்)

திரு.க.சண்முகநாதன் அவர்கள்
யாழ்.அரசாங்க அதிபர்

நிகழ்ச்சிகள்

அமைதி வணக்கம்
மங்கள விளக்கேற்றல்
கூட்டுறவுக் கீதம்
வரவேற்புரை : திரு.மா.நாகேந்திரசீலன் அவர்கள்
(சங்க உப தலைவர்)

ஆசியுரைகள் மகராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக்குருக்கள்
(மாவை ஆதீனகர்த்தா)

சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள் அவர்கள்
(நகுலேஸ்வர ஆதீனகர்த்தா)

கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.
(ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானத் தலைவர்)

பேராயர்.அருட் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அவர்கள்
(தென்னிந்திய திருச்சபை)

அருட்கலாநிதி.ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள்
அதிபர், இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி

தலைமையுரை : திரு.ச.தனபாலசிங்கம் அவர்கள்.
(விழாச்சபைத் தலைவர்)

விழா நாயகரைக் கௌரவித்தல்

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க (வரைவுள்ளது) முன்னாள் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய

# திரு.சி.சிவமகாராசா

அவர்களுக்கு 30.06.2001இல் நடைபெற்ற
சேவைநலன் பாராட்டு விழாவில்
தெல்லிப்பழை ப.நோ. கூ.சங்க (வரைவுள்ளது)
மகளிர் குழுவினால் பாராட்டி வழங்கிய

# வாழ்த்துப்பா

சிவமகாராசனே நீ வாழ்க - உங்கள்
சேவை நயந்து போற்றி தினம் உமை வாழ்த்துகின்றோம் - சிவ

கூட்டுறவுக் கொள்கைக்கு நீ குன்றம் அன்றோ - மக்கள்
குறையறிந்து நிறைவுசெய்யும் தீரனன்றோ
நாட்டுக் குழைக்கும் தியாக சீலனன்றோ - உம்மை
நாடி வந் தோர்க்குதவும் வள்ளல் அன்றோ - சிவ....

தெல்லிப்பழைக் கூட்டுவுறச் சங்கம் என்றால் - அது
சிவமகா ராஜன் என்றே உலகறியும்
நல்ல சேவை செய்தே நமது சங்கம் - இந்த
நாடுபோற்ற வைத்தபுகழ் உமதல்லவோ - சிவ....

மகளிரின் கல்வி கலைத் திறன் வளர்த்தே - இங்கு
மகளிரின் நலனுக்கு முதன்மை தந்தீர்
பகல் இரவாய் நினைந்து பாடுபட்டே இந்தப்
பாரில் உயர்ந்த சங்கம் ஆக்கி வைத்தீர் - சிவ

**மகளிர் குழு**
தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்

தெல்லியூர் மக்களின் இதயங்களை வென்ற

தனிப்பெரும் தலைவர்

செல்வாவின் வழிகாட்டலில் உதயமாகிய

**திரு. சின்னத்தம்பி சிவமகாராசா (பா.உ)**

அவர்களின்

பலநோக்கங்களோடு நோக்கும் உங்களை
ஒரு நோக்கோடு வசமாக்கி என்றும் இம்
மண்ணில் வாழும் இதயங்களை இதமாக்கி
தென்றலாய் மலரும் நாளும் நம் நாளென்று
அல்லும் பகலும் உழைத்திட்ட நம் தலைவருக்கு
இன்று எடுக்கும் விழா எம் உங்கள்
உவகை பொங்கிடும் விழாவாம் இன்று
விடிந்த காலைப் பொழுதில் எல்லோர்
மனமும் மனமகிழ்ச்சி ஏனெனில் அந்திசாயும்
மாலைப் பொழுதில் நம் தலைவர் சேவையைப்
பாராட்டி உலகைக் காக்கும் துர்க்கை அன்னையின்
மண்ணில் பாராட்டு விழாவாம் அது பாரெங்கும்
போற்றும் பெருவிழைவாம் காலத்தால் அழியாத
பலசரித்திரத்தின் மத்தியில் ஐயாவின் விழாவும்
சந்ததிக்கும் ஒரு வரலாற்று சேவை விழாவாக
அமையட்டும்.

கூட்டுறவாளர்களின் ஏகோபித்த அன்பையும், பண்பையும் ஆதரவையும் பெற்ற நம் தலைவனின் சேவை இன்று போல் என்றும் சேவை புரிய துர்க்கை அன்னையின் அருட்கடாட்சம் விழா நாயகனுக்கு கிடைக்க நாமும் துர்க்கை அன்னையைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்களின் சேவையைப் பாராட்டும்
**க. பரமசிவம்**

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்

தன்னிகரில்லாத தலைவராயிருந்த

"சேவையின் திலகம்"

# திரு. சின்னத்தம்பி சிவமகாராசா

அவர்களைப்

# போற்றி வாழ்த்துவோம்

கூட்டுறவென்னும் கொள்கையின் குன்றம்
நாட்டுயர்வுக்கே நாளும் உழைப்பேன்
மக்கள் பணிசெய்யும் தியாக சீலன்
மக்கள் தொண்டனாய் மலர்ந்த பண்பாளன்
தெல்லிப்பழையின் கலங்கரை விளக்கம்
தந்தை செல்வாவின் நம்பிக்கையாளன்
தமிழினத்துக்கு தன்னை அர்ப்பணித்தோன்
தளரா உழைப்பும் உறுதியும் உடையோன்
தலைமைத்துவத்தின் தத்துவமானோன்
பதினெட்டாண்டுகள் தலைவராயிருந்து
சங்கத்தை வளர்த்த சாதனையாளா! உன்
பன்முகப்பணிகளைப் போற்றி பாரெல்லாம்
நின்புகழ் நிலைக்க வாழ்த்துகின்றோம் நாம்.

**கோகுலன்**
**இளவாலை**

# கூட்டுறவாளர்
# திரு. சின்னத்தம்பி சிவமகாராசா [பா.உ] அவர்களின்
# சேவைநலன் பாராட்டுவிழா வாழ்த்து

இராகம்: ஆனந்த பைரவி தாளம் : ஆதி

பல்லவி

சேவைக்கெனப் பிறந்தவரே சேவையினாலுயர்ந்தவரே
சேவையினைத் தவமாக்கிய சிவமகாராசா வாழ்க

அனுபல்லவி

மாவைப்பதி உதித்தசிவ மகாராசாவே உங்கள்
மாட்சி நயந்து போற்றி மங்கலவிழாவெடுத்தோம்

சரணம்

தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைநீர்
எல்லாத்துறைகளிலும் ஏற்றமுறவைத்ததனால்
நல்லதொரு சங்கமென நாடுபுகழக் கேட்டோம்
வல்லதலைவருமை வாழ்த்தியே போற்றுகின்றோம்

எத்தனையோ பூகம்பங்கள் எங்கள் மண்ணைக் கலக்கிடவும்
அத்தனையும் எதிர்கொண்டே அஞ்சாமல் நிலைத்து நின்று
இத்தரையின் மக்களுக்கே உடல் பொருள் ஆவியென
நித்தமுமே சேவைசெய்த நேர்மைகண்டு போற்றுகின்றோம்.

வலி.வடக்கில் கால்நடைகள் வளர்ப்பவர்கள் சங்கத்திலும்
நலிந்தவர்க்குச் சேவைசெய்யும் செஞ்சிலுவைச் சங்கத்திலும்
வலுவிழந்தோர் புனர்வாழ்வு வழங்குகின்ற கழகத்திலும்
சலியாமற் சேவைசெய்த தலைவருமைப் போற்றுகின்றோம்.

கூட்டுறவின் குரலாய் இந்த நாட்டுப்பாராளுமன்றில்
நீட்டிவாதிட்ட செய்தி கேட்டுப் பெருமை கொண்டோம்
மீண்டும் வலி.வடக்கில் மேன்மையாய் வாழ வழி
காட்டுவீரனென்றேயும்மை கனம் பண்ணுகின்றோம் வாழ்க

தந்தைசெல்வா காட்டிவைத்த சாத்துவிக நெறியில் நின்று
இந்தமண்ணின் விடிவுக்காக இதயசுத்தி யோடுழைத்து
சிந்தனை சொல்செயல்களெல்லாம் தனக்கன்றிப் பிறர்க்காக
எந்தநாளும் அர்ப்பணிக்கும் ஏந்தலே நீ வாழியவே

அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண் என்ற வள்ளுவரின்
சொல்லுக்கிலக்கணமாய் தொண்டுக்கிருப்பிடமாய்
எல்லவரும் மகிழ்ந்தேத்த என்றென்றும் வாழியவே

**இயற்றியவர்: சைவப்புலவர் சு. செல்லத்துரை**
**இசைத்தோர் : செல்விகள் ப. பத்மாதேவமலர், ந.மரியராணி**

# தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## கூட்டுறவாளர்

## திரு. சின்னத்தம்பி சிவமகாராசா (பா.உ.) அவர்களின்

# சேவைநலன் பாராட்டுவிழாச் சிறப்பிதழ்

**1968ஆம் ஆண்டுமுதல் இற்றைவரை கூட்டுறவுத் துறையில் அரும்பெரும் சேவையாற்றியமையைப் பாராட்டு முகமாக இன்று (30-06-2001) சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்குச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு.ச.தனபாலசிங்கம் அவர்களின் தலைமையில் மேற்படி விழா நடைபெறவுள்ளது. இவ்விழாவில் கூட்டுறவுத் தீபம் எனும் சிறப்புமலரும் வெளியிடப்படவுள்ளது.**

## ஆதீன முதல்வரின் ஆசி

தெல்லிப்பழை மக்களுக்கு மட்டுமன்றி ஏனைய பிரதேச மக்களுக்கும் கைகொடுத்து உதவுவதில் நிறைவுகாணும் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நல்லதொரு தலைமைத்துவத்தைக் கொண்டதன் காரணமாகத் திறமையாகச் சேவையாற்றுகின்றது. இப்பணிக்காகத் தன்னை அர்ப்பணித்துச் சேவை செய்யும் திரு.சிவமகாராசா எல்லோருடனும் அன்பாகப் பழகும் பண்பைக் கொண்டவர். இனிமையான பேச்சு, சீரான உடை, எடுத்த கடமையை நிறைவாகச் செய்வதில் மனநிறைவு கொண்டவர். இவரது 25 வருடகால சேவை பலரது துயரங்களைத் துடைக்கக் கூடியதாக இருந்தது.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
நல்லை திருஞானசம்பந்த ஆதீனம்.

## மக்களுக்காக வாழ்பவர்

திருவாளர் சிவமகாராசா அவர்கள் தன் வாழ்வைத் தான் பிறந்த பிரதேசத்தின் மக்களுக்காகவே அர்ப்பணித்து வாழ்வது யாவரும் அறிந்ததே. கூட்டுறவுத்துறையில் அவர் செய்த சாதனைகள் பல. அதில் இலங்கையிலேயே தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்னணியில் திகழ்வதற்கு முழுமையான அவரது சேவையே காரணமாகும்.

சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்
கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா.

## கொள்கைப் பற்றாளன்

திரு.சிவமகாராசா கொள்கைப்பிடிப்பும் மனவுறுதியும் சேவை மனப்பான்மையும் கொண்டவர். தந்தை செல்வாவின் அரும் தொண்டை பக்தி சிரத்தையுடன் கடைப்பிடித்து வருகின்றவர்.

இன்று தெல்லிப்பழை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. மண் வளமும், நீர்வளமும், கல்வி வளமும், பண்பாட்டு வளமும் ஓங்கிய தெல்லிப்பழையின் இன்றைய நிலை வேதனையளிப்பதாகும். இதனை மீட்டெடுத்து தெல்லிப்பழையின் பண்டைய பெருமையைக் காப்பாற்றுவது திரு.சிவமகாராசா போன்ற நாட்டுப்பற்றாளரின் கடமையாகும். திரு.சிவமகாராசா நீடூழி வாழ்ந்து கூட்டுறவுத்துறைக்கும், தெல்லிப்பழைக்கும், தமிழ் மக்களுக்கும் சீரிய தொண்டாற்ற வேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றேன்.

அருட்கலாநிதி எஸ்.ஜெபநேசன்
தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர்.

## தூரநோக்குடன் பணிபுரிபவர்

சிவமகாராசா அவர்கள் நாடறிந்த சிறந்த தலைமைத்துவம் படைத்த கூட்டுறவாளர். தூய்மையான, எளிமையான வாழ்வு வாழ்பவர். மக்கள் சேவையே தன் இலட்சியம் எனக் கொண்டு அயராது உழைத்து வருபவர்.

சொல்லொணாத் தடைகளும், துன்பதுயரங்களும் நிறைந்த போர்க்காலச் சூழ்நிலையிலும் இந்த மண்ணை விட்டகலாது, அஞ்சாது நின்று மக்கள் சேவை செய்து வருபவர்.

கூட்டுறவின் உண்மைத் தத்துவத்தை நன்கு உணர்ந்து அமைதியான, ஆழமான, தூரநோக்குடன் பணிசெய்து வருகின்றார். அண்மையில் நாடாளுமன்றத்தில் அவர் 'கூட்டுறவு மறுசீரமைக்கப்பட வேண்டிய அவசியம்' பற்றி ஆற்றிய உரை அவருடைய ஆளுமையை எல்லோரும் அறிய வைத்துள்ளது.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர்

## செல்வா வழி நடப்பவர்

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாகக் கூட்டுறவுச் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கூட்டுறவுக்காக உழைத்தவர் திரு.சிவமகாராசா அவர்கள். எந்தவொரு தன்னலமும் கருதாது மக்களின் சேவையே மகேசனின் சேவையென்று பணியாற்றினார். திரு.சிவமகாராசா அவர்கள் இரண்டு முறை நாடாளுமன்றத்திற்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்டார். மறைந்த தந்தை செல்வா அவர்களின் வழியில் நடப்பதையே தான் கொண்ட கொள்கையாக இருந்தார். அவர் எங்கு சென்றாலும் மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்.

க.சண்முகநாதன்
யாழ்.அரசாங்க அதிபர்.



## விழா நாயகரின் சமூக சேவைக் குறிப்புகள்

- 1938.06.28இல் திரு.சின்னத்தம்பி சுந்தரம் தம்பதியரின் மகனாகப் பிறந்தார்.
- 1960களில் மாவிட்டபுரம் கிராம சங்கம், மாவை கொல்லங்கலட்டி ச.ச.நிலையம், மாவை கொல்லங்கலட்டி அருள் நெறிக் கழகம் என்பவற்றில் செயலாளர், அமைப்பாளர் பதவிகளில் சேவை செய்தார்.
- 1968 முதல் 1999 வரை தெல்லிப்பழை கிராமச்சங்கத்தில் உத்தியோகம்.
- 1969இல் மாவிட்டபுரம் விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கத் தலைவராகக் கூட்டுறவுத் துறையில் பிரவேசித்துப் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு பதவிகளை வகித்தும் சிறப்பாக 18 ஆண்டுகளாகத் தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்தின் தலைமைப் பதவியை வகித்தும் சங்கத்தை முன்னணிச் சங்கமாகத் திகழவைத்தார். வலிகாமம் வடக்கு கால் நடை வளர்ப்போர் சங்கத் தலைவராயும், வலிகாமம் வடக்கு சென்சிலுவைச் சங்கத் தலைவராயும் இருந்து பெரும்பணியாற்றினார். யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை, விளைபொருள் உற்பத்தி கூ.சங்க சமாசம் என்பவற்றின் தலைவராயும், ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை, ஸ்ரீலங்கா சந்தைப்படுத்தல் சம்மேளன சபை என்பவற்றின் பணிப்பாளராயும் சேவை செய்தார். வலி வடக்குப் பிரதேச சபைத் தலைவராயும், தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைத் தலைவராயும் பணிபுரிந்தார். வலி வடக்குப் பண்பாட்டுக் கழகம், வலி வடக்குப் பிரஜைகள் குழு என்பவற்றின் செயலாளராகவும் தலைவராகவும் சேவை செய்தார்.
- 1989இலும் 2000த்திலும் நடைபெற்ற இலங்கை நாடாளுமன்றப் பொதுத்தேர்தல்களில் யாழ் மாவட்ட நாடாளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுத் தற்போதும் சேவை செய்கின்றார்.

திரு.ச.தனபாலசிங்கம்,
தலைவர், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்.

## மக்கள் சேவையாளன்

சி.சிவமகாராசா அவர்கள் கூட்டுறவுத்துறையில் மிக நீண்ட காலமாகத் தன்னை ஈடுபடுத்தி அதன் மூலமாக மக்கள் பணியாற்றியவர். இவரது தலைமையின்கீழ் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 'கூட்டுறவுத்திலகம்' என்ற நாமத்தைப் பெற்றதுடன் மூலம் கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிப் போக்கில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. திரு.சிவமகாராசா அவர்களின் மக்கள் சேவை அவரை நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ஸ்தானத்திற்கு உயர்த்தியுள்ளமை அவரின் சேவைக்கு அங்கீகாரம் கிடைத்ததின் வெற்றி என்றே கொள்ளவேண்டும். அவரின் மக்கள் சேவை தொடர எனது நல்வாழ்த்துகள் பல.

செ.கு.சண்முகநாதன்
யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

## தர்மங்களால் உயர்ந்தவர்

சிவமகாராசா அவர்கள் 'உச்சிமீது வானிடிந்து வீழ்கின்ற போதினும் அச்சமில்லை அச்சமில்லை' என்ற தாரக மந்திரத்தை ஏற்று பிறந்த மண்ணிலேயே நின்று உடன் பிறப்புகளோடு இணைந்து, உடல், பொருள், ஆவி அத்தனையாலும் அல்லலுற்றோரது இடர்களை முனைந்து தன்னாலான தொண்டுகளால் களைந்து காலத்தால் ஆற்றிய தர்மங்களால் சிவமகாராசா உயர்வு பெறுகிறார்.

மகாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள்
மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் ஆதீனகர்த்தா.

## தன்னலங்கருதாத் தியாகி

உண்மையான உழைப்பினாலும், உறுதியான சொல்வன்மையினாலும், தன்னலங்கருதாத் தியாக சிந்தையினாலும், மக்கள் மனதில் உறுதியான ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர் பெரியவர் சிவமகாராசா அவர்கள். ஆரம்பத்தில் தந்தை செல்வா அவர்களின் அறநெறிப்பாதை இவருக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கலாம். அந்த சொல்லின் செல்வரும், சொல்வீரருமாகிய அமரர் அமிர்தலிங்கத்தின் வழிகாட்டல் இப்பெரியவரை இந் நிலைக்கு உயர்த்தி விட்டதெனலாம். தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத்தில் கால்நூற்றாண்டுக்கு மேலாகக் [illegible]

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி.

## கலங்கரை விளக்கு

'சேவை செய்வதே மேலான இன்பம்' என்னும் இலட்சியத்துடன் இலங்குகின்ற உத்தம புருஷர்களில் திரு.சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களும் ஒருவராவர். இவரை வலிகாமம் வடக்குப் பிரதேசத்தின் 'கலங்கரை விளக்கு' என்று குறிப்பிடுவதுதான் மிகவும் பொருத்தமானது ஆகும்.

இவர் நல்ல உடல், உள நலத்துடன் நீடூழி காலம் எம்மத்தியில் வாழ்ந்து, தன்னலமற்ற உன்னத சேவையைத் தொடர்ந்து தம் இப்பிரதேச வாசிகளுக்கு ஆற்றி அகமகிழ்ந்திட நான் இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்
இளவாலை மறைமாவட்டக் குருமுதல்வர்.

## கூட்டுறவின் வழிகாட்டி

இலங்கையில் கூட்டுறவுத்துறை, யாழ்ப்பாணத்திலேயே எடுத்துக்காட்டாக வளர்ந்து, உயர்ந்து விளங்கியது வரலாறாகும்.

அந்த வரலாற்றுச் சுவடுகளின் அடியொற்றித் தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கமும் ஈடுகொடுத்து மக்களுக்கு, அதுவும் போர்ச் சூழலில் அல்லற்பட்டு ஆற்றாது தவிக்க நம் தமிழ் மக்களுக்கு ஆறுதலளித்து வாழ்வளிக்கின்றதென்றால் அது பாராட்டுக்குரியது தான். இத்தகைய பாராட்டுக்குரிய கூட்டுறவுச் சங்கத்தை வழி நடத்துவதில் பெரும்பங்களித்த திரு.சிவமகாராசா அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

மாவை சேனாதிராசா
தமிழர் விடுதலைக் கூட்டணி
நாடாளுமன்ற உறுப்பினர்

## சிறந்த பண்பாளன்

அமைதியான போக்கும், சிறந்த பண்பும் கொண்ட இவர் கூட்டுறவு ஊழியர்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குப் பெற்றவர். அவரது செல்வாக்கு தெல்லிப்பழைக் கிராமத்தோடு மட்டுமல்லாது யாழ்குடாநாடு முழுவதும் பரவியிருந்ததையும் நான் நன்கு அறிவேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினராக இன்று அவர் கூட்டுறவாளர்களின் பிரதிநிதியாகவே நான் அவரைக் காண்கின்றேன். தற்போது வகிக்கும் பதவி காரணமாக அவர் தனது தலைமைப் பதவியைத் துறந்தாலும் கூட்டுறவுத்துறைக்கு அவரது தொண்டு தொடர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. பூரண ஒத்துழைப்பு அவருக்கு என்றைக்கும் உண்டு என்றும் கூறி அவர் பல்லாண்டு வாழ்ந்து, பல தொண்டு செய்ய நீண்ட ஆயுளைக் கொடுக்க இறைவனை வேண்டுகிறேன்.

வி.ஆனந்தசங்கரி
நாடாளுமன்ற உறுப்பினர்,
தமிழர் விடுதலைக் கூட்டணி
சிரேஷ்ட துணைத் தலைவர்

எங்கும் எதிலும் செந்தண்மையையும் சமூக நலனையும் ஓங்கி நின்றவர் அமரர் சிவமகாராசா அவர்கள். "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று வாழாமல் வாழ்க்கையை நேர்பாதையில் அமைத்துக் கொண்டவர். இவர் தினமும் காலையில் எழுந்து கடவுளைத் தொழுது கருமங்களை ஆற்றத் தொடங்குபவர். இவர் வைரவிழாக் கண்ட இவருக்கு தமிழ் மண்ணின் நாலாதிசைகளிலும் இருந்து வாழ்த்தொலிகள் பறந்துவந்தன. ஆனால் அவற்றிலே மயங்கி நின்றவர் அல்லர். பேசுவது சொற்பம். செயலாற்றுவது அதிகம். இத்தகைய செயலாற்றும் திறமை வளர்த்துக் கொண்ட திறமை தந்தை செல்வாவிடமிருந்து இவருக்குக் கிடைத்தது.


பன்னிரண்டு வயதிலேயே பாடசாலைப் படிப்போடு சமூக நலன்பேணும் திறமையும் ஒன்றாக ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் இவருடைய பெரும்பாலான நேரம் தந்தை செல்வாவின் இல்லத்திலேயே கழிந்தது. அன்னாரின் வழிகாட்டலில் ஒவ்வொரு அடியும் அவரால் எடுத்து வைக்கப்பட்டது. "காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே" என்பதை நன்கு உணர்ந்திருந்தவர் இவர். "இளையான் அடக்கம் அடக்கம்" என்றநிலையில் அன்புக்கும் அறிவுக்கும் பண்புக்கும் முதன்மை கொடுத்து தனது வாழ்வை அறவழிச் சார்பில் ஆரம்பித்தவர் இவர்.

# அரசியலும் ஆன்மீகமும்

# ஆன்மீகப் பணியில்



இந்துக் குருமார் ஒன்றியத் திறப்பு விழாவில் அமைச்சர் மகேஸ்வரனுடன் கலந்துகொண்ட போது...



துர்க்கை அம்மன் ஆலய நிகழ்வில் மில்க்வைற் கனகராஜாவுடன்...



துர்க்காபுரம் இல்லச் சிறுமிகள் நிகழ்வில் பங்கேற்பு...

# தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய நிகழ்வுகளில்



கோவிலில் தவில், நாதஸ்வர வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட வேளையில்...



துர்க்கா மகளிர் இல்ல கட்டட திறப்பு விழாவில்...



1982 இல் துர்க்காதேவி மகளிர் இல்ல கட்டட விழாவில்
மங்களவிளக்கேற்றுகையில்...



துர்க்காதேவி மகளிர் இல்லக் கட்டடத் திறப்பு விழாவில்...

# நினைவுச் செய்திகள்

**உத்தம தர்மபுருசன்**

.... அமரர் சிவமகாராசா ஆண்மை, விவேகம், சாதுர்யம், சகவாசம், நேர்மை, குருபக்தி, நாட்டுப்பற்று எனுமிருக்கும் பண்புகளால் உயர்ந்து நின்றார். தந்தை செல்வா இவரை அவதானித்து தனது பிரதம சிஷ்யனாக அமைத்து, அரசியல் ஞானம் மூலம், சமய சேவை, சமூக சேவை, அரசியல் சேவை என்றெல்லாமுள்ள கல்வியை கற்பித்து சிவமகாராசாவை தன்னோடு எந்நாளும் இணைத்து ஓர் உத்தமபுருஷனாக இவர் வளர்த்தார்.

**மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள்**

**தியாகம் செய்து வாழ்ந்த பரோபகாரி**

... அமரர் சின்னத்தம்பி சிவமகாராசா அவர்கள் தனக்கென வாழாது தன்னை அர்ப்பணித்து மற்றவர்களுக்காகவே வாழ்ந்த உத்தமர். ஆயிரத்தில் ஒருவர் சிறப்பாக வலி.வடக்கு மக்களுக்காகவும் பொதுவாகத் தமிழ் ஈழ மக்களுக்காகவும் வாழ்ந்தவர்.

**சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்**

**தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தவர்**

.... அமரர் சிவமகாராசா தன்வழியில் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தவர். வழிகாட்டியாக வாழ்ந்த உத்தமர். தக்க சமயத்தில் பிறர்க்கு உபகாரம் செய்வது கடவுளுக்கு பூஜை செய்வதற்கு ஒப்பாகும். எதற்கும் அஞ்சாத துணிவு, பூரணமான நேர்மை, இலாப நஷ்டம் பார்க்காத சமர்ப்பணம் நிரூபணம் கேட்காத விசுவாசம் யோக பாதையில் நடக்க இன்றியமையா தேவைகள் இவை அனைத்தும் சேர்ந்த ஓர் உத்தமர்.

**சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்**

**சமூக நலனையும் ஓங்கி நின்றவர்**

..... அமரர் சிவமகாராசா நடையிலே ஒழுங்கு, உடையிலே ஒழுங்கு, உணவிலே ஒழுங்கு இருப்பிடத்திலே ஒழுங்கு, நட்புக் கொள்வதிலே ஒழுங்கு, பேச்சிலே ஒழுங்கு, எல்லாவற்றையும் மேலாக வழிபாட்டிலே ஒழுங்கு இப்பெரியாரிடத்திலிருந்து அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

**நிபுணத்துவம் வாய்ந்தவர்**

அமரர் அன்பு, கருணை, நேர்மை, நிதானம், செயற்றிறன் முதலிய பண்புகளே உருவாகக் கொண்டு தன் வாழ்க்கைப்புலத்தை நெறிப்படுத்தி வாழ்ந்தவர். சிறந்த கல்விமான், செயற்றிறன் மிக்க அவதார புருடர் எளிமையான தன்மை கொண்டவர் சிறுவர்களில் இருந்து முதியோர் வரை யாவரையும் சமமாக மதித்து பழகும் தன்மை வாய்ந்தவர்.

**வணபிதா க. ஜேம்ஸ் சிங்கராயர்**
**அதிபர் புனித ஹென்றியரசர் கல்லூரி**

**எளிமையின் வடிவமாய் சிரித்த முகத்துடன்**

மிகப் பண்பாக பழகும் இப்பெருந்தகை கூட்டுறவுத் துறையூடாக ஏழை மக்களுக்கு உதவுவதில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டார். எவர் உதவி கேட்டாலும் தன்னால் இயன்ற உதவி செய்யும் இவரது சுபாவத்தை பாராட்டாதவர்கள் இல்லை.

**செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்**

**குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை**

அமரர் சிவமகாராசா சாதாரண மக்களோடு மக்களாக சேவகனாக "கூட்டுறவே நாட்டுயர்வு" என்ற கோட்பாட்டிற்கு இணங்க வாழ்ந்து காட்டிய பெருந்தகையின் மரணம் இயற்கையாய் நிகழ இடமளிக்கப்படவில்லை என்பது மிகுந்த மனவேதனை அளிப்பதாக உள்ளது.....

**S.கணேஷ்**
**முன்னாள் அரசாங்க அதிபர்**

**அளப்பரிய அவரது பணிகளில்**

அமரர் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்ததுவும் என்றும் நினைவுகூரத்தக்கதாகும். அளப்பரிய அவரது பணிகளில் ஒரு சிலவற்றையே எண்ணி நினைவுகூர்ந்தேன். அவரது பணிகள் மக்கள் மனங்களில் நிறைந்து என்றும் சிறப்புற நினைவு கூரப்படும்.

**சு. முரளிதரன்**
**முன்னாள் பிரதேச செயலாளர்**

**குணத்தின் வடிவம்**

அமரரின் அன்பான பேச்சு, பார்வையிலே பரிவு, அமைதி, அடக்கம் அவரின் குணத்தின் வடிவம் கடமையும் கட்டுப்பாடும் அவர் வாழ்க்கை உயர்வின் அடித்தளம் சேவையும் தொண்டும் அவரின் பிறவிக் கொடை.

**க. அ. உ. ஆணையாளர் (அபிவிருத்தி)**

**மக்களுடன் உறவாடும் பண்பு**

எமது சமூகத்தின் வளர்ச்சி, கல்வியின் வளர்ச்சி, எமது பாடசாலைகளின் வளர்ச்சி இதற்காக அவர் என்றும் முன்நின்று உழைப்பவர். அவரின் கூட்டுறவு ஊடாக பல் ஊழியரும் கல்வி உலகிற்கு அளப்பரிய சேவை செய்ய வழிவகுத்தது.

**செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்**

**மக்களுடன் உறவாடும் பண்பு**

காந்தியத்தை வெளிப்படுத்தும் எளிமையான தோற்றம் சலனமற்ற பார்வை. பிரச்சினைகளை சமாளிக்கும் திறன். தூரநோக்குப் பார்வை மக்களுடன் உறவாடும் பண்பு என்பன இவரை ஒரு மக்கள் தலைவனாக உயர்த்தியது. மனிதரில் மாணிக்கமாகிய இவரின் இழப்பு எமது வைத்தியசாலை சமூகத்திற்கு ஒரு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

**Dr.S. சிவராணி,**
**முன்னாள் தெல்லிப்பளை மாவட்ட வைத்திய அதிகாரி**

உங்களை இடையிலே பிரிந்த விதிகண்டு
மயங்கிய நான் அமைதியாய் இருந்திட்டேன்
நீங்களும் என்னை இங்கு தேடிவந்த நட்பின் மகிமை கண்டு
எந்தன் மகிழ்ச்சிக்கு எல்லை விதிப்பேனோ.

# பாராளுமன்றத்தில் மக்கள் உரிமைக்காக ஆற்றிய உரையில்

அமரர் சி. சிவமகாராசா (பா.உ)

கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தின் போது சில வார்த்தைகள் பேசுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் அளித்த உங்களுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவசரகாலச் சட்டம் ஒவ்வொரு மாதமும் நீடிக்கப்படுகின்றது. இது எதற்காக நீடிக்கப்படுகின்றது. அது உண்மையிலேயே பொதுமக்களின் நலனுக்காக நீடிக்கப்படுகின்றதா அல்லது அரசாங்கத்தினுடைய நலனுக்காக நீடிக்கப்படுகின்றதா என்பது பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இன்று இந்த அவசரகாலச் சட்ட நீடிப்புச் சம்பந்தமான விவாதத்தின் போது. பலவிதமான பிரச்சனைகள் பற்றிப் பேசப்பட்டதை இங்கு நாங்கள் கேட்கக்கூடியதாக இருந்தது. நமது நாட்டிலே பல ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த யுத்தத்திற்கு ஒரு முடிவு காணவேண்டும். இந்த யுத்தத்தினால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து கொண்டு போகின்றது. இந்த நாட்டுச் சமுதாயம் சிங்கள சமுதாயமாக இருந்தார். தமிழ் சமுதாயமாக இருந்தாலும் சரி அழிந்து கொணடு போகின்றது. எனவே இந்த அழிவுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். இதற்கு ஒரு தீர்வுகாண வேண்டும். விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் தன்னிச்சையாகப் போர் நிறுத்தத்தை அறிவித்திருக் கின்றார். அந்தப்போர் நிறுத்தத்தை அரசாங்கம் சாதகமான முறையிலே அணுகவேண்டும். இதுவரை காலமும் போர் நிறுத்தம் செய்து அல்லது பேச்சுவார்த்தை நடத்தி அதிலே வெற்றி காணவில்லை என்பதற்காக தற்போதைய புலிகள் இயக்கத்தினரின் போர் நிறுத்தத்தை அரசாங்கம் சந்தேகத்துடன் நோக்கக்கூடாது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக இதுவரை காலமும் எத்தனையோ முறை தமிழ்த் தலைவர்கள் அரசாங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றார்கள். ஆனால் அந்த எந்த பேச்சுவார்த்தையும் வெற்றி பெறவில்லை. இனப் பிரச்சனைத் தீர்வில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இப்பொழுது அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலே மூன்றாம் தரப்பினர் வருகை தந்திருக்கின்றார்கள். எனக்கு முன்பு பேசிய எங்களுடைய கட்சித் தலைவர் எடுத்துச் சொன்னது போல நோர்வே நாட்டுப் பிரதிநிதியின்

அனுசரணையோடு புலிகள் பிரகடனப்படுத்தியுள்ள யுத்த நிறுத்தத்தை நல்லமுறையில் பயன்படுத்த வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமையாகும்.

இன்று இந்த நாட்டிலே நிகழ்கின்ற நிகழ்வுகளை நீங்கள் ஒவ்வொன்றாக எடுத்துப் பாருங்கள். ஒவ்வொரு மாதமும் நாட்டிலே எத்தனையோ அநியாயக் கொலைகள் இடம் பெறுகின்றன. எனக்கு முன்பு இங்கு பேசிய கௌரவ விநாயகமூர்த்தி அவர்கள் இறுதியாக யாழ்ப்பாணம் மிருசுவிலிலே இடம்பெற்ற எட்டுக் கொலைகள் பற்றி எடுத்துக் கூறினார்.

அதுமட்டுமா? இன்று சிறைச்சாலைகளில் இருக்கின்ற இளைஞர்கள் கொலை செய்யப்படுகின்றார்கள். செம்மணியில் நடைபெற்ற கொலைகளுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? விசாரணையின் முடிவு என்ன? அதைவிட பிந்துனுவெலவில் நடைபெற்ற படுகொலைகள் பற்றிய விசாரணை செய்ய நீதி விசாரணைக்குழு நியமிக்கப்பட்டதா, இல்லை தமிழ் இளைஞர்கள் எந்தவித விசாரணையுமின்றி ஆண்டுக்கணக்காகச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களை விசாரிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? குற்றமற்றவர்களைச் சிறையில் அடைப்பது அநீதியான செயல். ஒன்றில் விசாரணையை நடத்தி, குற்றமிருப்பின் அவர்களை தண்டிக்க வேண்டும். இல்லையேல் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இப்படியான நிகழ்வுகளெல்லாம் நடைபெறுவதற்குக் காரணம் என்ன? இந்த அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுவதுதான் இதற்கு முழுமையான காரணம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

கதிர்காமக் கந்தன் ஆலயம் சம்பந்தமான நிகழ்வுகள் சில இங்கே எடுத்துக் காட்டப்பட்டன. அதேபோல் யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் இருக்கின்றது. கார்த்திகை மாதத்தில் வருகின்ற கார்த்திகைத் திருநாள் சைவ மக்களுக்கு ஒரு விசேடமான புனித நாள், அன்றைய தினம் அந்த மாவிட்டபுரம் கோவிலுக்குச் சென்று வழிபடுவதற்கு மக்களுக்கு அனுமதியளிக்கப்படவில்லை. அந்த மக்கள் அன்றைய தினம் இராணுவக் காவலரண் முன்னிலையில் வைத்துத் திருப்பியனுப்பப்பட்டார்கள் இது சைவ மக்களை எவ்வளவு புண்படுத்துகின்ற ஒரு நிகழ்வென்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். கார்த்திகைத் திருநாள் ஒரு போயா தினத்திலேயே வருகின்றது. அந்த போயா தினம் பௌத்தர்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதுபோல் அத்தினம் சைவ மக்களுக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அன்றைய தினத்தில் ஆலயத்திற்குச் சென்று வழிபடுவது ஒரு பாரம்பரியம். அந்தப் பாரம்பரிய வழிபாட்டை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இப்படி அனுமதி மறுக்கப்பட்டுத் திரும்பிச் சென்றவர்களின் மனநிலை எவ்வாறிருந்திருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

ஆகவே நான் மீண்டும் கேட்டுக் கொள்வது என்னவென்றால் இந்த யுத்தத்திற்கு ஒரு முடிவு கொண்டுவர வேண்டும் என்பதைத்தான். அதற்கு விடுதலைப் புலிகளுடன் பேசித்தான் ஆகவேண்டுமென்பதை பெரும்பாலான எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றார்கள். ஆனால் மூத்த அமைச்சர்கள் சிலர் கூட இன்று வீராவேசம் நிறைந்த பேச்சுக்களைப் பேசுகின்றார்கள். உண்மையிலேயே விடுதலைப் புலிகளினால் பிரகடனப்படுத்தப்பட்ட யுத்த நிறுத்தத்தை எவ்வாறு அணுக வேண்டுமென்பதைச் சிந்தித்துப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியவர்கள் இவ்வாறு உணர்ச்சி வசப்பட்டு "யுத்தமும் நடக்கட்டும்" பேச்சும் நடக்கட்டும் தீர்வும் வரும்" என்று சொல்வது யதார்த்தமான பேச்சுத்தானா? அல்லது தீர்வொன்று ஏற்படக்கூடிய நிலை

தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நமது நாட்டில் நடைபெறுகின்ற ஒவ்வோர் அநியாய நிகழ்வுகளுக்கும் இந்த அவசரகாலச் சட்டம்தான் துணையாக இருக்கின்றது. ஆகவேதான் இந்தச் சட்ட நீடிப்பை தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நாங்கள் எதிர்த்து வருகின்றோம்.

இதைவிட இந்த யுத்த சூழ்நிலையில் எங்களுடைய மாவட்ட மக்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணத்தைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. யுத்தம் தொடங்கிய காலம் தொடக்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற அந்த நிவாரணக் கொடுப்பனவானது இந்த யுத்தம் முடியும்வரை வழங்கப்பட வேண்டும். உண்மையிலேயே அந்த நிவாரணமின்றேல் மக்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்களென்பதைச் சிந்திக்க வேண்டும். 1978/88ஆம் ஆண்டுகளிலிருந்து இந்த நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிவாரணமின்றி மக்கள் தங்களுடைய வாழ்க்கைநடத்த முடியாத நிலையே அங்கு இருக்கின்றது ஏனென்றால் அங்கு கடலுக்குச் சென்று மீன் பிடித்து வருமானம் பெறமுடியாது விவசாயம் செய்து வருமானம் ஈட்டமுடியாது தொழிற்சாலைகள் இயங்கவில்லை. சீமெந்து தொழிற்சாலை லங்கா சீமென்நது லிமிற்றரைப் போன்ற நிறுவனங்களில் வேலை செய்த தொழிலாளர்கள் தங்களுடைய ஊதியத்தைப் பெற முடியாமல் கஷ்டப்படுகின்றார்கள் இவ்வாறு உழைப்பின்றிக் கஷ்டப்படுகின்ற மக்களுடைய வாழ்க்கையை கொண்டு நடத்த வழங்கப்பட்ட நிவாரணத்தைக் கூட நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுவது வருந்தத்தக்க விடயமாகும்.

இந்த நேரத்தில் நான் நீண்ட உரையொன்றை ஆற்ற எண்ணவில்லை. இன்னும் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டு எனது பேச்சை முடிக்க எண்ணுகின்றேன். வலிகாமம் வடக்குப் பகுதி கடந்த பத்து - பன்னிரண்டு வருடங்களாக மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்படாத ஒரு பகுதியாக இருக்கின்றது. அந்தப் பகுதிகளிலிருந்த மக்கள் தங்கள் இருப்பிடங்களில் வாழ முடியாமல் அவற்றை இழந்து கஷ்டப்படுகின்றார்கள். அவர்களை மீளவும் அங்கு குடிேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சென்ற ஆண்டு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியை அங்கே மீண்டும் இயங்கச் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அனுமதி வழங்கப்பட்ட காலத்திலிருந்து அந்தச் சூழலிலே இருக்கின்ற மீண்டும் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமென்று கூறப்பட்டது. ஆனால் இன்றுவரையும் அந்த மக்கள் அங்கு சென்று குடியேற அனுமதிக்கப்படவில்லை. அந்த கல்லூரிக்கு நேரடியாகச் செல்லமுடியாது. சுற்றித்தான் செல்ல வேண்டும். மழைக்காலத்தில் தூர இடங்களிலிருந்து மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் அந்தக் கல்லூரிக்குச் செல்கிறார்கள். அந்த கல்லூரியில் இரவுக் காவலாளி கடமையாற்ற முடியாது. அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இப்படியான கஷ்டங்களையெல்லாம் எமது மக்கள் சுமந்து கொண்டிருக்கிறார்கள் இதற்குத் தீர்வு காணவேண்டுமென்றால் யுத்தத்துக்கு முடிவு காணவேண்டும். யுத்தத்துக்கு முடிவு காண்பதாக இருந்தால் அது பேச்சுவார்த்தை மூலமே சாத்தியமாகும். ஆகவே இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். அதற்கு அரசாங்கம் முன்னின்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு அரசாங்கம் இதற்கு முன்னிற்கத் தவறினால் இந்த நாட்டில் சமாதானம் ஏற்படுவதை அரசாங்கம் தான் விரும்பவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டும் என்று கூறி விடை பெறுகின்றேன்.

# நமது ஈழநாடு பத்திரிகையின் ஆண்டு விழாவின் போது...





நண்பர் பொன்.கணேசமூர்த்தி பேசும் போது...




நமது ஈழநாடு பத்திரிகை 1ஆம் ஆண்டு நிறைவில்..




நமது ஈழநாடு பத்திரிகை 2ஆம் ஆண்டு நிறைவில்...



# சிவமகாராசாவின் இலட்சியத்தையும் கொள்கைகளையும் விரும்பாதவர்களே அவரைச் சுட்டுக் கொலை செய்தனர்.

சிவமகாராசாவின் இலட்சியத்தினையும் கொள்ளைகளையும் விரும்பாதவர்களே அவரைச் சுட்டுக் கொன்றனர். சிவமகாராசா ஒரு போதும் வன்முறைகளைத் தூண்டவில்லை துப்பாக்கி மீதும் அவர் விசுவாசம் கொள்ளவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி.மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி.யான அமரர் சிவமகாராசா மீதான அனுதாபப் பிரேரணையில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது

தந்தை செல்வநாயகத்தின் அரசியல் பாசறையில் இளைஞர்களாக நானும் சிவமகாராசாவும் இணைந்து அரசியல் பயணத்தை ஆரம்பித்தோம். பல சமூக சேவைகளைச் செய்து வந்தோம். 1981ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியுடன் இணைந்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டோம். சிவமகாராஜா சமூக சேவைகளில் ஆர்வம் காட்டியதால் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரானார்.

வன்முறைகள் நிறைந்த காலகட்டத்தில் , ஈரோஸ்'டன் இணைந்து சிவமகாராசா பாராளுமன்றம் வந்தார். தமிழ் மக்களின் விடுதலை உரிமைக்காக அவர் போராடினார். 2004ஆம் ஆண்டு எமது கட்சியில் இணைந்து அவர் போட்டியிட்ட போதும் துரதிஷ்டவசமாக அவர் வெற்றி பெறவில்லை. கோபம் கொள்ளாத அவர் அன்பைச் செலுத்துவதில் ஒரு போதும் பின்நின்றதில்லை.

மக்களுக்கு அர்ப்பணிப்பு மிக்க தொண்டாற்றினார். எமக்கெல்லாம் வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் இருந்து அரவணைத்துச் சென்றவர். அவர் மட்டுமல்ல அவரின் பெற்றோர், சகோதர சகோதரிகள்

கூட இன உணர்வும் விடுதலை வேட்கையும் கொண்டவர்கள். எமது பகுதி அழிக்கப்பட்ட போது நானும் சிவமகாராசாவும் அகதிகளாக வெளியேறியவர்கள்

எமது மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர வேண்டுமென்பதற்காக அவர் பல போராட்டங்களை முன்னின்று நடத்தியவர். ஆனால் அவர் உயிரோடு இருக்கும் போதும் அவரின் வீட்டைக் கூட அவரால் பார்க்க முடியவில்லை. தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்துக்கருகில் உள்ள வீடொன்றில் தான் அவர் இறுதிக் காலத்தில் வாழ்ந்தார். ஆலயத் திருப்பணியுடன் அவர் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

கூட்டுறவுத்துறையில் அதீத ஈடுபாடு கொண்டவர். இதனால் அவர் சிங்களவர்கள் மத்தியில் கூட மதிப்புப் பெற்றவராக விளங்கினார். சிவமகாராசாவின் இலட்சியப்பற்றினை அவரின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாதவர்களால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். சூழ்நிலைகள் காரணமாக அவர் அமிர்தலிங்கத்திடமிருந்து பிரிந்து போட்டியிட்டாலும் பின்னர் எம்முடன் இணைந்து செயற்பட்டவர்.

சிவமகாராசாவுடன் கருத்து வேறுபாடுள் இருந்தாலும் அவரின் இலட்சியத்திலும் கொள்கையிலும் ஒன்றுபட்டவர்களாக நாம் இருந்தோம். இன்று அவரின் பிரிவால் நாம் தவித்துக் கொண்டிருக்கின்றோம். அவரின் இழப்பு எமக்கு ஈடுசெய்ய முடியாது என்றார்.

**மாவை சேனாதிராஜா**

**குறிப்பு:**

**யாழ். தினக்குரல் 21 ஆகஸ்ட் 2010 வெளிவந்தது.**
**பாராளுமன்றில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. மாவை அனுதாபப் பிரேரணையில் உரையாற்றியமை**

உங்கள் சீரிய பணி சிறக்க
நேர்த்தியாய் துணைபுரிந்தேன் - அன்று
இவ்வாறு பாசங்கொண்ட நாம்
மீண்டும் சேரவேண்டுமென்று எண்ணினரோ பாவிகள் -
நான் அறியேன்.

## அரசியலில் வழிகாட்டிய தலைவர்கள்



தந்தை செல்வநாயகம்



அமரர் கு.வன்னியசிங்கம்



அமரர் அ.அமிர்தலிங்கம்



அமரர் எஸ்.தர்மலிங்கம்

2004ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளராக...



# சிவமகாராசாவுக்கு “மாமனிதர் “ விருது

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், நமது ஈழநாடு பத்திரிகையின் நிர்வாக இயக்குநருமான சின்னத்தம்பி சிவமகாராசாவுக்கு தமிழீழகத்தின் அதி உயர் தேசிய விருதான “மாமனிதர் விருது” வழங்கிச் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் மதிப்பளித்துள்ளார். இது தொடர்பில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது

சுயவாழ்வின் சுகபோகங்களைத் துறந்து பொதுநல வாழ்வை இலட்சியமாக வரித்து அந்த இலட்சியத்துக்காக உறுதியோடு உழைத்த உயர்ந்த மனிதரை இன்று நாம் இழந்து விட்டோம். தமிழின விடுதலைக்காக ஒளிர்ந்த ஒரு இலட்சியச் சுடர் அணைந்து விட்டது. எதிரியின் கோரமான தாக்குதலுக்கு தமிழினப் பற்றாளர் ஒருவர் பலியாகி விட்டார். இந்த இலட்சிய மனிதரை இழந்து எமது தேசம் இன்று ஆறாத்துயரில் மூழ்கிக் கிடக்கிறது.

திரு. சின்னத்தம்பி சிவமகாராசாஅவர்கள் அரசியல் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு நல்ல மனிதர். அசாத்தியமான குணவியல்புகள் கொண்டவர். எளிமையும் இனிமையும் இணைந்த ஒரு இனிய மனிதர். அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்வார். அனைவரையும் கவர்ந்து கொண்ட ஒரு புரட்சிகரமான அரசியல் வாதியும் சமூகசேவையாளருமாவார்.

இவர் ஒரு சிறந்த தேசபக்தர். எமது மக்களையும் மண்ணையும் ஆழமாக நேசித்தவர். தமிழரின் வாழ்வு சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டு சிதைந்து போவதை அவர் அறவே வெறுத்தார். இந்த இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து தமிழ் மக்கள் முற்றாக விடுபட்டு விடுதலை பெற்று, சுதந்திரமாக நிம்மதியாக

கௌரவமாக வாழ்வதையே தனது வாழ்வின் இலட்சியமாக அவர் வரித்துக் கொண்டார். இந்த இலட்சியப் பற்று அவரை எமது விடுதலை இயக்கத்தோடு இறுக்கப்பிணைத்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதன் போராட்ட இலட்சியத்தையும் முழுமையாக நேசித்து தமிழீழ விடுதலை போராட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தார்.

அரசியல், ஆன்மீகம், கூட்டுறவு, ஊடகம் எனப் பல்வேறு பெரும் தளங்களில் இவர் செயற்பட்டார். இவரது செயற்றளம் அகன்று விரிந்திருந்தது. யாழ். மண்ணோடும் அந்த மண்ணில் மக்களோடு ஒன்றியதாக அவரது வாழ்வு சுற்றித் திரிந்தது. எதிரியின் அகோர ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டுள்ள யாழ்.மண்ணில் நின்றவாறு, எதிரியின் அழுத்தங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் அசைந்து கொடுக்காமல் யாழ். மக்களுக்கு என்றுமே காப்பரணாக நின்றார்.

போர் நெருக்கடிமிக்க நாள்களில் அந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் செய்தார். ஆக்கிரமிப்புப் படைகளின் அழிவுகளையும் அட்டூழியங்களையும் நெஞ்சுறுதியுடனும் நேர்மையுடனும் உலகிற்கு வெளிக் கொணர்ந்தார். மக்களிடத்தில் விடுதலை உணர்வையும் தேசப்பற்றையும் தட்டியெழுப்பினார். எல்லாவற்றுக்கும் மேலாக யாழ். மண்ணில் நமது ஈழநாடு என்ற பத்திரிகையை ஆரம்பித்து அப்பத்திரிகையின் நிர்வாக இயக்குநராக இருந்து அந்தப் பத்திரிகையின் இன்றைய வளர்ச்சிக்குப் பங்களித்தார். இவர் ஆரவாரமின்றி அமைதியாக ஆற்றிய மக்கள் பணி அளப்பரியது.

சின்னத்தம்பி சிவமகாராசாவின் அவர்களின் இனப்பற்றுக்கும் விடுதலைப் பற்றுக்கும் மதிப்பளித்து அவரது விடுதலைப் பணியை கௌரவிக்கும் முகமாக மாமனிதர் என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன்.

இலட்சியத்திற்காக வாழ்ந்த "உயர்ந்த மனிதர்களைச் சாவு அழித்து விடுவதில்லை" அவர்கள் எமது தேச ஆன்மாவில் என்றும் நீங்காத நினைவுகளாக காலமெல்லாம் நிலைத்திருப்பார் என்றுள்ளது.

**வலம்புரி வியாழக்கிழமை 24.08.2006ல் வெளிவந்தது**

# பாராளுமன்றில் அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அமரர் சிவமகாராசா மீதான அனுதாபப் பிரேரணையில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது அமரர் சிவமகாராசா யாழ். மாவட்ட மக்களின் வாக்குகளினால் இச்சபைக்கு இரு தடவைகள் தெரிவானார். அதன் மூலம் தமிழ் மக்களுக்குப் பல்வேறு சேவைகளைச் செய்துள்ளார். அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அமிர்தலிங்கத்தின் பிரத்தியேகச் செயலாளராகவும் செயற்பட்டார்.

இதன் பின்னர் ஈரோஸ் அமைப்பின் உறுப்பினரான சிவமகாராசா பாராளுமன்றத்திற்குத் தெரிவாகவில்லை. எனினும் ஈரோஸ் அமைப்பில் வெற்றியீட்டிய மற்றுமொருவரின் இராஜினாமாவையடுத்து சிவமகாராஜா பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். பிரதேச மக்களின் அபிவிருத்திக்காகப் பல்வேறு சேவைகளைத் செய்த சிவமகாராசா பின்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து தமிழ் மக்களுக்காகச் சேவையாற்றினார். 2001, 2004 ஆம் ஆண்டு தேர்தல்களில் போட்டியிட்ட போதும் வெற்றியீட்டாத அவர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டு வந்தார். தமிழ் மக்களின் விடுதலைக்காக என்று கூறிப் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்ட புலிகள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட எந்தவொரு நிகழ்வுகளிலும் அவர் ஈடுபட்டதில்லை. பிழைகளை உணர்ந்து சரியான வழியில் செயற்பட்டவர் அதனூடாக தமிழ் மக்களுக்குச் சேவையாற்றினார்.

சரியான வழியில் சென்ற அவரைப் பயங்கரவாதிகள் 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சுட்டுக் கொன்று விட்டனர். இவ்வாறான செயற்பாடுகள் ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட சவாலாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றார்.

**அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா**

# சிவமகாராசா கொலைக்கு யுனெஸ்கோ கடும் கண்டனம்

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் "நமது ஈழநாடு" பத்திரிகையின் நிர்வாக இயக்குநரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவமகாராசா படுகொலை செய்யப்பட்டமையை ஐ.நாவின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பான "யுனெஸ்கோ" கடுமையாகக் கண்டித்திருக்கிறது.

இது தொடர்பாக "யுனெஸ்கோ" விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது

உலகளாவிய ஊடக சுதந்திரத்துக்கான அச்சுறுத்தல் குறித்த பரப்புரைகளை மேற்கொண்டு வரும் "யுனெஸ்கோ" இயக்குநர் இலங்கையில் ஊடகவியலாளர் படுகொலை செய்யப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

"நமது ஈழநாடு" என்ற தமிழ் நாளிதழின் நிர்வாக இயக்குநரான சின்னத்தம்பி சிவமகாராசா கடந்த ஓக்ஸ்ட் 20ஆம் திகதி தெல்லிப் பழையில் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினராகவும் சிவமகாராசா செயற்பட்டார்.

**உதயன் 30.08.2006ல் வெளிவந்தது**

# மூத்த தமிழ் அரசியல்வாதி சிவமகாராசா ஊரடங்கு இரவில் சுட்டுப் படுகொலை

மூத்த தமிழ் அரசியல்வாதியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முதுபெரும் கூட்டுறவாளருமான சின்னத்தம்பி சிவமகாராசா நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு அமுலில் உள்ள நேரத்தில் தெல்லிப்பழையிலுள்ள அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

தெல்லிப்பழை கொல்லங்கலட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட சிவமகாராசா தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்திற்குச் சமீபமாக அவரது தற்காலிக விதிவிடத்தில் வைத்து நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் சுடப்பட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் தெல்லிப்பளை பிரதேச சபையின் நூலகத்தில் பணியாற்றிய இவர், பின்னர் கூட்டுறவுத்துறையில் ஈடுபாடு கொண்டு கூட்டுறவின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார். இறக்கும்போது அவருக்கு வயது 66.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் மூத்த உறுப்பினரான சிவமகாராசா முதலில் 1989 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ஈரோஸ் சார்பில் சுயேட்சைக் குழுவில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார். பின்னர் 2000 ஆம் ஆண்டு நவம்பர் முதல் 2001 டிசெம்பர் வரையான காலப்பகுதியிலும் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தார்.

இறுதியாக நடந்த பொதுத் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாகப் போட்டியிட்ட இவர் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்திருந்தார். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் நமது ஈழநாடு பத்திரிகையை ஆரம்பிப்பதில் முன்னின்று செயற்பட்ட இவர் இறக்கும் வரை அந்தப் பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராகப் பணியாற்றினார்.

யாழ். குடாநாட்டில் கடந்த சில தினங்களாகவே ஊரடங்கு அமுலில் இருக்கிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் சிவமகாராசா தங்கியிருந்த வீட்டுப் பக்கமாக சூட்டுச் சத்தங்கள் கேட்டிருக்கின்றன.

தினமும் காலையில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலுக்கு வழிபாட்டுக்காக வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். சிவமகாராசா நேற்றுக் காலையில் இவர் கோவிலுக்கு வராததையடுத்து இவரது வீட்டுக்குச் சென்று பார்த்தபோது அவர் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார் என்று அயலவர்கள் தெரிவித்தனர்.

வீட்டில் உணவு அருந்திக் கொண்டிருந்த வேளை அவர் இருந்த அறையில் ஜன்னல் வழியாக அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கிறது என்பது விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. சிவமகாராசாவின் நெஞ்சுப் பகுதியில் குண்டு பாய்ந்து காணப்பட்டது.

மல்லாகம் நீதவான் திருமதி சரோஜினி இளங்கோவன் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரணைகள் நடத்தினார். சடலம் தெல்லிப்பளை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு பிரேதப் பரிசோதனையின் பின் நேற்று பகலே உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்குப் பல்வேறு உதவி களையும் செய்துவந்த இவர் அந்த மக்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட வேண்டும் எனக்கோரி நடத்தப்பட்ட பல்வேறு போராட்டங்களில் முன்னிலையில் நின்று செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**உதயன் 22.08.2006ல் வெளியிடப்பட்டது.**

நடையிலே ஒழுங்கு, உடையிலே ஒழுங்கு, உணவிலே ஒழுங்கு, இருப்பிடத்திலே ஒழுங்கு, நட்புக் கொள்வதிலே ஒழுங்கு, பேச்சிலே ஒழுங்கு, எல்லாவற்றிலும் மேலாக வழிபாட்டிலே ஒழுங்கு இப்பெரியாரிடத்திலிருந்து அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டிய பாடமாகும்.

# முன்னாள் எம்.பி. சிவமகாராசா சுட்டுக்கொலை

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் நமது ஈழநாடு பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.சிவமகாராசா நேற்று முன்னிரவு 7.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்திற்குச் சமீபமாக உள்ள அவரது இல்லத்தில் வைத்து இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவர் முன்னாள் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும் வலி. வடக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவரும், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் முன்னாள் தலைவர் போன்ற பதவிகளை அலங்கரித்தவர் என்பது பொது மக்களுக்கு வெளிப்படை. இறுதியாக 2004 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புச் சார்பில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தெய்வ பக்தியும், தேசப் பக்தியும் கண்களாகக் கொண்டு செயலாற்றும் இவர், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்துக்கு தினமும் சென்று வழிபாடாற்றும் சிறந்ததொரு அம்பாள் பக்தருமாவார்.


இவ்வாறு ஆலயத்துக்கு நாட் தவறாது வழிபாடாற்றச் செல்லும் பக்தரான இவர் இன்று ஆலயத்துக்கு வரவில்லையே என்று அங்குள்ளவர்கள் அவரது வீட்டுக்குச் சென்று பார்வையிட்டபோது அவர் இரத்த வெள்ளத்தில் கிடக்க காணப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியத்தையும் தமிழ் மக்களையும் நேசித்த சிறந்ததொரு தேசப்பற்றாளனாக விளங்கிய இவர் தமிழர் அடக்கு முறைகளுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட சகலவிதமான அறவழிப் போராட்டங்களிலும் பங்கு கொண்டிருந்தவர் என்பதோடு, பல போராட்டங்களை முன்னின்று நடத்தியவர் என்பது நினைவு கொள்ளத்தக்க அம்சமாகும்.

மேலும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. தந்தை செல்வநாயகத்தின் வழிகாட்டலில் இளமைக்காலம் தொட்டே அரசியலில் பிரவேசித்த இவர் அவருடன் தோளோடு தோள்நின்று பணியாற்றிய பெருமைக்குரியவருமாவார்.

மேலும் தந்தை செல்வா அறங்காவல் குழு உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் இளைஞர் பேரவைத் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் செயலாளராக இருந்து கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இன்று முற்பகல் சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதவான் திருமதி சரோஜினி இளங்கோவன் மரண விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைக்காக அவரது உடலை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.


**திங்கள் யாழ் தினக்குரல் 21 ஆகஸ்ட் 2006**
**பத்திரிகையில் வெளிவந்தது.**





# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் – 2004.04.02

## யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் – 10



**அன்பிற்கினிய தமிழ்மக்களே...**

- ✻ உலக நாடுகள் உண்மையை உணர...
- ✻ தமிழர்தம் உறுதியையும், வலிமையையும் தரணிக்கு உணர்த்த...
- ✻ விடுதலைப்புலிகளின் கரங்களை உயர்த்த...
- ✻ தமிழர்தம் தேசத்தின் ஒற்றுமையைக் காட்ட
- ✻ தேசத்தில் நிரந்தர அமைதியை நாட்ட
- ✻ விடுதலை நிம்மதி ஒளிச்சுடர் பூக்க...
- ✻ போலியர் பொம்மை முகத்திரை கிழிக்க...
- ✻ ஆளுவோர் ஆணவ ஆணிவேர் அறுக்க...
- ✻ சுதந்திரக் காற்றெங்கள் வாசலில் நிலைக்க...

**எமது தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய**

# திரு.சி.சிவமகாராசா அவர்களை

**இல 8 இன் மேல் புள்ளடியிட்டு ஆதரிப்போம் 8**

| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | ✕ |
|---|---|

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

# பாராளுமன்றப் பொதுத்தேர்தல்


**2001.12.05**

## யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்



தமிழர் விடுதலைக் கூட்டணி
வேட்பாளரான
தெல்லிப்பளை பலநோக்குக்
கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவர்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

## திரு. சி. சிவமகாராசா



# இல 11

| | | |
|---|---|---|
| தமிழர் விடுதலைக் கூட்டணி | (உதயசூரியன் சின்னம்) | X |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| ~~11~~ | 12 | | | | | | | | |

உதயசூரியன் சின்னத்திற்கு நேரே புள்ளடியிட்டும், இலக்கம் 11க்கு மேலே புள்ளடியிட்டும் வெற்றிபெறச் செய்வதுடன் மேலும் விரும்பிய இரு இலக்கத்திற்கு மேல் புள்ளடியிடலாம்.





PRINT@ ANDRA PRINTERS. 021 222 8929